உ

சைதன்னிய சாட்சாத்காரம் 26-2

என்னும்

ஸ்ரீ ரமண தரிசனம்.

மஹர்ஷியின்

சரிதோபதேச தத்துவ விளக்கம்.

இது
திருவண்ணாமலையில் சமாதிகோயில் கொண்டுள்ள
பகவான்
ஸ்ரீ ரமண மஹர்ஷியினது மஹாநிர்வாணத்தின்
ஏழாவதாண்டு
மஹாராதனை மஹோத்சவத்தில்
பிரசுரிக்கப்பெற்றது.

உரிமை:	ஆசிரியர்:	விலை:
ஆசிரியருடையது.	சாது-நடனானந்தர்.	ரூபாய். 1—8—0

முதல் பதிப்பு ஏப்ரல் 1957.

புத்தகம் கிடைக்குமிடம்:

T. N. வெங்கடராமன்,

நிர்வாகத்தலைவர்.

ஸ்ரீ ரமணாசிரமம், திருவண்ணாமலை. N. A.

பதிப்பு:

இராமன் அச்சகம், திண்டிவனம்.

26-2

உ

ஓம்.

நமோ பகவதே ஸ்ரீ ரமணாய:

நூன்முகம்.

"தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா"
—அருணாசல அட்சர மணமாலை.

அருணாசலமெனத் தொன்றுதொட்டு ஆன்றோரால் வழங்கப்பெற்றொளிரும் அகண்டான்ம சொரூபத்தின் 'எல்லையறும் அருளொளி' விளக்கமே தமதியலாகப் பெற்றிலகிய பெருமான் ஸ்ரீ ரமண பகவான்: மோனத்தே-சாந்நித்தியத்தாலேயே – இருந்ததனை இருந்து காட்டிய அப்பரமான்ம சொரூபரின் பார்வை, முறுவல், சொல், நடையாதிய இயக்கமனைத்தும்; ஆசிரயித்தவரது உள்ளத்தே அருளுணர்வைத் தூண்டியவா றிருந்ததென்பது: பக்தர் பலரும் அறிந்தநுபவித்ததேயாம்.

அன்பர்தம் பாக்கியவசத்தால் அருள்வெள்ளமாய் அவ்வப்போது அன்னார்பாற் பொங்கியெழுந்த திருமொழிகளிற் சிற்சிலவே குறித்து வைக்கப்பட்டு வெளியிடப் பெறலாயின. அத்தகைய புனித சன்மார்க்கத் தொண்டின் சிறந்த கருவிகளாயமைந்த பாக்கியவான்களுள்; இந்நூலாசிரியராம் திருமிகு – நடனானந்தர்: குறிப்பிடத் தக்கவராவார். பகவானது அருள் வாக்குகளை யெல்லாம் கூர்மையுடன் அவ்வப்போதே அவ்வவ்வாறே உள்ளத்துள் ஏற்று வெளியிடும் இவர்தம் அறிவாற்றலுக்கு; "ஸ்ரீ ரமண நூற்றிரட்"டில் இடம்பெற்றுள்ள "உபதேச மஞ்சரி" எனும் பகவதுபதேச மொழிகளின் தொகுப்பு நூலொன்றே: போதிய சான்றாகும்.

சம்பாஷணைத் தொகுப்பாய இந்நூலையும் இதன் ஆசிரியரையும் பற்றி ஸ்ரீ பகவானே உவகையுடன் பலகாற் சிறப்பித்துப் பேசியுள்ளதை அன்பர் பலர் அறிவர். இத்தகைய நுண்ணுணர்வுடன் பலகாலம் பகவதுபதேச நெறியின் ஒழுகியதன் விளைவாந் தகைவினராய்; ஸ்ரீ பகவானது இயல், செயல், சொல், நடை முதலிய நற்றிறங்களை யெல்லாம் அடியார் மகிழ நூல் வடிவிற் கனிவுடன் அநுசந்திக்கின்றார் அன்பர் - நடனானந்தர்.

வேதாந்த நூல்களில் அன்னாருக்குள்ள பரந்த பயிற்சியும், எதிலும் உண்மையையே நாடுருவும் அன்னாரின் நல்லியல்பும் இந்நூலைப் பெரிதும் சிறப்பிக்கின்றன. இத்தகைய சிறப்புகள் பலவும் பெற்று: கண்டவர், காணருள், ஸிதப்பிரஜ்ஞை, அறத்தாற்று, சற்பாவம், நிறைமொழி, தேர்வு, தெளிவு, திடம், நிர்வாணம் என்னும் பத்துவகைக் காட்சிகளில்; பரமார்த்த லக்ஷணங்களையெல்லாம் 60 இயல்களாக வகுத்துரைப்பதாய "ஸ்ரீ ரமண தரிசனம்" என்னும் பெயரிய இந்நூல்: விசார சீலர்க்கேயன்றி ஏனையோர்க்கும் புருஷார்த்தத்தைத் தெளிவுற விளக்கிப் பரமானந்தம் நல்கவல்ல சற்போத விளக்காகப் பிரகாசிக்கின்றது.

அன்பர் - நடனானந்தர் தாம் கண்டு கடைத்தேறிய ஸ்ரீ ரமண பகவத் சொரூபத்தை இந்நூல் வாயிலாக அனைவர்க்கும் தரிசனம் செய்விக்கின்றார்.

அறிவொளி ரமணன் அருளடி வாழ்க.

1—4—54,
ஸ்ரீ ரமணாச்ரமம்.

சாது: ஸ்ரீ விசுவநாதர்.

உ
ஓம்
தத் சத்
நமோ ரமணாய:

பதிப்புரை.

"கண்டேனிங் கென்னையுமென் றன்னை நீங்காக்
கருணையொடு நின்றனையுங் கண்டேன்! கண்டேன்!!
விண்டேனென் றெனைப்புறம்பாத் தள்ள வேண்டாம்
விண்டதுமுன் னருட்களிப்பின் வியப்பே யன்றோ!?"

"ஸ்ரீ ரமண தரிசனம்" என்னுஞ் செம்மொழியினைச் செவி மடுப்போர்தம் இதய வெளிகளில், சமீபகாலம் வரையில் அருணாசலத்தின்கண் அருளிறையாக எழுந்தருளியிருந்த பகவான் ஸ்ரீ ரமண ம்ஹர்ஷியின் திவ்விய சொருபம் பிரஸந்நமாகப்பெறல் திண்ணம். இத்தகைய நற்காட்சிகள் தெய்விகம் பொருந்தினவே யாயினும்,

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"

என்பவாதிய நிறைமொழிகள்; எந்தப் பரமார்த்தத்தைச் சொற்குறிப்புகளால் நிதரிசனப்படுத்தக் கூடாத தென்கின்றனவோ:

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்த"

அந்த ஸ்வஸ்வருப உண்மையே இந்நூலின் உட்பொருளென்பதும், அதை விஞ்ஞான வாயிலாகத் தரிசிப்பித்தலே இதன் குறிக்கோளென்பதும், இதைக் கண்ணுறும் விவேகிகட்குத் தெளிவாமென்பதுறுதி. என்றாலும்:

"கல்லாலின் புடையமர்ந்தன் றொருநால் வர்க்குங்
கடவுள்!நீ காட்டுவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபே யன்றோ!"

என்பவாதிய ஆப்த வாக்கியக் கேள்வியுடையார்க்கு, இதைக் கேட்டதுமே:

"என்ன! பரமான்மாவைக் காட்சிப்படுத்துவதா !? சப்தப் பிரமாணத்திலா ?? அது சிந்தையும் மொழியும் செல்லா நிலையதன்றோ !! என்பவாதிய சங்கேதங்கள் தலைப்படக்கூடுமேனும்: இந்நூலின் தொடர்பால் அவை விரைவில் மறைந்தொழிகை நிச்சயம். எவ்வாற்றெனின்:

எங்கும் நிறைந்துள்ள பரமான்மாவே எல்லாருடைய இதயங்களிலும் வியாபித்து உண்மையுணர்வால், தன்னைத்தானே சதா தரிசிப்பித்துக் கொண்டிருக்கையாலும்: இது அனைவர்க்குமே இயற்கையான அநுபூதியாகையாலும்: இந்தப் பரமான்ம தரிசனமே சொரூப தரிசனமாகையாலும்: "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க் காயிரந் திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டோமோ" என்ற ஆன்றோர் சம்பிரதாயத்தைத் தழுவியதாய ஸ்ரீ ரமண தரிசனமென்னுந் திருநாமம் ஸ்வஸ்வரூப தரிசனத்தையே குறிப்பிப்ப தாகையாலும்; உதயாஸ்தமனமின்றி எல்லா அவஸ்தைகளிலும் சச்சித்தாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உண்மைப் பொருளைக் குறிப்படுத்தும் ஸ்ரீ ரமண தரிசனத்தால் ஸ்வஸ்வரூப சாட்சாத்காரம் சித்திக்கப் பெற்றதுமே, அதுகாறும் தன்னைப் பற்றிக்கொண்டிருந்த தேகோகபாவமாதிய அஞ்ஞானங்கள் அறவே அழிகையாலுமென்க.* நிற்க:

தொன்றுதொட்டுப் பெறுதற்கரிய பிரமாதமானதாகப் பிரசித்தம் பெற்றுவரும்,

"தேடிக் கண்டுகொண்டேன்—திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்னும் பரமான்ம தரிசனமாய பேரின்பப் பிராப்தி பாவனையளவிற் சித்திக்கப் பெறுவதுதானே? என்ற சங்கையோடு,

---

* உள்ளுணர்வு மாத்திர சுவாநுபூதியே சாமான்னிய ஞானமாம். இதுவே பரமான்மாவின் சுபாவ நிலை. 'சிவோகம்' 'அகம்பிரம்மாஸ்மி' என்னும் சொரூப பாவனை எதார்த்த விசேஷ ஞானமென்றும்; 'தேகோக' மென்னும் விபரீத பாவனை கற்பித விசேஷ ஞானமென்றும்; அறியத்தக்கனவாம்.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்ற ஆப்த வாக்கியத்தில் நம்பிக்கையுங் கொண்டு; இந்நூலாசிரியரின் ஆன்ம வழிபாட்டுக்கான ஆதரவையே அருந்தவமாகக் கொண்டமையின் பயனாக இத்தெய்வநூலைப் பிரதிசெய்யுந் திருப்பணியி லீடுபட்டு இதன் சொற்களையே யன்றிப் பொருள்களையும் கூர்ந்து நோக்கிக் கொண்டே வருகையில்; இதன் 9-வது காட்சி 50-வது இயலில் வரும்.

"முமுட்சுவை உய்விப்பது விவேக—வைராக்கியங்களே யன்றி: ஞான—மோக்ஷங்கள் அல்ல. ஏற்கனவேயுள்ள ஞான—மோக்ஷங்களை மறைப்பனவாய அகப்புறச் சார்புகளின் நிவிர்த்தியே சன்மார்க்க சாதனங்களின் பயனும்."

என்ற சற்போத விளக்கத்தால் உள்விழி திறப்புற்று, துன்மார்க்கத் துடைப்பையே சன்மார்க்கப் பிடிப்பாகக் கண்டமையா லெய்திய சிந்தைத் தெளிவும் சிவானந்தப் பெருக்குமே: இந்நூலைப் பிரசுரிக்கவும் எளியேனைத் தூண்டின.

இரகசியங்களிலெல்லாம் இரகசியமானதென இதுகாறும் பிரமிக்கப் பெற்று வந்ததாய பிரம்ம வித்தையை மேற்கூறிய பரமார்த்தப் பிரகடனத்தால் பஹிரங்கப்படுத்தி எல்லோரையும் சன்மார்க்கத்தில் பிரவிர்த்திப்பிக்கும் இந்நூல்; பிரகிருதி தத்துவத்தைக்கண்ட விஞ்ஞானக் கண்கொண்டே புருட தத்துவத்தையும் காணத் துடிக்கும் இன்றைய பகுத்தறிவுலகுக்குப் பேருதவியாக விளங்கக் கூடுமென்ற எனதூகம் உண்மையாயின்: அதுவே எனது முயற்சிக்குப் பயனும்.

பாமரரையும் பரமார்த்த வாழ்வுக்குப் பாத்திரராக்கிய பகவத் கீதையேபோல்: சகலரையும் சன்மார்க்கப் பயிற்சிக்குத் தகுதியினராக்கும் ஸ்ரீ ரமண தரிசனமும் நல்லோர்களால் நாளும் போற்றற்குரிதாம்.

உடையா னுயர்பதம் உள்ளத் தோங்குக!

இங்ஙனம்,

1—4—57,
அருணசலம்.

திருஞானசம்பந்தம்.

பொருளடக்கம்.

பக்கம்.

காட்சி 1 கண்டவரியல்.

காட்சி 2 காணருளியல்.

காட்சி 3 ஸ்திதப்பிரஜ்ஞையியல்.

காட்சி 4 அறத்தாற்றியல்.

காட்சி 5 சற்பாவவியல்.


காட்சி 6 நிறைமொழியியல்.

காட்சி 7 தேர்வியல்.

காட்சி 8 தெளிவியல்.

காட்சி 9 நிடவியல்.

காட்சி 10 நிர்வாணவியல்.



பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி.

ஓம்.
நமோ பகவதே ஸ்ரீ ரமணாய:

சிறப்புப்பாயிரம்.

ஸ்ரீ ரமணாசிரம நிவாஸ ஸ்ரீ முகவைக்கண்ண முருகனார்
இயற்றியவை.

நேரிசை வெண்பா.

வித்தகமெய்ஞ் ஞான விபூதியா லெம்மனோர்
எத்தனகர்த் தத்துவமா லெற்றியே—இத்தரையில்
செய்வன செய்து முடித்தோராத் தேற்றியசீர்
ஐயன் குருரமணன் ஆம். 1

ஆண்டகுரு நாத னருட்போ தனைவாழ்க்கை
காண்டலரு மோனக் கடவுளியல்—பூண்டவருட்
காதலோர் புத்திக் கலக்கமறத் தேர்ந்துசற்
போதரா வாழ்தற் பொருட்டு. 2

தநுகரணம் பற்றிச் சரிக்குமகங் கார
மனமயக்க வாழ்க்கையற மாற்றும்—கனரமணன்
தத்துவ போத தரிசனம் சாற்றினான்
புத்த நடனப் புமான். 3

சொருபத் தியான சுடரொளியா வோங்குங்
குருபத்தி யானவருள் கொண்டு—துருவி
ஒடுக்கமுற் றாழ்ந்தவுளத் தூர்மெய் யுணர்வால்
அடக்கமுற் றான்றனிட்டை யான். 4

பரம்பொருளே பேணும் பரபத்தி யான
தருமங் கடைப்பிடித்த சான்றோன்—கருமம்
பிறிதொன்று செய்கடனாப் பேணாத போத
நெறிநின்ற நெஞ்சத் தவன். 5

அளிதருமெய் யன்பா லகில குருவாய்
இளிவரல்சேர் மோகமறக் கெம்மான்—ஒளிசேர்
திருவாய் மொழியைத் தெவிட்டா வமுத
வுருவாவுட் கொள்ளு முலகு. 6

ஓம்.

நமோ ரமணுய:

ஸ்ரீ ரமண தரிசனம்.

பாயிரம்.

எண்சீர் விருத்தம்.

மான்கொண்டே மான்கவரும் மரபிற் ருனேர்
மாநுடனுய்த் தோன்றியொரு மௌனப் பார்வை
தான்கொண்டே யுணர்வாக்கித் தமியேற் கொண்ட
தவரமணன் சுயவடிவைத் தரிசித் தேனே. 1

கண்டேனு னற்றவிடங் காணுந் தேவைக்
காண்குறுமென் னுருவாவே கண்டேன் கண்டேன்
பண்டேதொட் டாணவமாய்ப் படர்ந்த தேகப்
பற்றிழப்பே யன்னவற்காண் பரிச தாமே. 2

நேரிசை வெண்பா.

விண்ணெலாங் கொண்டுள் விரியிதய விண்காணுக்
கண்ணெலாம் மெய்ஞ்ஞானக் கண்ணுமோ—உண்ணிலையாற்
சற்போத மெய்தியுப சாந்தியுறு நெஞ்சம்பின்
தற்போத மாமோ சரித்து. 3

ஒருநினைவு மற்றுள் ளுணர்வா யிருப்பே
பரநினைவென் றெம்மான் பகருந்—திருமொழிக்
கோதக் கடற்றிரைபோ லுற்றுற் றெழிஜீவ
போதத் தவிர்ப்பே பொருள். 4

எவரடிப் பற்று லெனையா னறிந்தே
னவரருட் சார்பே யரணுந்—தவரையருட்
சாதனையிற் கூட்டுந் தகைசா லிறைரமண
போதனையைச் சாற்றற் பொருட்டு. 5

குருவருளே பற்பலவாக் கூறுந்தெய் வங்க
ளருள்பலவு மாமென்ப ரான்றோர்—இருளகல்சீர்
சார்ந்தரம ணேச தரிசனமே பற்பலநூ
லார்ந்தபொரு ளத்தனையு மாம். 6

நூன்மகிமை.

பூன்றமாந் தன்னைப் பொறிபோற் றிகழ்த்துதிறஞ்
சான்றரம ணேச தரிசனந்தா—முன்றவருட்
போத+வின முயக*மை போக்கும் புற*மைதீர்
பூத+வின னேபோற் பொலிந்து. 7

நூற்பயன்.

அண்ணு மலையடிமெய் யாரியனு யெங்கட்
குண்ணுட்டந் தந்தரம ணேத்தமனற்—கண்ணேக்க
முற்றூர்போ லன்னு னுபதேசத் தூன்றுதிறம்
பெற்றூருந் தீர்வார் பிறப்பு. 8

காரா ரகத்தைக் கனவேயும் பற்றவிடந்
தாரா ரமனை தரிசனத்தே—பேராப்
பிரியரா வாரூன் பிரமையற் றுள்ளந்
துரியரா வாழ்வார் சுயத்து. 9

சமர்ப்பணம்.

சொற்குறிகட் கப்பாற் சுடரு மிறைரமண
சற்குருநற் ருட்கே சமர்ப்பணமாம்—கற்பவரை
யூன்றுரவோ ராக்கி யுயர்கதியிற் சேர்க்குதிறஞ்
சான்றரம ணன்றரிச னம். 10

+இனன்—சூரியன். * மை – இருள்.

உ

ஓம்

தத் ஸத்.

ஸ்ரீ ரமண சற்குரு பகவான் சேவடி வாழ்க.

ஸ்ரீ ரமண தரிசனம்.

உபோற்காதம்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" —திருக்குறள்.

"நாமுலகங் காண்டலால் நானாவாஞ் சத்தியுள
வோர்முதலை யொப்ப லொருதலையே"
—உள்ளது நாற்பது.

என்பவாதிய நிறைமொழிகளால் துணியப்பெறும் "முதற் பொருள்" என்பது:

"கற்பனைப் பொருளா—காட்சிப் பொருளா?"
"காட்சிய தாயின்—கண்டவ ருளரா?"
"கண்டன மென்பார்—காட்டற் கியலுமா?"

எனுங் கடவுளைப்பற்றிய விசாரணைகள் பகுத்தறிவுலகந் தோன்றின போதே: அதாவது; வேள்வித்தீ வடிவில் போற்றப்பெறும் தெய்வ தத்துவத்தையும் அதனாற்பெறும் சொர்க்கத்திறத்தையும் ஆராயத் தொடங்கிய உபநிடத காலமுதலே தோன்றினவாய் தொன்று தொட்டே அறிவுலகை மயக்கி வருகின்றனவேனும், மென்மேலும் புதுமையிலேயே நாட்டமுறும் மனிதமனம் தனது மூலத்தை அடைதற்பொருட்டு அனுதிகாலமாகச் செய்துவரும் ஆன்மார்த்த முயற்சிகளில் ஒய்வு கண்டதேயில்லை. இது, கடலின் ஆழத்தைக்காண விழையும் உப்புப்பதுமையின் முயற்சிக்கொப்பாகும். இத்தற்கொலை முயற்சியில் வெற்றி காணும் வரையில் மனதிற்கு உய்வில்லாமையால், அது தானுள்ள வரையில் ஒய்வு காணப்போவதில்லை. இமயத்தின் முடியையும் விண்மீனியல்பையும் சோதிக்கும் முயற்சியில் உயிரையே

தியாகம் செய்யும் மாநுடவுலகம், அதியற்புதமான இத்தூலப் பிரபஞ்சங்களுக்குத் தாயகமான அனந்த சக்திகளுடைய அச்சூக்குமப் பொருளை அறியும் முயற்சியில் எண்ணிறந்த ஜென்மங்களைப் பலியிடுகின்றனவெனின் அது வியப்பாமோ ?

ஆதிபகவனின் அடிமுடிகளைக் கற்பகோடிகாலங் தேடியும் பிரம்ம-விஷ்ணுக்களாலும் காணக்கூடவில்லை யென்னும் அருணாசல தத்துவம்: எத்தனைகோடி ஜென்மங்களைப் பலியிடினும் அகங்கார மமகாரங்களுள்ளவரையில் ஜீவன் தனது உண்மையை உணரமுடியாதென்னும் பாரமார்த்திக ரகசியத்தைப் பற்றியதே போலும்! எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாமோ; எதை அடைந்தால் எல்லாம் அடைந்ததாமோ; அந்த அறிபொருளைத் தானாகவே உணர்வதாய சொரூப சாட்சாத்காரம் அடையாதவரையில் நிலையான நிச்சலானந்தத்திற் கிடமின்மையால்: நிரந்தசத் திருப்திக்கான உபாயங்களைக் காணற்பொருட்டு அநாதிகாலமாக அரும்பாடுபட்டு வரும் அறிவுலகை அருளுணர்வால் உய்விக்கவே பல்வேறு சமய சாத்திரங்களும் சன்மார்க்கத் திறங்களும் தோன்றியவேனும், முற்கூறிய முவ்வகைச் சங்கைகளுள் முன்னிரண்டற்கும் போலப் பின்னதற்குக் கடந்த நூற்றுண்டுக்கு முன்வரையில் உடன்பாடான சமாதானம் கிடைத்ததில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வடநாட்டில் அவதரித்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரே: அர்ச்சுனனையொத்த அதிதீவிர முமுட்சுவான ஸ்ரீ விவேகானந்தரை முன்னிட்டு, அவ்வருங்கேள்விக்கும் தெளிவான ஆதரவளித்து மாநுடவர்க்கத்தை உய்வித்தருளிய மஹாபுருஷராவர்.

நூல்.

காட்சி 1.

கண்டவரியல்.

1. கடவுளைக் கண்டேன் காட்டவும் வல்லேன்.

''கடவுளைக் கண்டேன்! பிரத்தியட்சமாகக் கண்டேன்!! நீ எவ்வளவு நிதரிசனமாக என்னைக் காண்கின்றனையோ அவ்வளவு நிதரிசனமாக நான் கடவுளைக் காண்கின்றேன். உண்மையைக் கண்டவர் காட்டவும் வல்லவர். பிரத்தியட்ச அநுபூதிகளாய இவற்றில் ஐயத்திற்கு இடமில்லை.''

இவையே ஸ்ரீ ராமகிருஷ்ணரது அருட்பிரசாதங்களாகும். இந்த திவ்ய தரிசனங்களால், ஆன்ம சாட்சாத்காரத்தை ஆன்ரோர் அநுக்ரகத்தாற் சாத்தியமாக்கி யருளினர் அப்பெருமான். அதே நூற்றுண்டின் பிற்பகுதியில் தென்னுட்டில் தோன்றி அகிலமெலாம் அருட்கதிர் பரப்பிய ஆன்ம சூரியனும் பகவான் ஸ்ரீ ரமணரோ; முன்னவரினும் ஒரு படி மேலே சென்று:

''கடவுளைக் காணுதவர் எவருமே யில்லை: கடவுள் தரிசனம் இயற்கையானதாகும். சுபாவமான இச் சுவாநுபூதி யுண்மையை உணராமையே அறியாமை. அஞ்ஞானமென்பது உடல்நாட்டமாகிய அகந்தையே யாதலால், அகந்தையின் நிவிருத்தியே கடவுளின் பிராப்தி. தன்னை அறிவது கடவுளை அறிவதாகும். கடவுளை அறிவதென்பது கடவுளாக இருத்தல். சொருபாநுபூதியே பிரம்மாநுபூதி யாதலால் கடவுளும் தானும் இரு வேறல்ல.''*

---

* இருக்கு மியற்கையா லீசஜீ வர்க
ளொருபொரு ளேயாவ ருந்திபற
உபாதி யுணர்வேவே றுந்திபற.

தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்திபற
தானிரண் டற்றதா லுந்திபற.

—உபதேச உந்தியார்

என்று கூறி: மனித சொரூபத்தின் தெய்வத் தன்மையை வெளிப்படுத்தியதன்மூலம் அநாதிகாலமாகச் சுகராதிய ரிஷிபுத்திரர்க்கும் அரிதாய்த் தோன்றிவந்த ஆன்ம சாட்சாத்காரத்தை இயற்கை அநுபவமாகவே* விளக்கி எல்லாரையும் உய்வித்தருளிய ஞான வள்ளலாகப் பிரகாசிக்கலானார்.

2. முதல்குரு வாய்ப்பர மோனங் குறித்தவர்.

மானிடவுலகைக் கடைத்தேற்றத் திருவுளம்பற்றிய மகாதேவர், மானைக்காட்டி மானைப் பிடிக்கும் மனித மரபையே தாமும் பின் பற்றிப் பூண்டருளிய மாநுடக் கோலங்களுள்: ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சொரூபமே முதலாவதாம். அவரே முதல் குருவுமாவர். அன்று தாம் மௌன முத்திரையால் அநுக்கிரகித்தருளிய சுவாநுபூதியாகிய சொரூப ஞானம், இன்று வேதாந்த பாடமும் வாக்கியார்த்த பாவனையுமாக மாறி உலகம் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டு பிரஹ்மஹத்தி தோஷத்தாற் பீடிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, "இடையன் ஆடுகளைத் தேடித் திரிவதைப் போல இறைவனும் ஜீவான்மாக்களைத் தேடிக்கொண்டேயிருக்கிறான்." எனும் பைபிள் வாக்குப்படி தாமே மீண்டும் மஹர்ஷியாக அவதரித்து மௌனமே மஹாவாக்கியப் பொருள் என்பதை சுவாநுபவத்தால் விளக்கியருளினர். இதை பலர் அறியாதிருக்கினும்: அவர் திருவவதாரத்தின் உண்மை அதுவே. "மறுகு வாதனைகள் தீர்ந்த மௌனத்தையன்றி வேறோர் உறுகதி நல்லதில்லை" என்னும் வாசிஷ்டக் கருத்தின்படி மௌன நிலையே மாநுடப் பேறுகச் சதா மௌனக் குறிப்பாற் காட்டி நின்றதோடு அம் மஹாநிதமாகிய பரமார்த்த நிலையை மௌனத்தாலன்றி விவரிக்க வொண்ணாதென்று வாக்காலும் விளக்கியருளினர் பகவான். இவ்வாற்றால்: பிரம்ம சாட்சாத்காரத்தை உண்மைக் குறிப்பால் நிதரிசனப்படுத்தத் திருவவதாரம் செய்த பரமாசிரியருள், ஆதி குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்குப் பின்னவர் ஸ்ரீ ரமணரேயாவர் முன்னவரால் அநுக்கிரகிக்கப் பெற்றவர் நால்வரேயாக: பின்னவர் பல்லாயிரம் பக்தர்கள் சதா தம்மை சூழ்ந்திருக்கப் பெற்றமைக்கான ரகசியங்கள் ஆய்தற்குரியனவாம்.

---

* "ஒல்லையாம் பிரம்மம் நூலால் உற்றது போலே தோன்றும்
எல்லையில் நாமெப் போதும் ஏகமென் றிருந்தி டாயே"

—கைவல்ய நவநீதம்.

3. அகநோக்கும் அருள்வாக்கும்.

மஹர்ஷிகளையும் மாமுனிவரையும்போன்ற மாண்புறுந் தெய்வீக புருஷர்களுக்கே உரிதாகப் பல்லூழிகாலம் பாவிக்கப்பெற்று வந்த பரமபதத்தை இன்று அடுத்தார்க்கெல்லாம் அநாயாசமாக அநுக்ரகித்தருளினர் பகவான். மனிதனின் இயற்கைவடிவை உள்ளுணர்வால் உணர்த்துவதே முன்னோர்கண்ட உபதேச முறையாகும். அம்மரபையே தாமும் பின்பற்றியதோடு, அதனை நுண்ணுணர்வால் உய்த்துணருந் திறமிலார்க்கு சொற்குறிப்பால் விளக்கியருளும் விஞ்ஞான முறையையும் மேற்கொண்டிருந்தமையே எண்ணிறந்த அடியார்கள் அன்னாரைப் பரமாசிரியராகப் பற்றுதற்குக் காரணமாயிற்று.

"பலகாலம் பதநிழலைப் பற்றிநின்றும் பகவான் அநுக்ரகம் பட்டப் பகலாய்ப் பளிச்சிடவில்லையே!" எனக் குறையிரந்து நிற்பார்க்கு மஹர்ஷி அநுக்கிரகிக்கும் பஹிரங்க உபதேசம் இது:—

"பகவான் சதா அநுக்ரகித்துக் கொண்டேதானிருக்கிறார்: உண்மையை இன்மையாகவும் இன்மையை உண்மையாகவும் பாவிப்பது தான் அறியாமை. நீயேதான் 'நான் நான்' என்று இயற்கையாகவே சதா பிரகாசித்துக் கொண்டிருக்கின்றாயே: அந்த உண்மையுணர்வினும் வேறாகவா இருக்கிறார் பகவான்? நீயென்றும் நானென்றும் இரு வேறாகத் தோற்றுவிப்பது உடல்நாட்டந்தானே; உண்ணாட்டத்தால் அதுவே உள்ளுணர்வாகி, உள்ளது ஒன்றேயென்பதை உணருமாயின் பின் நீயெனற்கும் நானெனற்கும் இடம் ஏது? உனது உண்மையை உள்ளவாறுணர்ந்து சும்மாவிருப்பதே குருவநுக்ரகமாகும்."*

மனிதனது இயற்கைவடிவை இவ்வாறு விளக்கியருளி உடனே இமையா நாட்டத்துடன் உண்ணோக்கிச் சும்மாவிருந்து தாம் கூறிய அவ்வுண்மையைக் குறிப்பாற் காட்டியருள்வார் மஹர்ஷி.

4. காணுவ தெங்குங் கடவுட் காட்சியே.

பகவத் சொரூபிகளாகப் போற்றப்பெறும் கிருஷ்ணர், புத்தர், கிறிஸ்து, முகமது போன்ற மஹா புருஷர்களால் படர்க்கையதாக உபதேசிக்கப்பெற்று இதுகாறும் பரோட்சப் பொருளாகப் பாவிக்கப் பெற்றுவந்த பரமான்மாவை: இன்று தன்மையதாகத் தெளிந்துய்யுமாறு பின்வரும் விளக்கங்களால் அபரோக்ஷப் படுத்துகிறார் மஹர்ஷி.

---

* "குருவின்வல் லபவிளக் கத்தாற்
கண்டனம் எனல்வீண் நானுநீ தானுங்
கண்டன பரம்பொருட் பொலிவே
—ஞானவாசிஷ்டம்.

"மனிதன் அறிவின் சொரூபி. தனது இயற்கை நிலையில் அவன் யாதொன்றையும் அறிவதில்லை. என்னையெனின்: உள்ளது ஒன்றே. உண்மையுணர்வே அதற்குச் சொருபம். இதுவே மனிதனது இயற்கை நிலையாதலால், அத்துவிதமும் ப்ரிபூரணமுமான அந்தப் பரவெளியில் இரட்டைக்கோ முட்புடிக்கோ சிறிதும் இடமின்மையா லெண்க.

ஆக, மனிதன் தனது சுயசொருபத்தை இருப்புணர்வு மாத்திர மாகத் தெளிவதுதான் ஆன்ம வித்தை. எல்லையற்றதும் அன்னிய மற்றதுமான ஸ்வஸ்வரூப உணர்வே, ஞானதிருஷ்டியென்றும் ஆன்ம ஞானமென்றும் கூறப்பெறுவது.

பரமான்மா பரிபூரண சொருபியாக வர்ணிக்கப் பெறுதலாலும் அத்துவிதமும் அகண்டமுமே பரிபூரணத்தின் இலக்கணங்களாதலாலும் பரமான்ம நிலையில்: பார்க்கிறவன், பார்வை, பார்க்கப்பெறும் பொருள் ஆகிய திரிபுடித் தோற்றங்கள் கற்பனையாலன்றிப் பரமார்த்தத்தில் இல்லை."

காட்சி 2.

காணருளியல்.

உள்ளதாகிய கடவுளுக்கு அன்னியமாக யாதொரு பொருளுமே இல்லையாயின்: ஜாக்ர—ஸ்வப்பனங்களில், இடம்—பொருளாதிய நாம ரூபப் பிரபஞ்சங்கள் தோற்றமாவதெப்படி ? மற்றும்: எல்லோருக்கும் அநுபவமாயுள்ள பிரத்தியட்சப் பிரபஞ்சம் இன்மைப் பொருளாதலும் அப்பிரத்தியட்சப் பிரஹ்மம் உண்மைப் பொருளாதலும் எவ்வாறு ? எனின்:

5. முதலிற் காண்பது முதல்வன் றனையே.

பார்க்கப்பெறும் பொருள்களுள் எதுவும் அறிவினதல்ல. அறி விப்பதுமல்ல. அறிவே அவற்றை விளக்குவிப்பது. அறிவுருவமோ ஆன்மாவுக்கே உரியது. அது என்றுமுள்ள எங்கும் நிறைந்த இயற்கை யுணர்வாய்த் தனக்குத்தானே சதா பிரகாசித்துக் கொண்டிருப்பதோடு உலகையும் பிரகாசிப்பிக்கையால், சுயஞ்சோதியாகிய ஆன்மப்

"பூரணத்திற் குண்டோதா னேகதேசம் ?"
"பூரண னெனும்பெயர் விரிக்கிலுரை வேறுமுளதோ ?"

—தாயுமானவர்

பிரகாசமே காட்சிகளுக்கெல்லாம் முதற்காட்சியாகும். திரையில் தோன்றும் படக் காட்சிகளைக் காணுமுன் அவற்றைத் தோற்றுவிக்கும்—ஜடப்பிரகாசமே முதலிற் பார்க்கப்பெறுவது போல்: ஜாக்ர—ஸ்வப்பனங்களில் தோன்றும் ஜகக் காட்சிகளுக்கெல்லாம் முதற்காட்சியாக—அவற்றைப் புலப்படுத்தும்—அறிவுப் பிரகாசமே புலனுதல் காண்க.

சூரியப்பிரகாசமும் தீபப்பிரகாசமுமே பொருள்களைப் பிரகாசிப்பிப்பனவாக இருக்க ஆன்மப் பிரகாசமெனல் எங்ஙனம் பொருந்துமெனின்: கண்ணின்றித் தோற்றுவிக்க முடியாத காட்சிகளை ஆன்மப் பிரகாசம் கனவில் தோற்றுவித்தலாலும்; அதுவே அகக்கரணப் புறக்கரணப் பிரகாசங்களுக்கெல்லாம் ஆதாரமாதலாலும்; உள்ளுணர்வாகிய ஆன்மா சுட்டுணர்வாற் காண்பானுகி எதிரும் பொருள்களிற் பிரதிபலித்து அவ்வப்பொருள்களாகத் தன் பிரதிமையையே காண்டலாலும்; பிம்பத்தையன்றிப் பிரதிபிம்பம் இல்லாமைபோலக் காண்பானையன்றிக் காட்சிகளில்லாமையாலும்; 'ஏகம்ஸத் விப்ரா பஹுதாவதந்தி' 'சர்வம் ப்ரஹ்ம மயம் ஜகத்' என்னும் சுருதிகளின் கோஷப்படி: 'உள்ளது ஒன்றே' என்பதும், 'உலகம் அவ்வுண்மையின் சாயையே' என்பதும் தெளிவாதலாலென்க.

6. தெள்ளிய ருருவில் தெய்வத் தன்மை.

பகவான், மஹர்ஷி, அருட்குரு, பரமாசிரியர், அவதாரபுருஷர் எனப் பக்தர்களால் தெய்வமாகவே ஸ்ரீ ரமணர் போற்றப்பெற்றுலும் அவர் தம்மை எப்பொழுதும் பிறர் திருஷ்டிக்குப் பாமரராகவே காட்டிக்கொண்டிருந்தார். மஹர்ஷியின் திருமேனியே திவ்யப் பிரகாசத்தால் அருளுருவாகக் காட்சி தந்து எல்லாருள்ளங்களையும் கவர்ந்து கொண்டிருந்தமையால், அன்னாரின் பகவத் சொருபத்தை நிருபாதிக திருஷ்டியால் உள்ளவாறு தரிசித்தோர் வெகு சிலராகவேயிருக்கக்கூடுமேனும் அவரது சகள தரிசனமே சாந்திக்குப் போதுமானதாயிருந்தது.

சுயசொருபத்தைக் காணப்பெருத பாமரர் மனப்பான்மையினும் பகவான் திருவுளப்பான்மை முற்றிலும் வேறுபட்டதாகும். அவர் தம்முண்மையையே யன்றிப் பிறருண்மையையுந் தெளிவாகத் தெரிந்துகொண்டிருந்தார். அவர் எப்பொழுதும் சர்வாத்ம பாவனையால் ஸ்திதப் பிரக்ஞராகவே விளங்கிக் கொண்டிருந்தமையால், பல்வேறு இயல்புகளையுடைய பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கிடையே தாம் வீற்றிருந்தும், தந்நிலையிற் சிறிதும் மாற்றமின்றி, எல்லோரையும்

தன்மயமாகவே பார்க்கும் சமதிருஷ்டியினராகக் காணப்பெற்ருர். சமதிருஷ்டியே ஆன்மதிருஷ்டியாதலாலும்; மாநுடவுருவில் தெய்வத் தன்மையைக் காட்டுங்குறி அதுவேயாதலாலும்; ஞானிகளின் திவ்ய திருஷ்டிக்கு இலக்கானவர்க்கு, அம்மகான்களின் அகண்ட தன்மய திருஷ்டியான பராகாச வெளியே புகலிடமும் இருப்பிடமுமாகும். "குருவின் பார்வையிற் பட்டோர் மீளமாட்டார்" என்னுந் தந் திரு வாக்கைத் தமது அருட்கண்பட்டோர்க்கெல்லாம் அப்பொழுதே அவ்விடத்தே அநுபவமாக மெய்ப்பித்துவந்தார் பகவான். கங்கை நீர் ஸ்பரிசித்தோரையெல்லாம் பாவனராக்கும் புனிதமுடையதேபோல்: தெய்விக புருஷரின் திவ்ய திருஷ்டியும் தரிசித்தோரையெல்லாம் பவித்திரராக்கும் மஹிமையுடையது. தெள்ளியர், தாம் உருவத்தால் மனிதரேனும் தன்மையால் தெய்வ சொரூபிகளேயென்பதற்கு எல்லா வகையாலும் எடுத்துக் காட்டாக விளங்கினுர் மஹர்ஷி.

7. செருக்காலூறுவர் சிலையாயமைவர்.

இரும்பையுந் தங்கமாக்கும் அற்புத சக்தி வாய்ந்த ரசமணியே போல்: தகவிலரையுந் தன்னியராக்கும் சாந்நித்திய சீலரான பகவான், மௌனத்திற் பல்லாண்டுகள் கழித்துச் சிறிது பேசத்தொடங்கியதும் இனிப்பை ஈக்கள் மொய்ப்பதுபோல் அறிவுலகம் அவரைச் சூழத் தலைப்பட்டது. வேதம் பயில்வதுபோல், வேதாந்தத்திற் சிறிது பயின்று தம்மைத் தாமே பிரம்மமெனப் பிரகடனப் படுத்திக் கொண்ட செருக்கரிற் சிலர், குருத்வத்தால் மஹர்ஷிக்கு ஏற்பட்டு வரும் மகோன்னத நிலையைக் காணச் சகியாது அவரைத் தர்க்கத்தால் தலைகுனிவிக்கும் அழுக்காறுடன் சந்நிதிக்கு வருவாரேனும், பகவான் பார்வை பட்டதும் புலியைக் கண்ட பூனையேபோல் உரையுணர் வொடுங்கப்பெற்றுச் சேட்டைகளற்ற உயிர்ச்சிலைகளாகி விடுவர். இங்ஙனம் நெடும்போதமர்ந்திருந்தபின், ஏதோ புத்துணர்ச்சி பெற்றவராய்த் தம் பேதைமைக்கிரங்கி, மன்னித்தருளுமாறு உருக்கத்துடன் பகவானைப் பிரார்த்தித்து நிற்பதும்; அதற்குப் பகவான் கிருபா நோக்குடன் "எல்லாம் அவனாகவே இருக்கும்போது யாரை யார் மன்னிப்பது: தமக்குத் தாமே துரோகம் செய்துகொள்ளாமலிருப்பதே உய்வுக்குப் போதுமானதாகும்" என்று புன்னகையுடன் ஆறுதல் கூறியருள்வதும்: அந்நாட்களில் இடையிடையே நிகழும் ருசிகர சம்பவங்களாக இருந்தன.

ஜகத்குருவாகப் போற்றப்பெறும் ஆதிசங்கரர், தங்காலத்தில் பாண்டித்தியத்தில் பிரபலஸ்தர்களான பல கர்மகாண்டிகளையும் மத வாதிகளையும் தமது அபார ஞானப் பிரபாவத்தால் அடிமைகொண்டு

அத்வைத ஞானத்தில் தம்மை ஒப்பாரும் மிக்காருமின்றித் தனித் தலைவராய் ஸர்வக்ஞபீடம் ஏறியது பிரசித்தம். அன்று சங்கரர்பால் எந்த அருட்சக்தி வாக்காக நின்று ஜகமெங்கும் பிரகாசித்ததோ அந்த அருட்சக்தியே இன்று ஸ்ரீ ரமணர்பால் நோக்காகிப் பார்வை மாத்திரத்தால் பாருலகைப் பவித்திரமாக்கும் பரஞ்சுடராகப் பிறங் கியது. இவ்விருவர்க்கும் கால-தேச-நாம ரூபங்களால் மாத்திரமே யன்றித் தெய்வத்தன்மையாற் சிறிதும் பேதமில்லை.

8. குருவருளின்றிக் கூடாதுண்மை.

கலைமகளின் கடாட்சம் பெற்றவரும், அபார மேதாசக்தி வாய்ந்த சகலாகம பண்டிதரும், மந்திரேசுரரென்றும் காவியகண்ட ரென்றும் பலராலும் போற்றப்பெற்றவரும், சக்தியுபாசனை யோகப் பயிற்சி முதலிய சாதனைகளால் பஞ்சக்கிருத்திய ஆற்றல்களும் பெறக் கூடுமென்ற நம்பிக்கையுடன் பல்லாண்டுகள் கடுமையான விரதங்க ளோடு அருந்தவம் முயன்றவரும், ஆசுகவியும், வாக்குவன்மையால் சதா பல வித்வான்களாற் சூழப்பெற்றிருந்தவரும், தியானத்தில் பல அற்புதக் காட்சிகளைக் காணும் திவ்யதிருஷ்டியினரும், மானிடரெவ ரையும் பரமாசிரியராகக் கொள்வதில்லை யென்னும் பரம வைராக்கியத் தால் பன்னெடுங்காலம் யாரையும் பணியாதிருந்தவருமான ஒரு மஹா புருஷரே; இறுதியில் ஸ்ரீ ரமணரைச் சரணடைந்து தவத்தின் தத்துவத்தை அநுக்ரகிக்கப் பெற்றாரென்றால் மஹர்ஷியிடம் இயல் பாகவே பிரகாசித்துக் கொண்டிருந்த எல்லையற்ற அருட்பிரகாசத்தை யும் அநுக்ரகத் திறத்தையும் உள்ளவாறு அறியவல்லார் யார்? ஸ்ரீ ரமணரை, மஹர்ஷியென்றும் பகவானென்றும் அறிவுலகிற்கு அறி முகப்படுத்தியவர் இம்மஹா புருஷரேயாவர்.

காட்சி 3.

ஸ்திதப்பிரஜ்ஞையியல்.

பகவத்கீதையால் பெரிதும் போற்றப்பெறும் ஸ்திதப் பிரஜ் ஞையை பகவான் இயற்கையாகவே பெற்றிருந்தமையால்—சாந்நித்ய பலத்தாலேயே ஆதித்தனிடமிருந்து அக்கினியைக் கிரகிக்கும் காந்தக் கற்களேபோல்—மஹர்ஷியின் தரிசன பலத்தாலேயே ஆயிரக்கணக் கான பக்தர்கள் ஆன்ம சாட்சாத்கார சித்தராயினர். இது அணுக்கத் தொண்டர் பலரும் அநுபவ பூர்வமாக அறிந்ததேயாம். மஹர்ஷியின் தரிசனத்தால் பாவனமுற்ற இத்தகைய திருக்கூட்டத்துள் அஃறிணை வர்க்கங்களுமுண்டு.

9. பசுபட்சி கட்கும் பரமோப சாந்தம்.

மஹான்களின் கிருபையால் பசுபட்சியாதிய அஃறிணை உயிர்களும் பரமபதம் பெறல் கூடுமென்பதைப் பின்வரும் சம்பவத்தாற் பிரத்யெட்சப் படுத்தியருளினர் பகவான். அதாவது: எப்பொழுதும் ததேகத் தியானராய்த் தானே தானான தன்மய நிலையில் அநுக்ரக மூர்த்தியாய் வீற்றிருந்தருளும் பகவான் ஓர்கால் அத்தகைய நிலையிலிருந்து பஹிர்முகப்பட்டவராய்ப் புன்முறுவலுடன் பக்தர்களை நோக்கி:—

"இலக்ஷ்மி இப்பொழுது என்ன நிலையிலிருக்கிருள் தெரியுமா ?"

என்று திடீர்க்கேள்வியொன்று போட்டார். பகவான்பால் இத்தகைய விநோதத் திருவிளையாடல்களை என்றுங் கண்டிராத பக்தர்கள், எதிர்பாராத இவ்வதிசயக் கேள்வியால் திகைப்புற்றவராகி; பகவான் திருமுகத்தையே வியப்புடன் நோக்கினர். பிரசந்ந மூர்த்தியான பகவான், தம்மெதிரே இமையா நாட்டத்துடன் அசையாது நின்றுகொண்டிருக்கும் ஒரு பசுவைக் காட்டி;

"இவள் நிர்விகற்ப சமாதியில் இருக்கிருள்"

என்று கூறித் தமது அபார அநுக்ரக சக்தியைக் குறிப்பாற் புலப்படுத்தி எல்லோரையும் அதிசயிக்கச் செய்தார். இலக்குமி யென்னும் செல்வப் பெயருள்ள இந்தப்பசு ஆசிரம சம்பந்தமுடையது. அது வழக்கம் போல் ஒருநாள் மஹர்ஷியின் தரிசனத்திற்கு வந்து சந்நிதியில் நின்று கொண்டிருக்கையில், பகவான் அதை அன்புடன் நோக்கியவாறே அதன் சென்னியைத் தடவிச் செய்தருளிய அஸ்தமஸ்தக சையோக தீக்ஷையின் மஹிமையால் உடனடியாக வாய்க்கப்பெற்ற கைவல்ய சித்தியே இது.*

---

* அஃறிணைத் தன்மையுடைய பல உயர்திணை உயிர்களைக் காணக்கூடுமேனும் உயர்திணைத் தன்மையுடைய ஒரு அஃறிணை உயிரைக் காண்டல் அரிதாகும். "இவள் எத்தனை ஜென்மங்களில் என்னென்ன தவங்களைச் செய்திருக்கிருளோ! தவக்குறையை முடிக்கத்தான் இப்பொழுது நம்மிடையே வசிக்கின்றனள் போலும்!! என்று பகவானே ஓர்கால் இந்த இலக்குமியின் புனிதத் தன்மையைக் குறிப்பிட்டிருக்கிருர். நிர்வாண சித்திக்குப்பின் இதன் உடல் ஆசிரமத்துக்குள்ளேயே பகவானது பார்வையில் முறைப்படி அடக்கம் செய்யப்பெற்று ஞாபகச் சின்னத்துடன் விளங்குகிறது. பகவானைச் சரணடைந்தவருள் இந்த இலக்குமியைப்போல வேறெவரும்

பகவான் திருவைக்குப் பாத்திரமாகப்பெற்ற நாய்-மயில்-அணில்-காகம் முதலிய வேறு பல அஃறிணை உயிர்களும் உண்டு. அவை ஒவ்வொன்றன் சரித்திரமும் அற்புதமானவையே. இவ்வாறு பகவான் சந்நிதி விசேஷத்தால் அஃறிணை வர்க்கங்களே அந்தக்கரணம் அடங்கப் பெற்றனவென்றால் உயர்திணை உயிர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ ? பகவான் ஸ்ரீ ரமணர் அருணசலத்தின்கண் அருளிறையாக அரை நூற்றாண்டெழுந்தருளியிருந்து அடுத்தோர்க்கெல்லாம் அனந்தம் வகைகளில் அருளியுள்ள அநுக்ரக மஹிமைகள் அளவுக்குட்பட்டனவல்ல.

காட்சி. 4.

அறத்தாற்றியல்.

10. உலகெலாங் கவர்ந்த உத்தமரிருவர்.

அநாதிகாலமுதல் அறிவுலகிற்கு அருள்வாழ்வளித்தற்பொருட்டு அவனியின்கண் அவதரித்த அறவோர்கள் அளவிறந்தவராவர். பேரானந்தப் பெருவாழ்வளிக்குந் திறத்தனவாக அப்பெரியோர்களால் உபதேசிக்கப்பெற்ற அறநெறிகளில் தலையாயவை கரும யோகமும் ஞான யோகமுமாம். நம் தலைமுறையில் தோன்றிய மஹாத்மா காந்தியும் மஹர்ஷி ரமணரும் அவ்வறவோர் மரபைச் சார்ந்த அருள்வர்க்கத்தவரேயாவர். தொன்றுதொட்டு ஆன்றோராற் போற்றப்பட்டுவரும் சத்தியம், அஹிம்சை, அன்பு, தியாகம், தவம் முதலிய தெய்வ சம்பத்துக்களுக்கெல்லாம், உறைவிடங்களாய் சத்துவகுண சொரூபிகளாக விளங்கிய இவ்விருவரும், முறையே இல்லற துறவற நெறிகளால் கருமயோகத்தையும் ஞான யோகத்தையும் கடைப்பிடித்து, அவ்வதற்குரிய இலக்கணங்களின்படியே வாழ்ந்து மக்களைத் தம்தம் நெறிகளில் வழிப்படுத்தினமையை அகிலம் அறியும். புண்ணிய பூமியாம் பரதக்கண்டத்தின் பண்டைப் பண்பாட்டின் திறத்தையும் பாரமார்த்திகச் சிறப்பையும் வாழ்க்கைமூலமே பிரகாசிப்பித்து, இன்றைய

தாம் பெற்ற கைவல்ய சித்தியைப்பற்றிப் பகவான் வாக்காலேயே குறிப்பிடப்பெறும் பேறெய்தியதில்லை. இலக்குமியின் விதேக முத்தியைக் குறிக்கும் பகவான் திருவாக்கு இது:—

"சருவதா ரிப்பேர்கொள் சம்வச் சரத்து
வருமானி யைந்துசனி வார—மருவுமுற்
பக்கத் துவாதசிவி சாகம் பசுவாமி
லக்குமி விமுக்தநா ளாம்."

இந்தியாவைப் பாரின்கண் பிரபலப்படுத்தியவருள் ஸ்ரீ விவேகாநந்தருக்குப் பின்னவர் இவ்விருவருமேயாவர். ஜீவ தத்துவமென்றும்: உபநிடதங்களுக்கெல்லாம் உபநிடதங்களென்றும்: விநோபா முதலிய பேரறிஞர்களாற் சிறப்பிக்கப்பெறும் தியாகத்திற்கும் ஸ்திதப் பிரக்ஞைக்கும் சின்னங்களாகத் திகழ்ந்த இவ்விரு மஹா புருஷர்களும், சந்திர சூரியர்களைப்போன்ற அமரத்வமுடைய உலக ஜோதிகளாவர். "இத்தகைய மஹாபுருஷர் ஒருவர் மனிதவுருவில் தோன்றினர்: இப் பூவுலகில் வாழ்ந்தார்: என்பதை எதிர்கால சந்ததிகள் நம்புவதே சிரமம்" என்று தத்துவ தரிசியான திரு—ஐன்ஸ்டீன் மஹாத்மாவைக் குறித்துச் சொன்ன தீர்க்க தரிசனம் மஹர்ஷிக்கும் பொருந்துவதன்றோ ?

ஸ்ரீ ரமணர் நிர்விசேஷ சின்மாத்திர சொரூபியாய், உண்மைப் பொருளை உண்மையிலிருந்தே உணர்த்தியருளும் இயல்பினராக விளங்கிக்கொண்டிருக்கையிலேயே மாயாவிசிஷ்ட அவதார புருஷராகவும் பலருக்குக் காட்சியளித்திருக்கிறார். "எல்லாருடைய ஹிருதயங்களிலும் நானே உண்மைப் பொருளாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றமையால், எவரெவர் எவ்வெவ்வுருவில் என்னை உபாசிக்கின்றனரோ அவரவர்க்கு அவ்வவ்வுருவிலேயே அநுக்ரகிக்கின்றேன்" என்று கூறியருளிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்; தம் வாக்குப்படியே பக்தர்களின் பாவனைகட்கேற்பப் பல்வேறு வகைகளில் இன்றும் அநுக்ரகிக்கின்றமையை ஆஸ்திக உலகம் அறியும். அங்ஙனமே ஸ்ரீ ரமணரும் முருகப்பெருமானாதிய மூர்த்தி வடிவங்களிலும் சற்குரு வடிவிலும் வெவ்வேறு நிலைகளில் காட்சியளித்திருக்கிறார். அத்தரிசனங்களில் உபதேசமாதிய அநுக்ரகங்களும் செய்திருக்கிறார். காம்யார்த்த சித்தியுந் தந்திருக்கிறார். உதாரணமாக: பகவான் தரிசனார்த்தமாக வந்த மேல்நாட்டு மாதரசி யொருவர்* ஓர் சமயம் கந்தாசிரமத்தைப் பார்க்கத் தனிமையில் மலைக்குச் சென்றார். இடையிலேற்பட்ட நாவறட்சியைத் தவிர்க்கும் வழியறியாது சில நிமிஷம் வருந்தி நிற்கையில்: திடீரென்று மஹர்ஷியின் நினைவு வந்தமையால் "பகவான் சர்வசக்தியுடைய சர்வாத்ம சொரூபியென்பது உண்மையானல்; ஏன் இப்பொழுது இவ்விடத்தில் தோன்றி நம் தாகவிடாயைத் தணித்தருளக் கூடாது?" என்று சிந்திக்கலானார். அவ்வளவுதான்; என்ன ஆச்சரியம்! மறுகணமே பகவான் கமண்டல நீருடன் பிரத்தியட்சமாகி அன்னாரது தாகவிடாயைத் தணித்தருளினார். இது உண்மையேனும்: அதேகணம் ஆசிரமத்தின்கண் பகவான் தமது இருக்கையிலேயே

---

* இவர் ஸ்ரீமதி வான்டா—டைனேவ்ஸ்கா என்னும் பெயரினர். போலந்து தேசத்தவர்.

வழக்கம்போல விற்றிருந்தருளினரென்பதும், தம்மைப்பற்றிய இந்த அற்புத நிகழ்ச்சியைச் சிறிதும் அறியாரென்பதும், ஈண்டு சிந்திக்கற்பாலனவாம். அவ்வம்மையார் கிறிஸ்துமதப் பற்றுடையவர்: அமாநுஷ்ய சக்திகளைக்கொண்டே ஒருவரைக் கிறிஸ்து போன்ற அவதார புருஷராக நம்பும் மனப்பான்மையினர்: பரிசுத்த அன்பும் பக்தியும் வாய்ந்தவர். "பக்திவலையிற் படுவோன் காண்க" என்னும் ஆன்றோர் அநுபவப்படி, பக்தியொன்றையே காணிக்கையாகக் கொள்ளும் பரமகாருண்ய மூர்த்தியான பகவான், அப்புனிதவதியின் பாவனைப் படியே பிரத்தியட்சமானதும் அவரது மனோபீஷ்டத்தை நிறைவேற்றியதும் அற்புதங்களே யென்றாலும், அவற்றால் பகவான் போன்ற பரமார்த்த சித்தர்களுக்குப் பிரயோசனம் ஏதுமில்லை. ஆனால் பல்வேறு மனப்பான்மைகளுடைய பக்தர்களுக்குப் பகவத்பக்தியும் தெய்வ நம்பிக்கையும் வளர்தற்கு அவை பேருதவி புரிவது உண்மை. அணிமாவதி சித்திகட்கும் இத்தகைய அற்புதங்கட்கும் சம்பந்தமில்லை. முன்னது முயற்சியாற் சித்திக்கப்பெற்றுக் கர்த்தவ்யத்தாற் பிரயோகமாவது: வரம்புடையது. பின்னதோ: அந்தரியாமியான அருளிறையின் அநுக்ரக ஆற்றல்களாம்: இது பக்தர்களின் பாவனைப்படியெல்லாம் அவரவர் உண்ணின்றே பிரதிபலிக்குந் தம் பெற்றியதாதலால் வரம்பற்றதாம்,

வேண்டுவார் வேண்டுவதருளும் இஷ்டதெய்வ சொரூபியாக நம்பி ஸ்ரீ ரமணரை அடுத்தோருமுண்டு. ஆனால் கோரிக்கையாளர்களைக் குறித்து "இவ்விடம் சித்தியெதுவும் கிடையாது: எதையேனும் நம்பிக்காத்திருந்து ஏமாற வேண்டாம்" என்று ஆரம்பத்திலேயே எச்சரித்துவிடுவார் பகவான். அவர் சர்வசமயங்களுக்கும் தாயகமான சற்பாவ சுபாவத்தில் சதா திகழ்ந்தமையே, சைவம் வைணவம் பௌத்தம் பார்ஸி இஸ்லாம் கிறிஸ்து முதலிய பல்வேறு சமயிகளும் அவரைச் சரணடைதற்குக் காரணமாயிற்று.

11. இங்கியல் சக்தியே அங்கு மியல்வதாம்.

இந்தியாவின் தற்கால அரசியல் தலைவராக விளங்கும் கனவான் ஸ்ரீ ராஜன் பாபு அவர்கள் மஹாத்மாவின் அனுமதியுடன் ஓர்கால் பகவான் தரிசனத்திற்கு வந்து திரும்புகையில்; மஹர்ஷியை வணங்கி;

"மஹாத்மா(காந்திஜீ) என்னை இங்கு அனுப்பினார்; அன்னாருக்குத் தங்கள் சந்நிதியினின்று நான் கொண்டுபோகக்கூடிய செய்தி ஏதேனுமுண்டா ?"

என்று வினயத்துடன் விண்ணப்பித்து நின்றார். பகவான் கிருபா கடாட்சத்துடன் அன்னாரை நோக்கி:

"ஹிருதயங்களே நேருக்குநேர் பேசிக்கொள்வதால் செய்திக்கு என்ன அவசியமிருக்கிறது? எந்த சக்தி இங்கு இயங்கிக்கொண்டிருக்கிறதோ அதே சக்திதான் அங்கும் இயங்கிக்கொண்டிருக்கிறது."*

என்று தமது இயற்கையான அனன்னிய பாவத்தையே மறுமொழியாக வெளியிட்டருளினார். மஹர்ஷியின் ஹிதயமாகவும் மஹாத்மாவின் ஹிதயமாகவும் விளங்கிக்கொண்டிருந்த அருட்சக்தி ஒன்றேயாயினும் அது இவ்விரு மஹான்களிடத்தும் முறையே நிவிருத்தி பரமாவும் பிரவிருத்தி பரமாவும் இருவேறு நிலைகளிற் பிரகாசித்துக் கொண்டிருந்தமைக்கும்: இவ்விரு மஹா புருஷர்களின் தெய்விகத்தன்மைக்கும்: மஹர்ஷியின் வாய்மொழிகளே அத்தாட்சியன்றோ?

"இரு மஹா புருஷர்கள் இன்று நம்முடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களி லொருவர் எவரையும் ஒரு நிமிடமும் சும்மாவிருக்க அநுமதிப்பதில்லை. மற்றவரோ கணப்போதும் பிரவிருத்திக்க விடுவதில்லை" என்று முறையே மஹாத்மாவின் மமதையற்ற தியாக வாழ்வையும் மஹர்ஷியின் அகந்தையற்ற ஞான வாழ்வையும்பற்றிக் கவியரசியான சரோஜினி தேவியார் வெளியிட்டுள்ள சூத்திர மொழிகள் மஹர்ஷியின் கருத்தை உறுதிப்படுத்தல் காண்க.

சித்த சுத்தியாலாய மஹாத்மாவின் நிர்மல வாழ்க்கையும், நிருபாதியாலாய மஹர்ஷியின் நிட்கள வாழ்க்கையும், முறையே கருமயோக ஞானயோக நெறிகளின் வியாக்கியானங்களேயாம். "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்" என்னும் தமிழ் மறைப்படி; அவ்விரு யோகங்களும் முறைகளாலன்றிப் பயனுல் வேறுபட்டனவல்ல ரிக்வேதகாலமுதல் உலகில் தோன்றிய சன்மார்க்கத் தலைவர்களில் எவரும் இவ்விருவரையும் போலத் தம் ஜீவிய காலத்திலேயே ஜகமுழுதுந் தம்மைப் பின்பற்றப் பெற்றாரில்லை யென்பது ஈண்டு குறிப்பிடற் பாற்றும்.

---

* *"Mahatmaji has sent me here. Is there any message that I may take to him?"* —*Sri Rajendra Prasad.*

"What message is needed When heart speaks to heart? The same shakti that is working here is also working there."
—*Sri Maharshi.*

(Page 37 of "Self realisation")

காட்சி 5.

சற்பாவவியல்.

உலகில் ஆங்காங்குள்ள சில ஞானசிரியர்களைப்போல் குரு ஷிஷ்யபாவம், தீக்ஷாவிதி, சீடாசாரசிட்சை முதலிய சம்பிரதாயங்களை மஹர்ஷி என்றும் பின்பற்றியதில்லை. யாருக்கும் உபதேசித்ததுமில்லை. எனினும் பக்தர் சந்தேகங்களைப் பக்குவத்திற்கேற்பப் பரிகரித்ததுண்டு.

"சொன்னவர்தாம் நிட்டை தொகுத்திரார் நிட்டையிலே
மன்னினவர் போதியார்"

எனுந் தாயுமானவர் துணிவின்படி; பகவான் எப்பொழுதும் தன்மய நிட்டையாகிய சற்பாவத்திலேயே நாட்டமுற்றிருந்தமையால்—இருளின் நிவிருத்திக்கு ஒளியின் பிரஸங்கமே போதுவது போன்று—அஞ்ஞான நிவிருத்திக்கு அவர் தரிசனமே போதுவதாயிற்று.

12. குருவெனத் தம்மைக் குறியா தருளினர்.

கைலாயம்: வைகுண்டம்: அந்த ஆதீனம்: இந்த ஆதீனம்; என்பவாதிய பண்டைப் பரமாசிரியர்களின் பேரால் இந்நாளில் சன் மார்க்கத் துறையில் சிலரால் நடிக்கப்பெற்றுவந்த போலிச் சம்பிரதா யங்களில் எதுவுமின்றியே சதா பல பக்தர்களால் சூழப்பெற்றுப் பரமாசிரியராக விளங்கிய ஸ்ரீ ரமணரைக் குறித்து; ஆரம்ப நாட்களில் வேதாந்த நாடகக் கோஷ்டிகளிடையே பிரஸ்தாபம் எழும்போது:

"ரமணர் யாருக்கு என்ன உபதேசம் செய்கிறார்? சீடாசார போதனையாவது செய்கிறாரா? அவர் யாரையேனும் அடுத்து எதை யேனும் தெரிந்துகொண்டிருந்தால்தானே ஆசாரிய லக்ஷணங்களிற் சிறி தேனும் அவரிடம் அமைந்திருக்கும்; பள்ளிப்பருவத்திலேயே ஏதோ பிரமை கொண்டவரானார்: திடீரென்று கிளம்பி அண்ணாமலைக்கு வந்தார்: மொட்டையடித்துக் கௌபீனதாரியானார். மௌனத்திற் பல்லாண்டுகள் கழித்தார்: அவ்வளவுதானே!!

மற்றைப்படி முறையான சிரவண மனன மாதிய யோக்கிய தாம்சங்கள் அவருக்கு உண்டா? சுரோத்திரிய பிரம்ம நிஷ்டரன்றோ சற்குருவாவர்: இவர் லக்ஷணங்களே இப்படியிருக்க, இவரை அடுத் துள்ள பிரகஸ்பதிகளைப்பற்றிக் கேட்கவா வேண்டும்: அதனால்தான்

ரமணபக்தர்கள் எவ்விதக் கட்டுப்பாடு மற்றவர்களாய்க் காணப்படு கின்றனர் !*
என்றெல்லாம் போலி வேதாந்திகளிற் பலர் பேசிக்கொள்வது வழக்கம். "இப்படி ஒன்று மறியாதவராய் வாக்கு மௌனத்திலேயே காலத்தை வீணிற் கழிக்கின்ருரே இந்த ரமணர்: இவருக்கு நாமாவது ஏதே னும் உபதேசித்து இவரை நல்வழிப்படுத்துவோம்" என்னுந் தயாள சிந்தையுடன் ரமணருக்கு உபதேசிகளாக வந்து ரமணரையே சற்குரு வாகப் பற்றி உய்ந்தனர் சில அதிர்ஷ்ட சாலிகள். உபதேச வித்தை யால் ரமணரை மயக்கித் தாம் பெருமையடையலாமென்ற அவல புத்தியுடன் அவரிடம் வந்து ஏமாற்றத்துடன் திரும்பியோரும் உண்டு.

---

* தன்னைக் குருவெனப் பாவித்தலாகிய தேகான்மபாவமே அஞ்ஞானமாம். குரு சப்தத்திற்கு அஞ்ஞான நிவிருத்தியே பொரு ளாதலால், தனது அஞ்ஞானத்தையே நீக்கிக்கொள்ளாத ஒருவன் பிறரது அஞ்ஞானத்தை நீக்கும் சற்குருவாவது எப்படி ? அகந்தை யின்றிப் பிரஹ்மாகார வடிவப் பிரஜ்ஞான திருஷ்டியுடைய திட ஞானிக்குப் பேதசஹித உபாதிநாட்ட மின்மையால் அவனே ஞாஞ சிரியனுகப் போற்றற்குரியவன். "ஈசனும் ஞானி யிருந்துள விடத்தே யிருப்பது முத்தி" என்னும் பிரம்ம கீதைப்படி: அத்தகைய தற்பர ஜீவன் முக்தனைக் குருவாகப் பாவிப்போர் பிரமரகீட நியாயம்போல் தமது பாவனு பலத்தாலேயே அன்னுனல் அநுக்ரகிக்கப்பெறல் திண்ணம். அதுவே ஆதியான் கண்ட அநுக்ரக நெறியுமாகும். பர மோன வடிவ சுத்த அத்வைத ஞானத்தையே வடிவாகக்கொண்ட ஆதிகுருவின் பரிசுத்தமான பரமார்த்த நெறியைப் புனருத்தாரணம் செய்யவே அருட்குருவாகத் தோன்றிய ஸ்ரீ ரமணர்பால் "கும்பிடு வேண்டிக் குருத்தனம்" செய்வோரின் கற்பனைக் குறிகளெல்லாம் எங்ஙனம் பொருந்தும் ?

பகவான் ஆரம்பமுதல் தம்மைப்பற்றிய எவ்விதக் கர்த்ருத்வ பாவமுமின்றி யிருந்தமையால் அவர் யாருக்கும் எவ்விதக் கட்டுப் பாடும் விதிப்பதில்லை. சாதகர் கடைப்பிடிக்க வேண்டிய சன்மார்க்க நெறிகளையெல்லாம் தாமே மேற்கொண்டு, ஒழுக்கக் குறிப்பாற் கூருது கூறுவதே அன்னுர் சுபாவமாயிருந்தது. எனினும்: எல்லா வகையிலும் தம்மையே நம்பியிருந்தோரின் அதிக்ரமங்களை அவர் ஓர்போதும் அனு மதித்ததில்லை. அத்தகையோரைத் தனிமையில் இன்சொற்களால் திருத்தியருள்வதுண்டு. "ஒழுக்கக் குறைகளைப் பஹிரங்கமாகக் கண்டிப்பதில்லையே" என்று பகவான்பால் குறை கொண்டோரும் உண்டு. அத்தகைய ஒருவரது மனக்குறையை ஓர்கால் குறிப்பா லுணர்ந்த பகவான், அதைக்குறித்த தமது சித்தாந்தத்தை விளக்க முற்பட்டு:

சிவயோகியென்றும் பரஞானியென்றும் தம்மைத்தாமே கூறிக் கொண்டு இறுமாந்திருந்த வாய்ஞானிகள் மேற்கூறியவாறெல்லாம் பாவிக்குமாறு ஏதுமே அறியாதவராய்த் தம்மைக் காட்டிக்கொண் டிருந்த ஸ்ரீ ரமணர், பிற்காலத்தில் பல்லாயிரம் பிரஹ்ம நிஷ்டர்களாற் சூழப்பெற்றவராய் சாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தியாகவே காட்சியளித்த மைக்கான இரகசியங்களை இனி ஆராய்வோம்.

13. குருவே தெய்வம் நிருபா தியினுல்.

"கடவுளும் ஞானியும் ஒன்றே.* உடலை நீக்கித் தன்னை உள் ளுணர்வாய் அறிவதுதான் கடவுளை அறிவதாகும்: கடவுளுணர்வு தன் சொரூபமாகிய உள்ளுணர்வினும் வேறன்று: கடவுளை அறிவதென்பது தன்மயமாக இருப்பதுதான்.※ திட சுவாநுபவியான ஸ்திதப் பிரக்ஞ னும் பரப்பிரஹ்மமும் உபாதி ரஹித உண்மை யுணர்வால் ஒன்றே யாவர்!"

"யார் யாரைத் திருத்துவது? ஆண்டவனன்றோ எல்லோரை யும் திருத்தும் அதிகார முடையவன்? நம்மாற் கூடியதெல்லாம் நம்மையே நாம் திருத்திக்கொள்வது தான்: அதுவே பிறரையுந் திருத்துவதாகும்"

என்று கூறியருளினுர். எல்லோரும் சன்மார்க்கராக வேண்டு மென் பதே பகவான் திருவுளக் குறிப்பேனும், அவர் மற்றவரைப்பற்றிய கர்த்ருத்வ பாவத்தைப் பழக்கமாக்கிக் கொண்டதில்லை. புத்தர், சங்கரர், இராமகிருஷ்ணர் போன்ற மஹான்கள் தாம் இயற்கையில் ப்ரஹ்ம சொரூபிகளாகவே விளங்கப்பெற்றும், பக்தர்கள் நிமித்தம் அருள்வடிவக் கர்த்தவ்யத்தை ஓரளவு மேற்கொண்டிருந்ததாகச் சரித்திரங்கள் பேசுகின்றன. அத்தகைய தூய அகந்தையுமற்ற அதித பரமரிகவே கடைசிவரையில் விளங்கினுர் பகவான்.

* "ஈசனு ஞானியு மமதை யகந்தை
யிகந்ததி னுலொப் பாம்" —கைவல்ய நவநீதம்.

※"உள்ளதல துள்ளவுணர் வுள்ளதோ வுள்ளபொரு
ளுள்ளலற வுள்ளத்தே யுள்ளதா—லுள்ளமெனு
முள்ளபொரு ளுள்ளலெவ னுள்ளத்தே யுள்ளபடி
யுள்ளதே யுள்ள லுணர்" —உள்ளது நாற்பது.

"உள்ள துணர வுணர்வுவே றின்மையி
னுள்ள துணர்வாகு முந்தீபற" —உபதேச உந்தியார்.

என்று சற்குருவின் தத்துவத்தை விளக்கியருளிய பகவான் அவ்வுண்மைக்குத் தாமே நிதர்சனமாக விளங்கினர். அக்கினி வடிவான ஆதித்தன், தன்னை எதிருங் காந்தக் கற்களில் தனது சொரூபாக்கினியைத் தோற்றுவிப்பது போல்: சிற்சோதி வடிவினரான ஸ்ரீ ரமணரும், தமது திவ்ய திருஷ்டியிற்பட்ட உள்ளங்களிலெல்லாம் தமது சொரூபப் பிரகாசத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தார். இது சதா நிஷ்டரின் சந்நிதியில் இயல்பாகவே வாய்க்கும் ஆன்ம சாட்சாத்கார சித்தியாகும்.

14. சந்நிதி மஹிமையும் சாந்தியின் நிறைவும்.

வாயு தான் இயற்கையில் நிர்மல முடையதேனும் சூழ்நிலையால் சுகந்த துர்க்கந்தங்க ளுடையதாவதுபோல்: மனமும் தான் இயற்கையில் சத்துவ சொரூப முடையதேனும் சூழ்நிலையால் சற்குண துர்க்குணங்களுடையதாகிறது. தெய்வ சம்பத்தான சத்துவ குணமே இயற்கையானதென்றும், அசுர சம்பத்துக்களான ரஜோ—தமோ குணங்கள் செயற்கைகளாதலால் மாறக்கூடியன வென்றும், சற்சங்கமே அதற்கு உபாயமென்றும் பெரியோர் கூறுவதன் உண்மையை அநுபவமாகக் கண்ட சிலர், பகவான் சந்நிதியில் இயற்கையாகவே வாய்க்கும் சித்தோபசாந்தம் அயலிடங்களில் அரிதில் முயன்றும் சித்திப்பதில்லையென்றும்; சந்நிதியி லெய்தும் சுவாநுபவம் அயலிடங்களிலும் வாய்க்குமாறு அநுக்ரகிக்க வேண்டுமென்றும் பகவானைப் பிரார்த்திப்பது வழக்கம். பகவானும் அதை ஆமோதிக்கும் பாவனையில்,

"ஆம்: ஆம்: முத்துச்சிப்பி தான் பெற்ற நீரையே முத்தாக்கிக் கொள்வது போல், பக்குவிகள் அருட்குருவின் கிருபா கடாட்சத்தையே அநுக்ரகமாகக் கொண்டு உய்கின்றனர்.* அபக்குவிகளோ சற்குருவின் சந்நிதியில் பலகாலமிருந்தும் கர்ப்பூரஞ் சுமக்குங் கர்த்தபத்தைப் போல் ஏதுமறியாதவராகின்றனர்.※ குருவின் கிருபையிற் பேதமில்லை.

---

*"இனிப்பிறவா முடிவான சன்மத்தே மெய்ஞ்ஞானம்
எளிதிற் றேன்றும்
பனிச்சுடர்வெண் ணித்திலங்கள் உத்தமமாம் மூங்கிலல்லாற்
படுவ துண்டோ?" —ஞான வாசிஷ்டம்.

※"பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்னே
பயனில் பொழுதாக் கழிப்பா ரவரே
நயமில் லறிவி னவர்" —நாலடியார்

எங்கும் ஏகரசமாய்ப் பிரகாசிக்கும் சந்திர சூரிய ஒளிகளைக் கண்ணுடியையும் தண்ணிரையும் போன்ற தூய்மையும் நுண்மையும் வாய்ந்த பதார்த்தங்களேயன்றி ஏனையவை பிரதிபலிக்கப்பெருமை போல், குருவருள் என்றும் யார்மாட்டும் சமமாகவே யிருந்தாலும், மல விக்ஷேப தோஷமுடைய மலின அந்தக்கரணங்கள் அதனுல் சாந்தி பெறுவதில்லை. என்ருலும் குரு சந்நிதியிற் போலவே அயலிடங்களிலும் விஷயத் தொடர்பின்றி யிருக்கப் பழகினல் நாளடைவில் சித்தோபசாந்தம் பெறல் கூடும்."

என்று கூறி அவர்களைச் சாதன சம்பாத்தியத்தில் ஊக்குவித்தல் வழக்கம். பகவான் சந்நிதி மஹிமையில் விசேஷ நம்பிக்கை கொண்டவர் அன்னுர் சமாதி மந்திரத்தில் தியானம் பழகலை இன்றுங் காணலாம்.

15. திரியும் மனமும் திரியா அறிவும்.

கடதீபம் கடோபாதியால் பிரகாசமற்றதாதல்போல் பரமாத்மா தோகோபாதியாற் சுயவுணர்வை இழந்தாலும்—சூரிய சாந்நித்தியத்தால் கட்டவிழப்பெறும் தாமரை போல்—குருவின் பிரஸங்கத்தால் கிரந்தி பேதிக்கப்பெறுகிறது. பரமான்மாவே அயலுணர்வால் மனமாகவும் சுயவுணர்வால் அறிவாகவும் மாறுவதால்: ஞானியும் அஞ்ஞானியும் முறையே மாணிக்கத்தையும் ஸ்படிகத்தையும் போன்று சுபாவத்தால் வேறுபடுகின்றனர். ஸ்படிகம் ஒளியினதேனும் அது தன்னை அடுக்கும் நிறங்களில் மாறுந் தன்மையதாதல்போல்: அஞ்ஞானியும் அறிவினனேனும் தேகபாவத்தால் ஜீவத்தன்மையனுகிருன். இயற்கையொளியை இழவாதிருத்தலோடு எதிரும் நிறங்களையும் தந்நிறமாக்கும் மாணிக்கம்போல்: ஞானி எப்பொழுதும் தனது சுயவுணர்வை யிழவாமையோடு அடுத்தாரையும் தன்மயமாக்கும் சமர்த்தனுகிருன். இவ்வாற்ருல் உள்ளுணர்வே, அசைவால் மனமாகவும் திரத்தால் அறிவாகவும் வியவகரிக்கப் பெறுவதாகிறது.

16. அருளுற வார்வே குருகுல வாசம்.

காற்ருல் அலையுந் தீபவொளியேபோல் விஷயவாசனைகளால் பொறிவாய் சஞ்சரிக்கும் மனம், நிராசையால் நிவாத தீபம்போல் ஸ்திரம் பெறவேண்டும்: அதாவது அறிவுருவில் நிலைபெறவேண்டும். இதற்குக் குருகுலவாசமே சிறந்த சாதனமாகும்: குருகுலவாசமென்பது சிலர் நினைப்பது போல் ஒருடலை மற்ருேருடல் சார்ந்திருப்பதல்ல. சற்குருவின் தோற்றம் சகளப் பிரஹ்மமே யென்ருலும், சாதகன் தன்னை உடல்ளவிற் பாவிப்பது போல் சற்குருவையும் உருவில்

பாவிக்கும் வரையில் தேகோகபாவம் மாருது. மாருதவரையில் எதார்த்த சொரூபம் தோன்ருது: பந்தம் நீங்காது: விடுதலை கிடைக்காது. ஆகவே சற்குருவை நிருபாதிக பரப்பிரஹ்ம சொரூபியாக உபாசிக்கப் பழக வேண்டும். அப்பழக்கமே நாளடைவில் உபாசிக்கும் ஜீவனுகிய தான், உபாசியப்பொருளாகிய சற்குரு சொரூபத்தினும் வேறல்ல என்பது விளங்கும். அதனுல் உபாதி நாட்டம் நீங்கும். ஜீவன் முத்தி சித்திக்கும்.

ஆக, சற்குருவின் உடலிற்போலவே தன்னுடலிலும் சதோதயமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உள்ளுணர்வாகிய பரமான்மாவையே அருட்குருவாகக்கொண்டு அதன் சந்நிதியில் அகநோக்கில்—அதுவாகவே—நிலைபெறல் வேண்டும். இதுவே குருகுலவாசத்தின் உண்மைப்பொருள்.

காட்சி 6.

நிறை மொழி யியல்.

பாமரரிற் பலர் வாழ்க்கை நெறியை லௌகிக மென்றும் வைதிகமென்றும் இருவகைகளில் வகுத்துக்கொண்டு ஒரே விஷயத்தில் இருவேறு கொள்கைகளையும் இருவேறு நடைமுறைகளையும் பின்பற்றுவது எங்கும் பிரசித்தம். உதாரணமாக, ஒரு வியவகாரத்தைக் குறித்து நியாய ஸ்தலத்திலும் வெளியிலும் பொய் சொல்லத் துணிபவர் ஆலயங்களில் அசத்தியங்கூற அஞ்சுவதைக் காண்கிறோம். வியாவகாரிகத் துறையில் தொன்றுதொட்டிருந்துவரும் இத்தகைய அறியாமைகளுக்கெல்லாம் புரட்சிகரமான தமது போதனைகளாலும் செயல்களாலும் முற்றுப்புள்ளி வைத்து மனித வர்க்கத்தின் புற வாழ்க்கையைத் திரிகரணங்களிலும் சுத்தப்படுத்தினுர் காந்திஜி.

மனித வாழ்க்கையின் லட்சியம் ஒன்றே யென்றும் அதையடையும் மார்க்கமும் ஒன்றேயென்றும்; அம்மார்க்கத்தின் முக்கிய அம்சங்களான சத்தியம், நேர்மை, அஹிம்சை, தன்னலத்தியாகம், பிரம்மசரியம், சமூகசேவை முதலியவற்றை அநுஷ்டிப்பதில் உலகியல்—அரசியல்—சன்மார்க்கவியல் என்பவாதிய பாகுபாடுகளுக்குச் சிறிதும் இடமில்லை யென்றும்; வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவை பரிபூரணமாய்க் கடைப்பிடிக்கத் தக்கனவென்றும்; விளக்கிவந்ததோடு தாமே அச்செந்நெறிகளை நடையில் காட்டி அனைவரையும் மாக்கள் நிலையினின்று மக்கள் நிலைக்கு உயர்த்தினுர் அவர். அதைப்போலவே பாரமார்த்திகத் துறையாகிய அகவாழ்வைத் தமது அருள் மொழிகளாலும் புனித வாழ்க்கையாலும் பரிசுத்தப் படுத்தி யருளினுர் மஹர்ஷி.

"இந்து மதம் மகத்தானது. மானிட வாழ்க்கையை எல்லா வகையாலும் தெய்விக வாழ்க்கையாக மாற்றுவது. மனிதான்மாவைப் பரப்பிரம்ம நிலைக்கு உயர்த்துவது. இது இதுகாறும் மலைகளிலும் குகைகளிலும் காடுகளிலும் முடங்கிக் கிடந்தது: ரகசியங்களுக் கெல்லாம் அதி ரகசியமானதாக மறைக்கப்பெற்று வந்தது: பாரமார்த் திக வாழ்க்கையை மேற்கொண்ட வெகு சில முனிவர்களாலும் ரிஷிக ளாலுமே அனுஷ்டிக்கப் பெற்றது. மனித வர்க்கத்துக்கெல்லாம் பொதுச் சொத்தான இந்த ஆன்ம வித்தையை இனியும் மூடிவைத்தல் தகாது. இது எங்கும் எல்லோராலும் பிறப்புரிமையாக அநுஷ்டிக்கப் படவேண்டிய காலம் வந்துவிட்டமையால் இனிமேல் இந்த அத் வைதக் கொள்கை அரசன் மாளிகையிலும் ஆண்டியின் குடிசையிலும் பாமரன் இல்லத்திலும் பேதமின்றி வாழ்க்கையின் லட்சியமாகப் பின் பற்றப்பெறல் வேண்டும். கல்லாமை, கீழ்க்குலம், பெண்மை முதலிய எதுவும் இதற்குத் தடையாக முடியாது."

என்ற ஸ்ரீ விவேகானந்தரது அன்றைய ஞான முழக்கம்; இன்று, ஸ்ரீ ரமணரது ஐம்பது வருட மோன வாழ்வில் எங்கும் எதிரொலித்து அடுத்தாரையெல்லாம் அறிவுருவாக மிளிர்வித்தது. புருடார்த்த நெறியைப் பாரமார்த்திக மென்றும்—வியாவகாரிக மென்றும்—பிராதி பாசிகமென்றும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத மூன்றுவித அதிகரணங்களாக வகுத்துக்கொண்டு, ஒரே பொருளுக்கு வெவ்வேறு நிலையில் வேவ்வேறு முடிவு கூறலைப் பண்டிதரில் பலர் நூல் மரபாகக் கொண்டிருக்கின்றனர். சத்தியமொன்றே உண்மை — வாய்மை — மெய்ம்மையென முக்கரணங்களாலும் அனுஷ்டிக்கப் பெறுவது போலவே, பரமார்த்த நெறியும் மனம்—வாக்கு—காயம் ஆகிய மூன்று லும் ஒரே தன்மையிற் கடைப்பிடிக்கத் தக்கதாகுமென்றும்; அத்தி யாத்ம வாழ்வில் கற்பதற்கும் நிற்பதற்கும் பேதம் கூடாதென்றும்; சாதகனது நினைவு–சொல்–செயல் ஆகிய மூன்றும் ஒரே லட்சியத்தைத் தழுவி நிற்கவேண்டுமென்றும்; படிப்பு அத்துவிதத்தையும் நிருபா திகத்தையும் பற்றினவாகவும், பழக்கம் துவிதத்தையும் உபாதியை யும் பற்றினவாகவும் இருத்தல் கூடாதென்றும்; கருவி கரணங்க ளனைத்தையும் ஏககாலத்தில் ஆன்மாவுக்கு முற்றுக நிவேதனம் செய்துவிட்டு எங்கும் எப்பொழுதும் உள்ளுணர்வாகவே பிரகாசிக்கப் பயிலவேண்டுமென்றும்; வற்புறுத்தி வந்தார் மஹர்ஷி. அன்னார் வார்த்தைகள் எப்பொழுதும் ஒரே பொருளைக் குறிப்பனவாகவே யிருக்கும். அதுவே முடிந்த சித்தாந்தமாகவு மிருக்கும். அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் அகண்டாகார அத்துவித பாவத்தின் சொரூபங்களாகவே விளங்கின.

"பகவான் திருவுளம் பற்றினால் அவரே எவரையும் கிருதார்த்த ராக்கிவிடக்கூடும்" என்னும் தவறான நம்பிக்கை கொண்டு, யாரும் ஏமாற்றமடையக் கூடாதென்ற காருண்யத்தால் ஸ்ரீ ரமணர் தம் பக்தர்களுக்குப் பிரம்ம சாட்சாத்காரத்திற்கு இன்றியமையாத சாதனமான ஆன்ம சமர்ப்பணத்தின் அவசியத்தையும்; அதனை நிறைவேற்றும் முறைகளையும்; குரு காணிக்கை—இறைபணி—சற்சங்கம் ஆகியவெல்லாம் அகப்பற்றின் தியாகமே என்பதையும்; தினசரி நிகழ்ச்சிகளையே வியாஜமாகக்கொண்டு அடிக்கடி பல்வேறு வகைகளில் விளக்கி வந்திருக்கின்றமைக்குப் பின்வருவன போன்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுகளாகும்.

17. குருபணி நெஞ்சத் தொருநிலைக் குறியாம்.

ஓய்வுகாலத்தை ஆசிரமத்திற் கழிக்கவரும் வெளியூர் பக்தர்களிற் சிலர் ஆசிரம கைங்கரியங்களில் ஈடுபடும் சங்கற்ப முடையவராய்த் தம் நாட்டத்தை அங்குமிங்கும் செலுத்திக் கொண்டிருத்தலையும்; ஏதேனும் சிறு சந்தர்ப்பம் வாய்க்கின் அதிலேயே தமது உடல் பொருள் ஆவிகளை முற்றும் அர்ப்பணம் செய்தார்போல் நாள் முழுவதும் பிரவிர்த்திகளிலேயே மூழ்கிக் கிடப்பதையும்; கடைத்தேறுதற்கு இத்தகைய தொண்டுகளே தமக்குப் போதுமானவை யென்று திருப்தியடைவதையும்: பகவான் கவனிக்க நேர்ந்தால், உடனே அத்தகையினரைக் குறித்து;

"குருபணி யென்ற பெயரால் விவகாரங்களிற் காலத்தைக் கழித்துப் பின்னர் ஏமாந்து போகாதீர்கள். அத்தகையினர் இறுதிக் காலத்தில் தம் அறியாமைக்காக வருந்தவேண்டி வரும். சற்சங்கத்தின் நோக்கத்தைக் கணமும் மறத்தல் கூடாது அயலிடங்களிற் சித்தித்தற்கரிய ஆன்மார்த்தத்தை ஆசிரமவாசம் எளிதில் எய்துவிக்குமென்ற நம்பிக்கையுடன் சொரூப சாட்சாத்காரத்திலேயே சதா ஞாபகமுடையரா யிருத்தல் வேண்டும். அதில் கருத்தில்லாதவர்கள் இவ்விடத்தை விசேஷ ஸ்தானமாகக் கொள்வதில் அர்த்தமில்லை. பக்தர்கள் தமது லட்சிய சித்திக்கான அருள் நெறியில் தலைப்பட்டுத் தமக்குத் தாம் செய்துகொள்ளும் தவத்தொண்டே குருவுக்காற்றும் புனிதத் தொண்டாகும்"*

---

*"துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான
நிட்டனா யிருக்கி லீதே நீசெயு முதவி யாமே"

—கைவல்லியம்.

என்று கூறியருளி மனவொடுக்கத்தாலல்லாமல் வேறெதனுலும் தம்மைத் திருப்தி செய்விக்க முடியாதென்றும்; கரணங்கள் அடங்கப் பெறுவதே தம்மை அடுத்ததன் பயனுமென்றும்; தெளிவாக விளக்கிச் சதா அக நாட்டத்திலேயே இருக்க முயற்சிக்குமாறு அன்னுரைத் தூண்டுவது வழக்கம்.

18. நாட்டமுள் ளடக்கின் நடப்பன நடக்கும்.

நிரந்தர வாசிகளிற் சிலர் யாதாமொரு ஆசிரம காரியத்துக்குத் தம்மைத் தாமே பொறுப்பாளராக்கிக் கொண்டு தம்மிடமுள்ள குறை பாடுகளை உணராதவராய். ''நிஷ்டைக்கு நேரமில்லையே'' என்று ஒவ்வோர்கால் குறைபட்டுக் கொள்வதுண்டு. நிவிர்த்தியை நாடும் அத்தகையினரைக் குறித்து:

''நிஷ்டைக்கு நேரமில்லையா: சும்மாவிருக்க முடியவில்லையா? உம்மால் சும்மாவிருக்க முடிந்தால் இருந்து பாரும்! ஆசிரம காரியங்க ளெல்லாம் எப்படித் தாமே இயல்பாக நடக்கின்றன வென்பதை அப்பொழுது அறிவீர். பிறர் தவத்திற்கு நீர் புரியும் உதவியினும் உமது தவத்திற்கு நீர் பெறும் உதவி உமக்கே ஆச்சரியந் தருவதா யிருக்கும்!!''

என்பன போன்ற ஹாஸ்ய வார்த்தைகளால் அன்னுரது அபக் குவ நிலையை மிகக் கண்ணியமான முறையில் அவ்வப்போது எடுத்துக் காட்டுவது, மஹர்ஷியின் ஹிதோபதேசங்களாக இருக்கும்.

19. உள்ளந் திருந்தலே உண்மைத் தொண்டாம்.

மேலை நாட்டுப் பிரமுக ரொருவர் ஓர்சமயம் ஆசிரமத்துக்கு வெளியே கிடந்த பரிகலங்களைக் கூட்டிக்கொண்டிருந்தார். அதே சமயம் தற்செயலாக அங்கு வந்த பகவான் அவ்வன்பரை நோக்கி; அச்செயலின் நோக்கம் யாதென வினவினுர். அதற்கு அந்தத் தொண்டர்:

''அடியேன் இங்குற்றுப் பலநாள் ஆகிறது. இன்று வரையில் ஆசிரமத்துள் எவ்விதத் தொண்டும் எனக்குக் கிடைக்கவில்லை. அதனுல்தான் — வேறு எவரும் விரும்பாத — இச்சிறு கைங்கரியத்தை யேனும் மேற்கொண்டு கடைத்தேறலா மென்று இப்பணிக்குத் துணிந்தேன்.'' என்று விநயத்துடன் விடையிறுத்தனர். அதனைக் கேட்ட பகவான், கருணையுடன் அன்னுரை நோக்கி;

"கடைத்தேறுதற்கு எச்சிலை சேர்ப்பதுதானு வழி? இந்தத் தவத்தைச் செய்தற்கா சீமையிலிருந்து இங்கு வந்தீர்? "போம், போம்: இத்தகைய கைங்கரியங்கள் செய்தவரையில் போதும்! உள்ளே போய் ஓர் பக்கத்தில் அமர்ந்து — மனதை உண்முகப் படுத்தி — எது கடைத்தேற விரும்புகிறதோ அதைக் கண்டுபிடியும்: உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தும் தொண்டே உயர்ந்த தொண்டாகும். அதுதான் உண்மையில் ஈடேற்றுவிப்பது" என்று தவத்தின் தத்துவத்தை விளக்கியருளினுர்.

குறிப்பு:-

"சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம
பாவன மாரு ரென்று பழமறை முழங்கும்"

—கைவல்லியம்.

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்"

—தாயுமானவர்.

என்பவாதிய வாக்கியங்கள் பெரியோர் சேவைகளைப் பெரிதும் சிறப்பிப்பனவாக இருக்க தொண்டிற் கழியுங்காலம் வியர்த்தமாமெனப் பொருள்படுமாறு பகவான் கூறுவதன் கருத்தென்னை? எனின்;

சத்துக்களுக்குப் பரிவோடியற்றும் பணிகளும் பயனைக் குறித்தனவேயாம். அவற்றின் லட்சியம் பிறவிப்பேறு. அது சற்குரு கடாட்சத்தால் பெறத்தக்கதாம். குருவருளைக் கூட்டுவிப்பது அகத் தவமேயன்றிப் புறப்பணி அல்ல. ஆன்ம வழிபாடே குரு வழிபாடுமாம். சொருபாநு சந்தானமாகிய குரு வழிபாடு எவ்விடத்தும் எச்சமயத்தும் இயற்றற்குரியதாம் அதற்கு வேண்டுவனவெல்லாம் சிரத்தையும் விசுவாசமுமே.

அயலிடங்களில் அரிய முயற்சியாலும் சித்திக்கப்பெருத மெய்யுணர்வை ஒரு மஹான் சந்நிதியில் ஒரு வார்த்தையாலோ ஒரு பார்வையாலோ கணப்போதில் பெறக்கூடுமென்பது உண்மையேனும்: ஒரு கோரிக்கையுடன் ஒரு தெய்வத்தை முன்னிட்டு அருந்தவ முஞற்றுவோன்; அந்தத் தெய்வம் தரிசனமாகும்போதே தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தவறுவானுயின், அவன் தன் பிரமாதத்தால் தவப்பயனை இழந்தவனுதல் போன்றே: பக்தனுகிய ஜீவனை பிரம்மமாகிய தன்னில் இரண்டற ஐக்கியமாக்கி உய்விக்கும் சற்குரு

மூர்த்தியின் கிடைக்கரும் சாங்கித்தியம் கிடைக்கப்பெறும் காலத்திலேயே, அதன் அருமை யுணர்ந்து உய்வடையப் பெருதவரும் அரும் பொழுதை அவலமாக்கியவராவார். ஆகையால் புறக்கரணங்கள் பணியில் ஈடுபட்டிருக்கையிலும் அகக்கரணங்கள் ஆன்மாவில் இயற்கையாக நிலைபெற வேண்டுமென்பதே பகவான் கருத்தாகும்.

சித்த சுத்தியை முன்னிட்டேனும் பஹிர்முகத்திற் சிறிது காலம் ஏகாக்ர சிந்தையுடன் குரு கைங்கரியங்களை மேற்கொள்வது நன்றன்ருே ? எனின்: அதற்கும் தகுதி வேண்டும். அன்பர் பணிக்குத் தம்மை ஆளாக்குமாறு ஆன்ருேர் அருளிறைபால் விண்ணப்பித்தலின் கருத்து உய்த்துணரற்பாற்ரும்.

20. உண்மை யுணர்வே உடையான் பதமாம்

அன்பிற் சிறந்த பக்தை ஒருவர் பகவான் தரிசனர்த்தமாகச் சந்நிதிக்கு வருந்தோறும் நமஸ்காரத்திற்குப்பின் பகவானது திருவடிகளில் தம் கண்களை ஒற்றிக்கொள்வதையும் பெரியோர் சேவையின் நியமங்களில் ஒன்ருகக் கடைப்பிடித்து வந்தார். இத்தினசரி நிகழ்ச்சியை இடையிடையே கவனிக்க நேர்ந்த பகவான், ஓர் நாள் அவ்வம்மையை நோக்கி;

"உனது இதயத்தில் உண்மைப் பொருளாகச் சதா பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரமான்மாவே சற்குருவாவர். அவரது உள்ளுணர்வாகிய (அகம் சொருப விளக்கமாகிய) 'ப்ரஜ்ஞான'மே அருட்பதமாகும். அதன் ஸ்பரிசந்தான் உண்மைப்பேறளிக்க வல்லது. அந்த சற்போதமாய திருவடியின்கண் உனது தற்போதமாய சிதாபாசக் கண்ணைப் பொருந்தச் செய்வதே 'அசி' பதப் பொருளாகிய அடி முடி ஐக்கியமாகும். இடைவிடாது சுபாவத்திற் பற்றக்கூடியதும் அதுவேயாதலால், இனி உன் சுய சொருபமாகிய அவ்வுள்ளுணர்வை உண்முகத்திற் பற்றிக்கொள். பந்த நிவிர்த்திக்கும் பரமார்த்தப் பிராப்திக்கும் அதுவே தக்க நெறியாகும்"

என்று பக்குவிகள் பற்றத்தக்கதும், பற்றும் ஜிவனைப் பரப்பிரம்மத்தில் ஐக்கியப்படுத்துவதுமான அருட்பதத்தின் உண்மை வடிவை அவ்வன்னையின் இயல்பான சுவாநுபூதியைக் கொண்டே நிதரிசனப்படுத்தி: ஞானதிருஷ்டி — அருட்பார்வை — பரப்பிரஜ்ஞை — சொருப சாட்சாத்காரம்: என்பவாதிய குருமொழிகளின் தத்துவார்த்த ரகசியங்களையெல்லாம் பாமரர்க்கும் புரியுமாறு பஹிரங்கப் படுத்தி யருளினர்.

குறிப்பு: அடி—முடி: அருள்—பொருள்: அகார—உகாரம்: எட்டு—இரண்டு: என்பவாதிய வேதாந்த வாக்குகள் அனைத்தும் முறையே அறிவானந்த நிலைகளைக் குறிப்பனவே யாம்.*

21. ஆன்மாநுபூதியே அருட்பிரசாதமாம்

"சித்தந் தெளிந்தோர் சேடம் பருகின்
முத்தி யாமென மூலன் மொழிந்ததே"

என்பவாதிய உச்சிஷ்டம் பற்றிய மூதுரைகளின் உட்கருத்தை யுணராது உணவாதிகளின் சேஷத்தையே குருப்பிரசாதமாக நம்பு வோரிற் சிலர், அதன்பொருட்டு மஹேஸ்வர பூஜைக்கு ஏற்பாடு செய்வித்து மஹர்ஷியின் பிக்ஷை முடியும் வரையில் உச்சிஷ்டத்தோடு கூடிய பரிகலத்திற்காகப் பக்திசிரத்தையுடன் உபவாசமிருப்பதுண்டு. இதில் விசேஷ பற்றுடைய பக்தர்கள் தம்முள் எவரும் ஏமாற்ற மடையாதிருத்தற்காக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தினத்தை முன்னரே குறிப்பிட்டுக்கொள்வதும் வழக்கம். குருவமுதின் தத்து வத்தை அறியாது போலி உச்சிஷ்டத்துக்காக இப்படிப் பட்டினித் தவங்கிடக்கும் அடியார்களின் இத்தகைய அர்த்தமற்ற நம்பிக்கை யைத் தகர்த்தருளத் திருவுளங் கொண்ட பகவான்:

"மஹான்கள் எந்த உள்ளுணர்வின் சஹஜாநுபூதியால் நிரங் குசத் திருப்தியோடு திவ்ய சொருபிகளாகப் பிரகாசிக்கின்றனரோ, அந்த உள்ளுணர்வாகிய சொருபாநுபூதியைப் பெரியோர்களால் அநுக் கிரகிக்கப் பெறுவதே அருட்பிரசாதப் பிராப்தியாகும். பெறுதற்கரிய அவ்வருளமுதிற் சிறிது சித்திக்கப் பெறினும் அதனல் அக்கணமே

---

* அடியெனு மதுவும் அருளெனு மதுவும்
அறிந்திடின் நிர்க்குண நிறைவாம்;
முடியெனு மதுவும் பொருளெனு மதுவும்
மொழிந்திடிற் சுகம்: மன மாயைக்
குடிகெட வேண்டில் பணியற நிற்றல்
குணம்; எனப் புன்னகை காட்டிப்
படிமிசை மௌனி யாகிநீ யாளப்
பாக்கியம் என்செய்தேன் பரனே.

—தாயுமானவர்

பரிபூரண சித்தோபசாந்தி வாய்க்கப்பெறலே அநுபவ பூர்வமாக உணரலாம். இதை விட்டு: அன்னம்–விபூதி–பழம்–புஷ்பமாதிய நிவேதனப் பொருள்களின் சேஷத்தையே குருப்பிரசாதமாகக் கொண்டு திருப்தியடைவது ஏமாற்றமாகும்."

• என்று அருட்பிரசாதத்தின் தத்துவத்தை விளக்கியருளியபின் தமது கிருபா கடாட்சத்தையே குருப்பிரசாதமாக அனைவருக்கும் வழங்கிக் கணப்போதில் எல்லோரையும் பிரம்மானந்தக் கடலிற் படிவித்துக் கிருதார்த்தராக்கி யருளினர்."

22. இருப்பறி விப்பே இறையுப தேசமாம்

"பிறியாத தண்ணருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்ப வுண்மையை யளித்தனை: என் மனதறப்
பேரம்பலக் கடவுளாய்
அறிவா யிருந்திடும் நாதவொலி காட்டியே
அமுதப்ர வாகசித்தி
யருளினை: அலா துதிரு வம்பலமு மாகியெனை
யாண்டனை: பின் யோகநெறியாய்க்
குறிதா னளித்தனை: நன் மரவுரிகொ ளந்தணக்
கோலமா யசபாநலம்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா விருக்குநெறி
கூட்டினை"

—தாயுமானவர்

"யானேயோ தவஞ்செய்தேன்—'சிவாயநம' வெனப் பெற்றேன்"

—மணிவாசகர்

"முத்திபஞ் சாக்கர முறைமையி லைக்கியஞ்
சத்திய மிதுவெனச் சார்ந்தவர்க் குரைத்தோன்"

—அருளையர்

என்பவாதிய ஆன்றோர் மரபின்படி: மெய்ஞ்ஞான தீக்ஷையாகப் பல்வேறு மந்திர மொழிகளும் மஹாவாக்கியங்களும் முத்திரைக் குறிகளும் பாவனைச் சின்னங்களும் சுருதிகளில் கூறப்பெற்றிருக்கையாலும்; தொன்றுதொட்டே குருபரம்பரையில் விளங்கிவரும் மடாலயங்கள், பிரம்மசமாஜம், தெய்வநெறிக் கழகம் போன்ற சன்மார்க்க

நிலையங்களில் பல்வேறு முறைகளில் தத்துவோபதேசங்கள் அளிக்கப் பெற்று வருகையாலும்; "தொட்டுக் காட்டாத வித்தை—குட்டுப் போட்டாலும் வராது" என்ற பழமொழிக்கிணங்க, மஹர்ஷியை அடுத்தோரில் அன்னூர் வாக்கினின்று ஏதேனும் உபதேசம் பெற வேண்டுமென்று விரும்பாதாரில்லை. பிரம்மோபதேசத்தைக் குறித்து ஞானவாசிஷ்டம் முதலிய நூல்களில், "இயற்கை குணம் சோதித்து; முன்னே பின்னே—யாவையுமாம் பிரம்மம் நீ யென்னல் வேண்டும்" என்பவாதிய விதிகள் இருந்தாலும்; பகவான், சதா சற்பாவத்திலேயே வீற்றிருக்கப் பெற்றமையால் பாரமார்த்திக நிலையைப் பற்றிய பஹிரங்க உபதேசம் வேண்டுவார்க்கு அவர் எப்போதும் தற்போதமற்ற நிலையில் நின்று* அருள்வாக்காகவே பின்வருமாறு உபதேசித்தருளும் இயல்பினராக் விளங்கினர்.

"ஞானநுக்கிரகம் வெளியிலிருந்தும் அன்னியரிடமிருந்தும் அடையப் பெறுவதன்று. அது ஒவ்வொருவருக்கும் அவரவர் இதயத்தினின்றே சித்திக்கற்பாலது. உள்ளந்தோறும் 'இருக்கின்றேன்—இருக்கின்றேன்' என்னும் இருப்புணர்வால் சதா தனது உண்மையைப் பிரகாசிப்பித்துக்கொண்டிருக்கும் 'பரமான்மாவே' அனைவர்க்கும் ஞானகுருவாம். அவரால் அநுக்கிரகிக்கப் பெறும் உண்மையுணர்வே ஞான தீக்ஷையாகும். அவர் எந்த உள்ளுணர்வால் தனது இருப்பைச் சதா உணர்த்திக்கொண்டிருக்கின்றாரோ சுய சொரூபமான அந்தப் பிரஜ்ஞானமே குருவநுக்கிரகமாகும். இந்தத் திவ்வியோபதேசம் எப்போதும் எல்லோருக்கும் இயல்பாகவே நடந்துகொண்டிருக்கிறது.

---

* பகவான் ஒருநாள் சொன்ன வாக்கியார்த்தத்தைப் பற்றி யாரேனும் மறுநாள் விளக்கம் கேட்டால், "இது யார் சொன்னது? நானா சொன்னேன்? ஞாபகம் இல்லையே!" என்று சில சமயங்களில் கூறுவதுண்டு. இக்கூற்றிற் பொதிந்து கிடக்கும் பாரமார்த்திக நுண்பொருளை நுணுகி ஆராய்ந்தால்: இது: பாரதப்போரின் தொடக்கத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானால் தனக்குப் போர்க்களத்தில் அநுக்கிரகிக்கப் பெற்ற 'பகவத் கீதையை'ப் போரின் முடிவில் மீண்டும் விளக்கியருளுமாறு அர்ச்சுனன் பிரார்த்திக்கையில் "அது ஆண்டவன் சங்கற்பம்: அவனருளால் தானாகவே தோன்றுவது: அத்தகைய அருள் வாக்குகளைத் தற்போதத்தால் நினைக்கும்போதெல்லாம் பெற முடியாது" என்று கிருஷ்ண பரமாத்மா கூறியதாக உத்தரகீதையைப் பற்றி வழங்கும் கட்டுரையின் உட்கருத்தை ஒட்டியதாக இருத்தலால், மஹர்ஷியின் வாக்குகளைத் தெய்வ வாக்காகவே போற்றுகின்றனர் பக்தர்.

இயற்கையான ஆன்ம சித்தியை அநுபூதிவாயிலாக விளக்குவது இதுவே யாதலால், பக்குவிகள் ஞானோபதேசத்துக்காக வெளியார் உதவியை என்றும் நாடவேண்டியதில்லை. வெளியார் வாக்கினின்று சப்தம்—முத்திரை—பாவனை முதலிய ரூபங்களில் பெறும் உபதேசங்க ளெல்லாம் கற்பனைகளே. உபதேசம் (உப + தேசம்) என்ற சொல்லுக்கு 'ஆன்மாவில் இருத்தல்' 'ஆன்மாவாக இருத்தல்' என்பதே பொரு ளாதலாலும்; அந்த ஆன்மா தன் சொரூபமாகவே இருத்தலாலும்; தன்னை அயலாரிடத்தில் தேடும் வரையில் சொரூப சாட்சாத்காரம் சித்தியாது.* உள்ளத்தின்கண் உள்ளுணர்வாக ஒளிர்ந்துகொண் டிருக்கும் உண்மைப்பொருள் நீயேயாதலால்: உன் சுய சொரூபத்தை இவ்வாறுணர்ந்து சதா ஸ்திதப் பிரஜ்ஞனாக நிற்பதாகிய சுவாநுபூதியே: பரமௌனம்–சும்மாவிருக்கை—சித்தோபசாந்தி–சொருபசித்தி என்ப வாதிய பெயர்களால் மஹா வாக்கியார்த்தமாக உபநிடதங்களில் வர்ணிக்கப் பெறுகிறது.

---

* பகவானால் இயற்கையாக அநுக்கிரகிக்கப்பெறும் ஞானோப தேச முறை பெரும்பாலும் இதுவேயாயினும்; இதற்கு விதிவிலக்காகத் திருக்குலத்தொண்ட ரொருவருக்கு ஓர்சமயம் மந்திரோபதேசமும் அவரால் அநுக்கிரகிக்கப்பெற்றது. அதன் விவரம் இது:– பகவானை ஞானகுருவாக உள்ளன்போடு உபாசித்து வந்த நந்தன் மரபின ரொருவர் தற்கால சமூக விதியின்படி மஹர்ஷியை நெருங்காது தூரத்திலிருந்தே தினந்தோறும் தரிசித்து வந்தார். இதைப் பலநாள் கவனித்துவந்த பகவான், இம்மெய்யடியாரின் அபார பக்திக்குத் திருவுள மிரங்கியவராய்; ஒருநாள் அவரைத் தம்மருகே அழைத்துக் கிருபா கடாட்சத்துடன் அன்னாரை நோக்கி: அவரது பக்குவத்திற் கேற்ப "சிவ சிவ' என்று சதா தியானித்துக் கொண்டிரு. இதைக் கனவிலும் மறவாதே; இதுவே உன்னைக் கிருதார்த்தனாக்கிவிடும்" என்று முத்தி பஞ்சாக்ஷரத்தை அவருக்கு உபதேசித்து ஆசீர்வதித் தருளினார். குலச்சிறுமையால் ஸ்ரீ ராமானந்தரை அணுக முடியாமல் நள்ளிருளில் கங்கைத் துறையிற் கிடந்து அன்னாரின் திருவடி ஸ்பரிசத் தால் தாரக மந்திரோபதேசம் பெற்று உய்ந்த அந்நாளைய கீழினத் தொண்டரான ஸ்ரீ கபீர்தாசரது சம்பந்தத்தால் பாகவதம் அருள் விளக் காகப் பிரகாசிப்பது போலவே: இந்நாளைய திருக்குலத் தொண்டரின் (இவர் பெயர் தெரியவில்லை) சம்பந்தத்தால் ஸ்ரீ ரமண சரிதம் தெய்வ சரிதமாகப் பிரகாசிக்கிறது.

குறிப்பு:– நம்பிக்கையுள்ள இடங்களிலெல்லாம் நம்பிக்கையின் வண்ணங்களில் பிரஸங்நமாகும் தெய்வசக்தியால் — கர்த்தவ்யமற்ற ஞானிகள் மூலமாகச் — சில பக்குவிகளுக்குச் சித்திப்பனவாய இத் தகைய அருட்பேறுகள் அவரவர் நம்பிக்கையின் பிரதிபலனங்களேயாம்.

குறிப்பு:— ஆதிகுருவாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரையில் உணர்த்தியருளிய பிரம்ம வித்தையைச் சொற்குறிப்புகளால் விளக்கப் போந்த பரமாசிரியர்களில்: பரமான்மாவே எல்லோருக்கும் பரமாசிரியரென்பதையும், அவர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உள்ளுணர்வாக எழுந்தருளியுள்ளா ரென்பதையும், அனைவர்க்கும் இயற்கையான சுவாநுபூதியாக உள்ள 'அகம் ஸ்புரிப்பே' அவர் அநுக்கிரகிக்கும் ஞானோபதேச மென்பதையும், அகந்தையின் அத்தியந்த நாசமே ஆன்ம சாட்சாத்கார சித்தியென்பதையும், பகவானைப்போல் அவரவர் இயற்கையனுபவத்தைக்கொண்டே தேற்றியருளியவர் வெகு அபூர்வமென்பது ஈண்டு குறிப்பிடற்பாற்றும்.

23. நான்றலை சாய்வே சான்றவர் பணிவாம்.

மஹர்ஷியைத் தரிசிக்க வருவோரிற் சிலர் சம்பிரதாய முறையில் அஷ்டாங்க—சாஷ்டாங்கங்களால் விதிப்படி நமஸ்கரித்தல் வழக்கம். சற்குருவின் கிருபைக்குப் பக்தியோடு கூடிய இத்தகைய வந்தன வழிபாடுகள் இன்றியமையாதன வென்பது அவர்கள் நம்பிக்கை. 'சன்மார்க்கத் துறையின் எந்த சாதனமும் அதன் உட்கருத்தைக் குறித்த ஆராய்ச்சியும் பயனைப்பற்றிய அநுபவமுமின்றி வெறும் பழக்கம் காரணமாகவே அநுஷ்டிக்கப்பெறும் வரையில் எவரும் அதனால் கிருதார்த்தராக முடியாது' என்னும் உண்மையை அறிவுறுத்தற்பொருட்டு ஓர்கால் பகவான் அத்தகையினரை நோக்கி;

"குரு வணக்கத்தின் பயன் அகந்தையின் நிவிர்த்தியே. அது பரிபூரண சரணாகதியாலன்றிச் சித்திப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் உள்ளத்தினின்றே உணர்வுருவில் தரிசனங் கொடுத்துக் கொண்டிருக்கும் அருட்குருவின் அகம்ஸ்புரிட்டாகிய ஞானத்திருவடியில்—நாமரூப நினைவு வடிவ—அகந்தையைத் தலையெடுக்கவொட்டாது மோனத்தால் முற்றும் நிவேதிப்பது தான் சரணாகதியாதலால்: அகந்தையின் பணிவாலன்றி உடற்பணிவால் ஆன்ம சாட்சாத்காரம் எய்தாது"

என்று நமஸ்காரத்தின் தத்துவத்தை விளக்கிச் சாதகரால் கடைப்பிடிக்கப்பெறும் சன்மார்க்க நியமங்கள் ஒவ்வொன்றும் தம் தம் பயனைத் தவறாது அளிக்கவேண்டுமானால்: அவை அவ்வதற்குரிய லட்சிய நாட்டத்துடன் அநுஷ்டிக்கப்பெறல் வேண்டுமென்பதை வற்புறுத்தியருளினார்.

24. அருபரம் பொருளே குருபர னுருவாம்.

பகவானைச் சூழ்ந்திருந்து குருபணியே அருந்தவமாகக் காலத்தைக் கடத்திவந்த அணுக்கத் தொண்டர்களின் யோகக்ஷேமத்தில் எப்பொழுதும் விசேஷ நாட்டமுடையவராக இருந்தார் பகவான். புறப்பணியில் அழுந்தியுள்ள அவர்கள் மனம் கொஞ்சம் கொஞ்சமாக உபாதி நாட்டத்தினின்று திரும்பி நிருபாதிக நாட்டத்தில் தலைப்பட்டு முடிவில், "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே" என்றவாறு; தம்மில் அபேதமாகக் கலக்கப் பெறுதலே அவர்களின் இறுதி லட்சியமாக இருக்கவேண்டுமென்னும்—குரு கைங்கரியக்--குறிக்கோளை அவர்களுக்கு அறிவுறுத்துங் கருணையினராய்: இடையிடையே சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் யாதாமொரு சம்பவத்தை வியாஜமாகக்கொண்டு அவர்கட்குத் தமது உடலைச் சுட்டிக்காட்டி:—

"இந்தப் பொய்யுருவையே எனது உண்மை வடிவென்று நம்பியிருக்கிறீர்கள்! இப்படிக் கடைசி வரையில்* இப்போலி ரமணனையே சற்குருவாகப் பாவித்திருந்து இது மறைந்தபின் ஏமாறப் போகிறீர்கள் !! அப்பொழுது என்மீது குறை சொல்லாதீர்கள். நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன்: இனி இவ்வுண்மையைக் கடைப்பிடிப்பதும் கைவிடுவதும் உங்கள் இஷ்டம்."

என்பவாதிய சல்லாபவார்த்தைகளால் "தன்னையும் என்னையும் வேறு--உள்ளத்--தெண்ணுத வண்ணம் இரண்டற நிற்கச் சொன்னது மேவொரு சொல்லே" என்னும் பெரியோர் குறிப்பின்படிப் பர சொருபத்தையே குரு சொருபமாகப் பற்றிச் சதா அனன்னிய பாவத்தால் அவரைத் தியானித்துக் கொண்டிருத்தலே இறைபணியென்பதை வற்புறுத்துவது வழக்கம்.

ஓர் சமயம் பகவான் தரிசனத்தின் பொருட்டு முதல் தடவையாக ஆசிரமத்திற்கு வந்த வெளியூர் பக்தரொருவர்,—ஆஸனத்தை

---

* "உடல மாசையால் தியானிக்கில் தியானித்த
உடல்களா குவர் மைந்தா
தொடர் பவங்கெடச் சொருபமே தியானிக்கில்
சொருபமா குவர் மெய்யே"

—கைவல்யம்

விட்டு வேறிடத்தில் சில அன்பர்களுடன் ஒரு காரியத்தில் ஈடுபட்டிருந்த—பகவானை அணுகி; அவர்தான் மஹர்ஷி என்பதை அறியாதவராய்: ரமணர் எங்கே? என்று வினவினர். உடனே பகவான் புன்முறுவலுடன் அவரை நோக்கியருளி;

"ரமணரா? இதோ இருக்கிறாரே!"

என்று அருகிலிருந்த ஒரு பித்தளைப் பாத்திரத்தைச் சுட்டிக் காட்டினர். அதில் 'ரமண' என்ற மூன்று எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றிருந்தன. வந்தவர் ஒன்றும் புரியாதவராய்த் திகைத்து நிற்பதைக்கண்ட பகவான், தமது உடலையும் அந்தச் செம்பையும் முறையே குறிப்பிட்டு "இதுவும் அதைப்போன்ற ஒரு உருவந்தானே! அதிலாவது (செம்பிலாவது) 'ரமண' என்னும் பெயர்க்குறிப்பு இருக்கிறது. இதில் (தமது உடலில்) அதுகூட இல்லையே!" என்று தம்மைக் குறிப்பால் விளக்கிவிட்டு மீண்டும் தம் வேலையைக் கவனிக்கலானர். புதியவர் உண்மையைப் புரிந்துகொண்டார். பகவான் எப்போதும் நிருபாதிக நாட்டத்தையே இயல்பாகக் கொண்டிருந்தமைக்கும்; பக்தரும் தமது பரமார்த்த சொருபத்தையே பற்றி நிற்கவேண்டுமெனத் திருவுளங் கொண்டமைக்கும்; இவ்விநோத நிகழ்ச்சியே அத்தாட்சியன்றோ?

தம்மைப் பற்றிய தேகான்ம பாவமே குருவையும் உடல் வடிவிற் காணச் செய்வதாதலால்: "நாமுட லென்னு மாசால்—ஞானக்கண் குருடாய்ப் போகும்" என்றபடி அவ்வஞ்ஞான தத்துவத்தை இந்நிகழ்ச்சியைக் கொண்டே எல்லோருக்கும் தெளிவாக விளக்கியருளினர் பகவான்.

குறிப்பு:— இதுகாறும் கூறிய அருட் குறிப்புகளுக்கெல்லாம் இலக்கியமாகத் தமது இயல்—சொல்—நடையாதிய ஒவ்வொன்றாலும் தாமே உதாரண புருஷராகக் காட்சியளித்தார் பகவான்.

25. எங்கும் நிறைநான் எவ்விட மகல்வேன்.

உலக ரக்ஷணார்த்தமாகத் திருவவதாரம் செய்தருளிய புத்தர்—சங்கரர்—கிறிஸ்து போன்ற மஹா புருஷர்கள் தம்தம் அவதார காரியங்கள் நிறைவேற்றப்பெற்றுத் தங்கள் சகளத் திருமேனிகள்—மாலைக் கதிரவன்போல்-மெல்ல மெல்ல ஒடுங்கிக்கொண்டிருந்த இறுதிக் காலங்களில்—அவ்வொடுக்க நிலையினின்றே—கடைசி முறையாகத் தம்தம் அடியார்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிய திவ்யோபதேசங்களைப் போலவே; பகவான் ஸ்ரீ ரமணர் தமது நிர்வாண காலத்தில் பக்தர்களின் பிரிவாற்றாமைக் கிரங்கியவராய், அவர்களைத் தேற்றுமுகத்தால்

அனைவரையும் கடைசியாகத் தமது கருணைக் கண்களால் ஓர்முறை உற்று நோக்கியவாறே:—

"இந்த உடம்புதான் பகவான் என்றெண்ணி 'பகவான் நோயால் வருந்துகிறாரே' என்று இரங்குகிறார்கள்: என்ன செய்வது! 'சுவாமி போய்விடப்போகிறாரே' என்று கவலைப்படுகிறார்கள்: எங்கு போவது? எப்படிப் போவது ?"

என்று கூறியருளிய தத்துவார்த்த விளக்கங்கள்—உண்டாரை உடற்பிணியினின்று உடனே உய்விக்கவல்ல தேவாமிர்தம் போன்றே—உய்த்துணர்ந்தாரை உயிர்ப்பிணியினின்று உடனே உய்விக்கவல்ல ஞானாமிர்த ரசங்களாகும். இத்தகைய திவ்வியோபதேசங்களால் தமது நிஜ சொரூபத்தைக் கடைசி முறையாகச் சித்திரித்துக் காட்டியதன் மூலம் எல்லோருடைய நிஜ சொரூபமும் இதுவேதான் என்பதைக் குறிப்பாலுணர்த்தி யருளித் தமது அவதாரத்தின் குறிக்கோள் பரிபூரண மாக நிறைவேற்றப்பெற்ற திருப்தியால் உடலும் உள்ளமும் புளகாங் கிதமுறப் பிரஸந்ந முகத்தராய் விதேக கைவல்ய ஸ்திதியில் விளங்கி யருளினார் பகவான்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது உடல் வாழ்க்கையின் அந்திம காலத்தில் தொண்டைப் பிணியால் கடுமையாகப் பீடிக்கப் பெற்றவராய்த் தொடர்ச்சியாகப் பலநாள் வரையில் ஊண்—உறக்க மின்றித் துர்ப்பல ஸ்திதியில் கொடிய வேதனையோடு மரணப் படுக்கையிற் கிடக்கையிலும், இடைவிடாத தியான சித்தராய்க் காட்சி யளித்து நின்றதோடு; மருத்துவர்களின் எச்சரிக்கைகளை யெல்லாம் உபேட்சித்துப் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்துக்கொண்டும்: தமது அவதாரத்தைக் குறித்த —ஸ்ரீ விவேகானந்தர் போன்ற சிறந்த விஞ்ஞான மேதைகளின்—தர்க்கரீதியான சங்கைகளைப் பரிவோடு நிவர்த்தித்துக்கொண்டும்: கடைசி மூச்சளவும் கருணாமூர்த்தியாக விளங்கியருளினா ரென்பதை அறிவோம். பகவான் ஸ்ரீ ரமணரும் தமது இறுதிக் காலத்தில் பயங்கரமான புற்று நோயால் பாதிக்கப் பெற்றவராய்த் தவிர்க்க முடியாத பிராணவஸ்தை நிலையைப் பன்னாட் கள் மேற்கொண்டிருந்த காலையிலும்: மருத்துவர்களும் அதிசயிக்கு மாறு சஹித்தற்கரிய துன்பங்களை யெல்லாம் சஹித்துக்கொண்டு அமைதியாக விளங்கி நின்றதோடு, காவலரின் கட்டுப்பாடுகளைச் சிறிதும் பொருட்படுத்தாதவராய்த் தம்மை அடுத்தோர்க்கெல்லாம் பிரஸந்ந மூர்த்தியாய்த் தங்கு தடையின்றித் தரிசனம் கொடுத்துக் கொண்டும்: தமது கிருபா நோக்காகிய அருட்செல்வத்தை இடை விடாது வழங்கிக்கொண்டும்: கடைசிவரையில் ஞானவள்ளலாகப் பிரகாசிக்கப் பெற்றமை உலகப் பிரசித்தம்.

குறிப்பு:— மஹர்ஷியின் பரிநிர்வாண சமயத்தில் பக்தர்களே யன்றிப் பசு—யானை—மயில் முதலிய ஐயறிவுயிர்களும் அன்னார் சந்நிதியைச் சூழ்ந்து தமது ஆருயிர்த் தலைவரின் பிரிவாற்றாமையால் மெய்ம் மறந்து உருக்கத்துடன் தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தி நின்ற காட்சி: காணற்கரிய தெய்வீகக் காட்சியாகும். முன்னோர் சரிதங்களிற் காணப்பெறாத அற்புதம் இது. இதை அவ்வமயம் எடுக்கப்பெற்ற புகைப்பட வாயிலாகக் காணலாம்.

26. நடையிற் காட்டலே நல்லுபதேசமாம்.

பகவான் தமது பக்தர்களின் நல்லொழுக்க விதிகளைப் பற்றிப் பஹிரங்கமாகக் கூறும் ஹிதோபதேசங்கள் மிக மிகக் குறைவே. அதையும் தன்னடக்கத்துடன் வெகு அபூர்வமாகவே கூறுவார். பக்தர்கள் பெரும்பாலும் தம்மையே (மஹரிஷியையே) தங்கட்குரிய மாதா—பிதா—குரு—தெய்வமாதிய எல்லாமாகவும் போற்றி நின்றாலும், அவர் ஓர்போதும் அடியார் சுயேச்சையிற் குறுக்கிட்டதில்லை. சாதகரின் நடைமுறைகளைக் குறிப்பாற் கவனித்தல் உண்டு. ஊண்—உடை—இருக்கையாதிய அத்தியாவசியத் தேவைகளிலும் நிராசையோடு எதிலும் தேவைக் குறைப்பும் ஆடம்பரத் தியாகமும் சாதுக்களுக்கு அத்தியாவசியமாம்: என்பதைப் பல்லாற்றானும் சுயாநுஷ்டானங்களாலேயே அடிக்கடி விளக்கி வந்துள்ளார் மஹர்ஷி. உதாரணமாக:

பகவான் நூலாசிரியராதலால்: பல சமயங்களில் எழுத்து வேலையில் ஈடுபடுவதுண்டு. அதற்கு உதவியாக இருக்கும்பொருட்டு ஓர் சமயம் உயர்ந்தரக எழுதுகோலொன்று *(Superior Fountinepen)* பிரபுவொருவரால் குரு காணிக்கையாகச் சமர்ப்பிக்கப் பெற்றது. மஹர்ஷி நெடுநாள் வரையில் அதைப்பற்றிய சிந்தனைகூட இல்லாதவராய் வழக்கம்போல் ஒரு சாதாரண எழுதுகோலைக்கொண்டே தமது அரிய உபதேசங்களை யெல்லாம் எழுதிக்கொண்டு வந்தார். மையின் தடையால் அதை அடிக்கடி உதறவேண்டிய அவசியம் இருந்ததைக் கவனித்துக்கொண்டிருந்த அன்பரொருவர், எத்தகைய சிரமத்தையுந் தராத அப்புதிய பேனாவைக் குறித்து மஹர்ஷிக்கு ஞாபகப் படுத்திய பொழுது: அவர் உதாசின பாவராய்:

பேனாவின் உபயோகம் எழுதுவதுதானே! அதற்கு இதுவே போதும்: இதில் மை சரியாக இறங்காமையால் அடிக்கடி உதற வேண்டிய அவசியமும் மூடவேண்டிய அவசியமும் இருப்பது உண்மைதான். எனினும்: சுலபமாகக் கிடைக்கும் இத்தகைய சாமானிய சாதனங்களைக் கொண்டே அத்தியாவசியக் காரியங்களையெல்லாம்

உடனுக்குடன் நிறைவேற்றிக்கொள்ளும் பழக்கந்தான் நல்லது. சிரமத்தைப் பார்த்தால் எந்தவேலையையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க இயலாது. எப்போதும் எளிமையிலுள்ள இன்பத்தை ஆடம்பரத்தில் காணமுடியாது."

என்று கூறிப் பழைய எழுதுகோலிலேயே தமக்குள்ள திருப்தி யைக் குறிப்பித்தருளினர். மற்றொரு சமயம்: பிழைத் திருத்தத்திற்காக வந்த ஒரு புத்தகத்தின் புரூப் *(Proof)* காகிதங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் புத்தகமாகச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார் பகவான். புரூப் காகிதங்களை—அவை எவ்வளவுதான் உயர்ந்த கருத்துக்களுடை யவேனும், குப்பைத் தொட்டியிற் சேர்க்கும் பழக்கமுடைய கனவா னொருவர், மஹர்ஷியின் இத்தகைய முயற்சி அவசியமற்றதெனக் கருதியவராய் அன்னாரை யணுகி: "நான் அடுத்த வாரம் வரும்போது அழகான *(Binded)* அசல் *(Original)* புத்தகமே வாங்கி வருகி றேனே !" என்று விண்ணப்பித்து நின்றார். மஹர்ஷி உடனே:—

"அதெல்லாம் எதற்கு ? அழகான புத்தகத்தில் என்ன பொருள் இருக்குமோ அதே பொருள்தான் இதிலும் இருக்கிறது: நமக்கு வேண்டியது பொருள்தானே! புதிய புத்தகத்திற்குக் கொடுக்கும் விலை அதன் அழகுக்குத்தான் கொடுப்பதாகும்."

என்று புன்முறுவலுடன் கூறித் தமக்குப் புதுமை—பழமை ஆகிய இரண்டும் ஒன்றேதான் என்பதைக் குறிப்பாகக் காட்டியருளினர். பகவானது புறவாழ்வின் எல்லா அம்சங்களும் இதே முறையில்தான் இருந்தன. அவரது ஆகாரம் இயற்கையாகக் கண்முன் நிற்பதுதான்: உடையோ–பழைய கோவணமே: இருக்கை–குகையும் படுகுழியும்: படுக்கை–மரத்தடியும் மண்தரையும். இப்படியாகத் தனிமையில் இனிமையாகக் காலங்கழித்து வந்த பகவானது பிற்கால வாழ்க்கை எல்லா வகையாலும் சிறந்தனவாகக் காணப்பெற்றது உண்மை யானாலும்: அவை பக்தர்களால் சிருஷ்டிக்கப் பெற்றனவாகும்.

இவ்வாறு: மஹர்ஷி தம்மையடுத்தோரின் புறவாழ்வைத் தமது நித்தியாநுஷ்டானங்களாலேயே பல்லாற்றானும் செம்மைப்படுத்தி வந்ததோடமையாது; அவர்களின் அகவாழ்வையும் தமது பரிவார்ந்த இன்சொற்களாலும் அன்பார்ந்த அறிவுரைகளாலும் இயன்ற அளவு பண்படுத்த முயற்சித்து வந்தார். ஒழுக்கமே சன்மார்க்கத்தின் அடிப் படையாதலாலும்; மஹான்களின் சம்பந்தத்தால் சற்புத்திர பாக்கியம் வாய்க்குமெனத் தொன்றுதொட்டிருந்துவரும் சில பொதுமகளிரின்

நம்பிக்கைக்கு இரையாகாதிருத்தற் பொருட்டும்; சிறப்பாக, இளந் துறவிகளான நைட்டிக பிரம்மசாரிகள் விஷயத்தில் விசேஷ சிரத்தை யுடையவராக இருந்தார். வேறு நோக்கத்துடன் தமமைப் பலகால் அணுகியும் தனது நோக்கம் நிறைவேறப் பெறுமையால், முடிவில் நிராசையாற் பக்தையாக மாறிய ஒரு மங்கை நல்லாரின் சுவாரஸ்ய மான கதையை ஆதாரமாகக்கொண்டு பகவான் கூறிய ஆப்த வாக்கி யங்களிற் சில பின்வருவனவாம்.

"பிரம்மசரியம் என்பது பிரம்மத்தின் அநுசந்தானந்தான். விவாகமின்றி இருப்பதல்ல.* பிரம்மசரிய விரதம் எல்லோராலும் அநுஷ்டித்தற்கு உரியதாகும். இதைக் கைக்கொண்ட ஒவ்வொரு வரும் அவரவரது ஆசிரம தர்மங்களினின்று நழுவாதிருத்தலே முக்கியம். பிரம்மசரிய வேடம் பூண்பது சுலபம்: அதைக் கடைசி வரையில் தவறின்றி நிறைவேற்றி நிற்றல் கடினம். தீரத்தோடு கூடிய தீவிர வைராக்கியசாலிகளுக்கே அது பொருந்துவதாம். ஆகையால் நைட்டிக பிரம்மசாரிகள் மாதர்கள் கூட்டுறவிலும் ஐம்புல வேட்கை யிலும் எப்பொழுதும் விழிப்பாகவும் முன்னெச்சரிக்கையுடனும் இருந்துவரல் அவசியம். வேதகால ரிஷிகளைச் சேர்ந்த சிலருடைய ஒழுக்கத் தவறுகளையும் அவற்றின் விபரீத விளைவுகளையும் குறித்த வரலாறுகளாகப் புராணங்களிற் கூறப்பெறும் பல்வேறு சன்மார்க்க போதனைகள் நமக்கு நல்லறிவூட்டும் சிறந்த கட்டுரைகளேயாம்."

இவ்வார்ருய சற்போதனைகளால் பக்தர்களை அடிக்கடி எச்சரிப் பார் பகவான். ஒழுக்கக் குறைகளையும் அவ்வப்போதே எடுத்துக் காட்டித் திருத்தியருள்வதுண்டு. உதாரணமாக:—

---

* பரமார்த்த சித்திக்கு "அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே எந்தத் துறவினும் நன்று" என்பதே பகவான் கருத்தேனும்; "பேரின்பப் பெருவாழ்வைச் சதானந்தராக அநுபவித்தற்கும்; பாரமார்த்திக நிலையைப் பாரெங்கும் பரப்புதற்கும்; மனைவி மக்களாதிய எவ்வித பந்தங்களுமற்ற சர்வ சுதந்தர நிலையைத் தரக்கூடிய துறவே இன்றியமையாத சாதனமாம்" என்னும் ஸ்ரீ விவேகானந்தரின் உறுதி யான நம்பிக்கையும், ஏறக்குறைய இதே போன்ற சங்கர மரபினரது கொள்கையும் ஈண்டு சிந்திக்கற் பாலனவாம்.

குறிப்பு:— எவ்வாற்றுனும் ஆன்ம சித்திக்கு அகத்துறவே சாதனமென்பது உண்மையேனும்: புறத்துறவாலன்றி அகத்துறவின் பரிபூரண சித்தி அசாத்தியமாமென்னும் பெரும்பான்மையோரின் அநுபவ வுண்மையைப் புறக்கணித்தற்கில்லை,

ஓர்சமயம் பகவான் தரிசனத்திற்காக வந்து திரும்பிய ஒரு மஹாராஜாவைச் சிறிது தூரம் பின்தொடர்ந்து மீண்ட ஆசிரமத்துறவி யொருவரைப் புன்முறுவலுடன் நோக்கி;—

"சுவாமி ஏதோ அவசர ஜோலியாய் வெளியிற் சென்று வருவதாகத் தெரிகிறது! அஷ்ட ஐஸ்வரியங்களுமுடைய அவ்வரசர் உம்மை* நாடி வந்ததற்கு விசேஷ காரணம் ஏதேனு மிருக்கலாம்: மன நிறைவுக்கு உதாரண புருஷராக விளங்கவேண்டிய நீர் அவரைப் பின்பற்றியது ஏனோ! உமக்கும் குறையிருப்பின் அதை நிவிர்த்திப்பவர் அவர் தானோ? இத்தகைய சாதாரண உண்மையையும் தெரிந்துகொள்ளாதவர் துறவை மேற்கொள்வது எதற்கு?"

என்பன போன்ற ஹிதோபதேசங்களால் நிராசையே துறவுக்குரிய சிறப்பான இலக்கணமென்பதையும்; சர்வ சக்தனும் சாது ரட்சகனுமான இறைவனொருவனே வேண்டுவார் வேண்டியாங்கே அருளவல்லவனென்னும் ஆண்டவனது சர்வ ரட்சகத் தன்மையில் பரிபூரண நம்பிக்கை கொண்டு;

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்:நற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையைக் குறுகினோமே"

என்றதற்கேற்பத் துறவிகள் தம்மைத் தலைவனிடமே முற்றும் ஒப்படைத்தவராய்த் 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்னும் பொன்மொழிக்குச் சான்றாக—எப்பொழுதும் தீரத்துடன் விளங்கவேண்டுமென்பதையும்; தக்க திருஷ்டாந்தத்துடன்※ தெளிவாக விளக்கியருளினர்.

---

* 'உம்மை' என்றது சாதுக்களை முன்னிலையிற் பொதுப்படக் கூறியதாம்.

※ அரசரான அக்பர் சாது சங்கப் பிரியரெனக் கேள்வியுற்ற முஸ்லிம் பெரியாரொருவர் தமது அடியார்களுக்கான உதவியொன்றைக் குறித்து ஓர்சமயம் அரசரை நாடி அரண்மனைக்குச் சென்றார்.

காட்சி 7.

தேர்வியல்.

இதுகாறுங் கூறியவாற்றால்: பகவான் ஸ்ரீ ரமண சந்நிதியின் மஹிமைகளும்; அவர் பர நோக்காலும் அருள்வாக்காலும் அநுக்கிர கிக்கும் ஆன்மவித்தையின் அரும் பொருள்களும்; அவற்றால் அவ்வப் போதே சித்திக்கப்பெறும் திவ்வியாநுபவங்களும்; புத்திமான்களுக்குத் தெளிவாதல் கூடும். அதன் பயனாக: ஆண்டவன் தரிசனத்தை எல்லோருமே பிறப்புரிமையாகப் பெறலாமென்பதையும்; மனிதப் பிறப்பின் முடிவான பயன் அதுவே யென்பதையும்; சொரூப சாட்சாத்காரமே கடவுள் தரிசனமென்பதையும்; அறிவே தனது சொரூப மென்பதையும்; சொருபாநுபூதி ஆன்ம சமர்ப்பணத்தால் சித்திப்பதென்பதையும்: உணரலாம். இனி: ஆன்ம சமர்ப்பணத் திறங்களையும்; அதன் அநுஷ்டான முறைகளையும்; அதிற் சித்தி பெற்றோர் இலக்கணங்களையும்; அதனாற் பெறும் அருள்வாழ்க்கையின் அரும் பண்புகளையும்: பகவான் வாய்மொழி வழியே ஆராய்வோம்.

அவ்வேளை அரண்மனைப் பள்ளிவாசலில் தொழுகையிலும் குறை யிரத்தலிலும் மெய்ம்மறந்து நின்ற அக்பரைக் கண்டதும் அங்கு ஏதோ ஒரு புதிய உண்மையைக் கண்டவர்போல் சாது அவ்விடத்தினின்று உடனே திரும்பிவிட்டார். பிரார்த்தனை முடிந்ததும் அக்பர் அத்துறவி யின் வரவைக் கேள்வியுற்று மீண்டும் அவரைத் தருவித்து சற்றுமுன் அவர் தம்மிடம் வந்ததையும் தம்மைக் காணாமலே மீண்டதையும்பற்றி வினவினார். அதற்கு அந்தப் பெரியார்:—

பக்தர்களுக்கு வேண்டியதோர் சிறு தேவையைக் குறித்து உம்மை அணுகினேன். அரசரான உமக்கும் ஏதோ குறையிருத்தலை யும்; அதன் நிவிர்த்தியின் பொருட்டு நீரும் ஆண்டவன் உதவியை நாடி நிற்றலையும்; கண்டேன் 'எல்லாம் வல்ல இறைவனே எல்லாரது விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்குந் தகுதி யுடையவன்' என்னும் பேருண்மையை அக்காட்சியே எனக்கு அறிவுறுத்தியமை யால் அக்கணமே உம்மிடத்தினின்று அகன்றேன்"

என்று அமைதியாக விடையளித்துச் சென்றார், என்ற இக் கதையைக் கூறி இதன்மூலம்: சாதுக்கள் தம்மை முற்றும் தலைவன்பால் ஒப்படைத்துவிட்டு எதிலும் விருப்பு வெறுப்புகளின்றிச் சதா நிச்சிந்தராயிருக்கப் பழகவேண்டு மென்பதையும்; அத்தியா வசியத் தேவைகளை ஆண்டவனிடமே பெறல் வேண்டுமென்பதை யும்; விளக்கியருளினார் பகவான்.

27. நானாரய்வே ஞான விசாரம்.

உருவம்—குணம்—அறிவு—சுபாவம் முதலிய சிறப்பியல்களில் சமநிலையிலுள்ள இரு மனிதரைக் காணல் அசாத்தியமாம். ஆனுல்: தேகோக பாவமாகிய அஞ்ஞானத்தினல் மட்டும் பெரும்பான்மை யோரின் சமத்துவத்தைக் காணலாம். அஞ்ஞானிகளில் ஒவ்வொரு வரும்; தமது. நினைவு—சொல்—நடை—இயல்—அநுபவமாதிய பண்புகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது அவற்றிற்கெல்லாம் எழுவாயாகிய 'நான்' என்பதற்கு—அதன் உண்மைப்பொருள் அறிவாக இருந்தும்—உடலையே குறித்தல் பிரசித்தம். தமது சுயவடிவை சுவாநுபவமாக உணரா விட்டாலும் நனவு—கனவு—துயில் முதலிய எல்லாக் காலங்களிலுமுள்ள தமது இருப்பையாவது எல்லோரும் சுபாவமாகவே உணர்ந்திருப்ப தால்தான்: நாஸ்திகருங் கூட தமது இருப்பைப்பற்றிச் சந்தேகிப்ப தில்லை. தமது இயற்கை வடிவைப்பற்றிய அறிவும் அறியாமையுமே: முறையே ஞானிக்கும் அஞ்ஞானிக்குமுள்ள வித்தியாசமாம். மனித வர்க்கத்தை மக்கள் நிலையினின்று மாக்கள் நிலைக்குத் தாழ்த்துவது இவ்வறியாமையேயாம். "விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்" என்னும் அப்பரின் திருவாக்கும் பெறுதற்கரிய மனிதப் பிறவி பெற்றும் அதற்குரிய அறிவைப் பெருமையையே சித்திரிப்பதாம்.

ஆகையால்: மனிதன் மனிதனுக வாழ்தற்கும் வாழ்க்கைப்பே றெய்தற்கும்—தன்னுடைய இருப்பை எப்பொழுதும் இடைவிடாது அறிவித்துக்கொண்டிருக்கும்—இந்த 'நான் நான்' என்னும் உள்ளுணர் வின் இயற்கை வடிவை உண்முகத்தில் விசாரித்தறிதல் அவசியம். இதுவே ஆன்ம விசாரமாம். இந்த 'நானுர் ?' விசாரணைக்கு உள் ளுணர்வின் இயல்பையும் திரிபையும் பற்றிய தெளிவான ஆராய்ச்சி இன்றியமையாதனவாகும்.

28. இருப்பின் உணர்வே இயற்கை வடிவாம்

புருடனுக்கு 'நான்—நான்' என்று தனது இருப்பைச் சதா துலக் கிக்கொண்டிருக்கும் உள்ளுணர்வுக்கு மூலம் —சுயம்பிரகாச வடிவ— சுத்தப் பிரம்மமே. பிரம்மத்திற்குப் பிரகாசமே சொரூபமாதலாலும்; பிரகாச சொரூபம் பிரம்மத்திற்கே உரியதாதலாலும்; பிரம்மத்தைப் பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கும் உள்ளுணர்வு —பிரம்மத்தினும்— வேறன்று: அதன் கிரணமே யாகும். எப்படி: சூரியனது சொரூப மாகிய பிரகாசம் சூரியனுக்கு விலட்சணமானதன்றே; அப்படியே

பரப்பிரம்மத்தின்சொரூபமேயாகிய உள்ளுணர்வும்-பரப்பிரம்மத்துக்கு-விலட்சணமானதன்று. இந்த உள்ளுணர்வே 'பரமான்மா' எனப் படுவது. அதற்கு ஸ்தானம் ஹிருதயம். பரப்பிரம்மத்தின் சத்திய லுக்குச் சுத்தப் பிரம்ம மென்பதும்; சித்தியலுக்குப் பரமான்மாவென் பதும்; இடுகுறிப்பெயர்களாதலால்: அவ்விரண்டும் விளக்கும்–ஒளியும், பூவும் நிறமும் போலச் சொற்களாலன்றிப் பொருள்களால் வேறுபட் டனவல்ல. (இரு வேறு பொருள்களல்ல.) பரமான்மா தனது இயற்கை யான—உள்ளுணர்வு மாத்திரமான—அநுபூதி நிலையில் எத்தகைய குணங்குறிகளாலும் விகாரப்படுவதில்லை.

29. உணர்வின் நிழலே உபாதியால் ஜீவனும்

மெய்ப்பொருளுக்கு வேருகாமல் அதன் பிரகாசமாய் (அகம் ஸ்புரிப்பாய்) ஹிருதயத்திற் சுடரும் பரமான்மாவாகிய சிற்சக்தியே—சந்திரனில் பிரதிபிம்பிக்கும் சூரியப் பிரகாசம் போல் — சஹஸ்ராரத்தி லுள்ள அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கிறது. பரமான்மாவின் சாயை யாகிய இச்சிதாபாசன் — சரீரத்தினும் வேருகாத நிழலேபோல் — பரமான்மாவினும் வேருகாத தனது எதார்த்த சொரூபத்தை உணர்ந்து, தனக்கு ஆதாரமாகிய பரமான்மாவை அகநோக்கிற்பற்றி, அதன் மயமாக (இருப்பு உணர்வாக) வே அமையாமல்; தன்னைப்பற்றியுள்ள உடலேந்திரியங்களையே 'நான்–நான்' என மயங்கி அதனதன் பாவனை யோடு பஹிர்முகத்திற் சஞ்சரிப்பதாகிய விபரீதத் தன்மையை அடை வதால் 'ஜீவான்மா' என்னும் காரணப்பெயரை அடைகிறது. அகக் கரணம், மனம், அகந்தை, சூக்குமதேகம் என்பவாதிய பரியாய நாமங்களாற் குறிப்பிடம் பெறுவது ஜீவான்மாவே.

ஜீவான்மாவின் பொய்த்தோற்றத்தைச் சுருதியுதவியாலும் குரு வருளாலும் அநுபவ பூர்வமாக அறிவதே மெய்ஞ்ஞானமாம் அகந்தையின் அழிவே (ஜீவன் முத்தியே) பரமான்ம தரிசனமாவதால் இனி அவ்வகந்தையின் உற்பத்தி–ஸ்திதி–லயங்களைப் பற்றி விசாரிப்போம்.

30. ஓர்வது மெய்ம்மை சார்வது பொய்ம்மை

'உடல் வேறு உணர்வு வேறு' என்பது யுக்தியளவில் ஒவ் வொருவருக்கும் தெரிந்த உண்மையே யென்ருலும்: எல்லோருடைய அநுபவமும் உடலுயிர்களின் ஐக்கிய பாவத்திலேயே இருக்கிறது. நினைத்தேன் — கண்டேன் — உண்டேன் — சென்றேன் — செய்தேன்

என்னும் அநுபவங்களில் அவ்வினைகட்குக் கர்த்தாக்களாகிய கரணங்கள் — உணர்வாகிய தன்னிலும் — வேறுபட்டனவாயிருந்தும்: அவ்வொவ்வொன்றையும் தான்தாஞகப் பாவிப்பதே அஞ்ஞானியின் இயல்பாகிறது.

அறிவையே சொரூபமாகக்கொண்ட — மனிதன் தான் இயல்பாகவே அவ்வெல்லாக் கருவி கரணங்கட்கும் அப்பாற்பட்டிருப்பதாய — தனது எதார்த்த சொரூபத்தை உள்ளவாறு உணர்ந்து — அவற்ருேடு தனக்கு ஏற்பட்டுள்ள பொய்ச் சேர்க்கையினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு—தனது சுய சொரூபமாகிய பரமான்மாவாக இயல்பிற் பிரகாசிக்கப் பயில்வதே ஞானப் பயிற்சியாகும்.

சிங்கத்தின்பால் தோன்றும் ஆட்டியல்பு, சேர்க்கையாலாய பிராந்தியேபோல்: ஜீவன்பால் தோன்றும் தேகபாவமும், அஞ்ஞானத்தால்—சொரூப வுணர்வு இன்மையால்—ஏற்பட்ட பிராந்தியேயாம். பிரதிபிம்பம், பிம்பத்தினும் வேருகாததுபோன்று: சிதாபாசரூப ஜீவஞகிய தான் சித்துருவப் பிரம்மத்தினும் வேருனவனன்று: என்னும் தனது சொரூப உண்மையைச் சுருதி-யுக்திகளால் நிச்சயித்தல் எளிதேனும்; அநுபூதியிற்காணல் அரிதாகும். சொரூப நிச்சயத்துக்கு விவேகமே போதும்: சுவாநுபூதிக்கு வைராக்கியத்தோடு கூடிய சாதனமும் வேண்டும்.

குடி முதலிய கூடா வொழுக்கங்களிற் பலகாலம் பழகியோர், அவற்றின் தீமைகளை அநுபவத்தாற் கண்டபிறகும்: அத்துர்ப்பழக்கங்களினின்று முற்ருன விடுதலை யடைதற்கு வைராக்கிய சித்தத்துடன் நெடுங்காலம் முயற்சிக்கவேண்டி யிருத்தல்போல்: தேகாபிமானத்தால் எண்ணறும் பிறவிகளிற் கட்டுண்டு கிடக்கும் ஜீவனும், ஜனன மரணமாதிய துன்பங்களை அநுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டபிறகும்; அவ்வறியாமையின் அத்தியந்த நிவர்த்தியின் பொருட்டு விவேக-வைராக்கிய சஹித ஆன்மாநுசந்தானத்தில் நெடுங்காலம் ஈடுபடவேண்டியிருக்கிறது.*

---

* "தொக்க பிறவித் திரள்க டொறும்
தொடர்ந்து வந்த வாதனைதான்
மிக்க கால யோகத்தின்
பழக்கத் தல்லால் விடாது"

—வாசிஷ்டம்

"நெடுங்கால மான்மாவை நீங்காத வஞ்ஞானம்
விடுங்கால மெந்நாளோ மெய்ஞ்ஞானத் தாலெனவே:"

"அந்தகா ரங்குகையி லாயிரநா ளிருந்தாலும்
செந்தீபங் கண்டவுடன் தீர்வதுபோல்............"

—கீதாசாரத்தாலாட்டு

"..................................காண்பவெல்லாம்
சொற்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்

—கைவல்யம்

"இல்லா ததனுக் கிருப்பில்லை யுள்ளதனுக்
கில்லாமை யென்ப திலையெனவே—யில்லதுள
தென்னு மிரண்டி னியல்பதுதாங் கண்டார்மெய்
தன்னை யறிந்த தவர்"

—பகவத் கீதாசாரம்

என்பவாதிய ஆன்ேறோர் துணிவுக்குச் சான்ருகக் கூடியவர் மிகச்சிலரேயாவர். உத்தம அதிகாரிகளென்றும் தீவிரதர பக்குவிக ளென்றும் போற்றப் பெறுபவர் அத்தகையரே. "நூதன விவேகி யுள்ளம் நுழையாது: நுழையுமாகில்; பூதஜன்மங்கள் கோடிப் புனிதனும் புருடனுமே" என்னும் கைவல்ய சித்தாந்தப்படி, ஆன் மாநுசந்தானத்திற் பல்லூழிகாலம் பயிற்சியினராய் 'இனிப்பிறவா முடிவான ஜென்மத்தைப் பெற்ருர்க்கேயன்றி' 'தத்துவமசி' மஹா வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்தே 'அகம் பிரம்மாஸ்மி' என்னும் ஆன்மாநுபூதி கைவரப்பெறல் அசாத்தியம்.

31. ஒருமை யுணர்வே இருமையிற் காணல்

ஜீவனுர்த்தப் பிரவிர்த்தியாக நரசிம்ம மூர்த்தியாதிய வேடம் பூண்டோர், உணர்ச்சி மேலிட்டால் பல சமயங்களில்—சுயவுணர்வை இழக்கப்பெற்றவராகி — அவ்வவ் நாடக பாத்திர வியல்பிலேயே நடிக்கைபோல: ஊழ்வலியாற் போகார்த்தமாகப் பிறவியெடுக்கும் மனிதான்மாவும், பாவ பலத்தால்—சொருப ஞானத்தை இழக்கப் பெற்றதாகி— அவ்வவ் வுபாதிகளின் உணர்விலேயே வியவகரிக்கின் றது. இவ்வாற்ருல்: 'அகம் சொருப' உணர்வுக்கு இருவேறு தன்மை கள் உண்டு. அக்கினி இரும்பைப் பற்றுங்கால் – உலைக்களத்தில் - அவ்விரும்புருவிலேயே விளங்கல் போல்; உணர்வும் (ஜீவான்மாவும்)

உடலைப் பற்றுங்கால் (ஜாக்ர—சொப்பனங்களில்) அநேக பாவத்திலேயே வியவகரித்து நிற்கை ஒன்று; ஆகாயத்தைப் பற்றி நிற்கும் வாயு இயற்கையிற் சலனமுடையதேனும் ஒவ்வோர்கால்—நிச்சலத் தன்மையினதாய்—அவ்வாகாயத்தின்கண் அடங்கி நிற்கைபோல்: பரமான்மாவைப் பற்றி நிற்கும் உணர்வும் (ஜீவான்மாவும்) தான் இயற்கையில் பஹிர்முகத்ததேனும் ஒவ்வோர்கால் (சுழுத்தியில்) அகமுகத் தன்மையினதாய்—அப்பரமான்மாவின்கண்* ஒடுங்கி நிற்கை மற்றொன்று.

32. அறிவாய் நிற்பே ஆன்ம சமர்ப்பணம்

இவ்வாற்றால்: ஜாக்ர—சொப்பனங்களில் இருப்பதாயும், சுழுத்தி—மயக்கங்களில் இல்லாததாயும் காணப்பெறும், ஜீவான்மாவின் ஆரோபத்துக்கு ஆதாரம் பரமான்மாவே யாதலாலும்; பரமான்மாவின் இயற்கை எத்தகைய குணங்குறிகளாலும் பாவித்தற்கியலாத சுத்த மௌனமே யாதலாலும்; அந்தப் பர மௌனத்தையே சொரூப சாட்சாத்காரக் குறியாகப்பற்றி: அகமுகத்திற் சும்மாவிருக்கையே—உள்ளுணர்வு மாத்திரமாக நிற்கையே—ஆன்ம சமர்ப்பணமாம்.

33. தாமஸ-ராஜஸத் தவிர்ப்பு:தன் னிழப்பாம்

உயர்வற உயர்ந்ததும் உய்விற் சிறந்ததுமான பரலோக சாம்ராஜ்யத்தை வேண்டாதார் எவருமே இல்லையென்றாலும், எல்லோரையும் பல்லாற்றானும் சமயவாழ்வில் ஈடுபடுத்துவதே தர்ம சாஸ்திரங்களின் குறிக்கோளென்றாலும், 'பரமபதத்தைக் கூட்டுவிக்கும் செந்நெறிகளிற் பிரவிர்த்திப்போர்; அதன் சித்திக்காகத் தமது உடைமை

---

* சுழுத்தி காலத்தில் ஜீவன் அவித்தையில் ஒடுங்குமென்பது சுருதிகளின் வழக்காக இருக்க; இங்கு பரமாவின்கண் ஒடுங்குமென்பதன் கருத்து என்னையெனின்: சுழுத்தி—மயக்கம்—மரணம்—சமாதி ஆகிய காலங்களில்தான் மனதின் (ஜீவான்மாவின்) அபாவம் ஏற்படுகிறது. எல்லாக் காலங்களிலுமே அதற்குரிய ஒடுக்க ஸ்தானம் பரமான்மாவே யென்றாலும்; முதல் மூன்று நிலைகளில் உபாதியோடு ஒடுங்குவதால் மீளுந் தன்மையதாகிறது. சமாதியிலோ நிருபாதியால் ஐக்கியம் சித்திப்பதால் மீள்வதில்லை. இவ்வாற்றால்; மனதின் இவ்விரு வகைத் தன்மைகளுள்: முன்னதை ஒடுக்கமென்றும் பின்னதை நாசமென்றும் முறையே உருவமனம்—அருவமனம் என்ற பெயர்களாற் குறிப்பிப்பது நூல்களின் சம்பிரதாயம். ஈண்டு சுழுத்தியில் மனதில்லை என்பதே முக்கியம்.

களையயன்றித் தம்மையும் அறவே தியாகம் செய்யும் தீரராதல் வேண்டும்' என்னும் கடுமையான தர்ம நியதியைக் கேட்டவுடன்: "மோக்ஷபதம் தெய்வபதமேயென்றாலும் அதற்காக நம்மையே பலியிட வேண்டுமாமே! அறநெறிப் பிரவிர்த்திகளின் நோக்கமெல்லாம் சிரஞ்சீவியாதல்தானே! ஞானவேள்விக்கு நம்மையே ஆஹுதியாக்கி விடுவதானால்; நமக்குப்பின் அம்மோக்ஷ சுகத்தை அநுபவிப்பது யார்? நமக்கு உதவாத ஒன்றுக்காக நம்மையே ஏன் இழக்க வேண்டும்? இது: வட்டிக்காக முதலையிழக்க வேண்டுமென்ற—நிறைவேற்ற முடியாத—விசித்திர விதியாகவன்றோ இருக்கிறது! சன்மார்க்க முயற்சியென்பது தற்கொலை முயற்சிதானோ??" என்பவாதிய பயங்கரப்பேய்கள்—கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல்—தோன்றித் தத்துவாநுசந்தானத்தை முழு மனதுடன் கடைப்பிடிக்கவோ அல்லது அறவே கைவிடவோ முடியாதவாறு பலரைத் தர்மசங்கடத்தில் நிறுத்தித் 'தடைப்பட்டான் மேற்கதியும் தடையதாமே' என்னும் ஆன்றோர் அநுபவத்துக்கேற்பச் செய்வதறியாது திகைப்புறச் செய்துவிடுகின்றன. சுருதிகளின் ஆராய்வாலும், சற்சங்க சேவையாலும் இம்மயக்கத்திற்கு விமோசனம் ஏற்படுதற்குள்,—இவர்களிற் சிலரை—நாஸ்திகப் படுகுழிக்கும் இரையாக்கி விடுகின்றன. பெரும்பான்மையோர்க்குச் சமய வாழ்வில் ஊக்கம் ஏற்படாமைக்குக் காரணம்; இத்தகைய விபரீத சந்தேகங்களே யென்றாலும்: உய்த்துணர்வார்க்கு இவை வீண் பிரமைகளெனத் தெளிவாதல் திண்ணம். என்னையெனின்:

சத்துவ குண சொரூபியாகிய புருஷன், தான் எதார்த்தத்தில் எவ்வித பந்தமுமற்ற பரமான்மாவாகவே யிருந்தும்—ராஜஸ—தாமஸ வடிவ மனதின் சேர்க்கையால்: தானல்லாத தேகத்தைத் தானாகப் பாவிக்கும் பொய்யியல்பினனாகி—மனிதான்மாவென்றும் ஜீவான்மாவென்றும் வியகரிக்கப் பெறுகிறான். மனிதனது சகல பந்தங்களுக்கும் தேகோகபாவமாதிய ஜீவத்தன்மையே காரணமாதலால்: இச்சேர்க்கை தோஷத்தின் நிவிர்த்தியே—ராஜஸ தாமஸ குணங்களில் வியவகரிப்பதாகிய தனது பொய்ம்மையின் தியாகமே—தன்னிழப்பின் பொருள். அதாவது பொய்யாகிய தன்னை-ஜீவநிலையை-இழந்தால், மெய்யாகிய தன்னை-பிரம்ம நிலையை-அடையலாமென்பது கருத்து. இவ்வாற்றால்; முத்தி நிலையில் எவனும் தன்னை முற்றாக இழந்தவனாகான். எப்படிப் புறவாழ்க்கையில் நன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்போன்; காமக்குரோதமாதிய துர்க்குணங்களை இழக்கையால் தன்னை இழந்தவனாவதில்லையோ: அப்படியே, அகவாழ்விற் சன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்போனும்; மல விக்ஷேபங்களாகிய ராஜஸதாமஸ இயல்புகளை இழக்கையால் தன்னை இழந்தவனாவதில்லை.

பல்வேறு துன்பங்களுக்குக் காரணமான வாத பித்த ரோகங்க ளால் பொலிவற்றிருக்கும் உடல்; அவற்றின் நிவிர்த்தியால் ஆரோக்கிய மூற்று வண்மை திண்மைகளுடன் சோபிக்கப் பெறுவதைப்போலவே: ஜனன-மரண வியாதிகளுக்குக் காரணமான ஆணவ மயக்கத்தால் ஸ்சொருப விளக்கமற்றிருக்கும் உயிரும்; அகந்தையாகிய ஜீவத் தன்மை யின் நிவிர்த்தியால் சுவாநுபூதி பெற்றுத் தனது இயற்கையில் கேவல சத்துவ சொரூபியாகப் பிரகாசிக்கப் பெறும்.*

34. சாட்சி நிலையே தன்னியற் குறியாம்

மனிதனது இயற்கை சுத்த சத்துவமே.* சுபாவ நிலையிற் சாட் சித்துவத்தையே சொரூபமாக வுடைமையால் துரியனெனப்படுகிறான். இயற்கை நிலையில் எத்தகைய பந்தமுமில்லை யென்றாலும்; மனதின் சேர்க்கையால் - சுட்டுணர்வால் - நிலையினின்று நழுவும்போது - கண் ணாடியிற் பிரதிபலிக்கும் நாநாவுருவங்களைப்போல்-தன்பால் பிரதிபலிக் கும் தூல-சூக்கும-காரண தேகங்களையே (சாக்கிர-சொப்பன-சுழுத்தி யவத்தைகளில்) நான் நான் என்று அபிமானிக்கும் பொய்த் தன்மை யுடையவனாகி: அச்சரீர தர்மங்களாகிய ஜனனமரண சுகதுக் கங்களாற் பீடிக்கப் பெறுகிறான். இவ்வாறாய திரிபு நிலையிற் புருட னுக்குச் சொரூபாநுபவமின்மையாலும்; ஐம்பொறிவாய் வெளிப்பட்டு

---

*"மனதுசத் துவசொருபம்: மற்றி ரண்டும்
வந்துகலந் தன: அவற்றை மாற்றி னாற்போம்:
தனதுசன்மார்க் கத்தைவிடா திருந்த போது
தமோ குணமும் ரசோ குணமும் சமிக்கும்: பின்னைக்
கனபரிணா மஞ்சலனம் போம்:போ னக்காற்
களங்கமற்று நின்றவா காசம் போலும்
நினதுளம்அப் படியாமப் பிரமத் தொன்றாய்
நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே"

—கைவல்யம்

"உளமென்று சொன்னதுவே ஒன்றுமன்று
கரையறுபல் பவந்தருவா தனையே உள்ளம்
கண்டதனை யறிந்திடினக் கவலையில்லை"

--ஞானவாசிஷ்டம்

* சுத்தமாம் சத்துவமே உண்மையாகும்
துகளிருள்போ னால்மனமென் சொல்லும் போம்போம்

--கைவல்யம்

விஷயங்களிற் சஞ்சரிக்கையாலும் ஜீவனெனப்படுகிறான். சற்குருவால் அநுக்கிரகிக்கப்பெறும் மெய்யுணர்வால் தனது உண்மை நிலையை உணர்ந்து காட்சித் திரயங்களுக்கு விலட்சணனாய்: அவற்றிற்குச் *சாட்சி மாத்திரனாக நிற்கப்பெறும் பயிற்சியே ஆன்ம சமர்ப்பணப் பயிற்சியாகும். சிந்தையின் தோற்றவொடுக்கங்களுக்குத் தானே நிலைக்களனாதலால்: சாட்சிநிலையின் இடைவிடாத அநுசந்தானத்தால் மனதின் தோற்றம் சிறிது சிறிதாகக் குறையப்பெற்று சாதன முதிர்ச்சியில் முற்றும் மறைந்தொழியும்.※ அப்பால் காட்சியில்லாவிடத்துச் சாட்சித்துவமுமின்றிச் சொரூப சாட்சாத்கார சித்தனாக விளங்கப் பெறலால்: ஜீவன்முக்தனெனப் படுகிறான். அதீதமென்பதும் சற்பாவ மென்பதும் சுவாநுபூதியின் சஹஜ ஸ்திதியேயாம். சொரூபவழிபாடே (தன்மய நிட்டையே) கடவுள் வழிபாடாம். சொருபத்தியான வியாக்கியானங்களாய "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவாசகம்) "அருளா லெவையும் பார்" (தாயுமானவர்) "பரமாம் பிரஞ்ஞையினாற் பார்" (ஞானசார விசார படலம்) "சும்மாவிரு" (கந்தரநுபூதி) என்னும் உபதேச வாக்கியங்களில் வரும் 'அவனருள்' 'அருட்பார்வை' 'பரப்பிரஞ்ஞை' 'மௌனதிருஷ்டி' என்னும் அமுத மொழிகள் ஸ்திதப் பிரஞ்ஞையை (இருப்புணர்வு மாத்திர ஸ்திதியை)யே குறித்து நிற்பனவாம்.

---

* "ஆக்கி யளித்துத் துடைக்கும் — தொழி
லத்தனை வைத்துமெள் ளத்தனையேனும்
தாக்கற நிற்கும் சமர்த்தன் — உள்ள
சாட்சியைச் சிந்திக்கத் தக்கது தோழி:

சிந்தை பிறந்தது மாங்கே — அந்தச்
சிந்தை யிறந்து தெளிந்தது மாங்கே
எந்த நிலைகளு மாங்கே — கண்ட
யான்று விரண்டற் றிருந்தது மாங்கே."

—தாயுமானவர்

※ "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே"

—மணிவாசகர்

35. வினையுடல் வாழ்க்கை விதிவழி யாகும்

தன்னிழப்புக்குப்பின்—மனோ நாசத்துக்குப்பின்—தேகரக்ஷணை நடைபெறல் எங்ஙனம்? என்று ஆரம்பசாதகர் ஐயுறக்கூடுமேனும்; அது கர்த்தவ்வியத்தின் பிராந்தியாகும். என்னையெனின்:

எவனும் தனது உடலைத் தானே சிருஷ்டித்துக்கொள்வதில்லை. அது வினையின் விளைவு. விதியின் நிர்வாகத்தில் இருப்பது. ஊழ்வழி உஜ்ஜீவிப்பது. இதுவே உடல் வாழ்க்கையின் எதார்த்த நிலையாகும். இவ்வாறு: உடலின் உற்பத்தி–ஸ்திதி–லயங்களைக் குறித்த உண்மைகளை அறியாவிட்டாலும், அதன் ஜீவியமும் அநுபவமும்–வகுத்தான் வகுத்தவாறே யல்லால்–தனது இஷ்டப்படி நடைபெறுவதில்லை* என்பதைப் பாமரனும் அறிவான். என்றாலும்; உடலின் பராதீன தத்துவத்தைத் தினசரி நிகழ்ச்சிகளே பல்லாற்றானும் பிரத்தியட்சப் படுத்திக்கொண்டிருக்கையிலும்: கர்த்தவ்விய பாவத்தால் கோபுரந் தாங்கியாக நடிப்பதுதான் அறியாமையின் விசித்திரமாகும். ஊழின் நியதியைச் சுருதி—யுக்தி—அநுபவங்களால் தெளிவாக உணரப்பெறும் புத்திமான்களும்; தம்மை அகந்தைக் கட்டினின்று சுலபத்திலும் சுய முயற்சியிலும் விடுவித்துக்கொள்ளுந் திறனற்றவராய்:

"என்செய லின்றி யாவுநின் செயலென்
றெண்ணுவே னெவ்வொரு காலம்;
புன்செயல் மாயை மயக்கின்,என் செயலாப்
பொருந்துவே னஃதொரு காலம்;
பின்செயல் யாதும் நினைவின்றிக் கிடப்பேன்;
பித்தனேன் நன்னிலை பெற:நின்
றன்செய லாக முடித்திடல் வேண்டும்
சச்சிதா னந்தசற் குருவே!"

"உளவறிந் தெலா நின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவி லானந்த மளித்தனை; யறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வண மமைத்தனை; கருத்துத்
தளருந் தன்மையிங் காரொடு புகலுவேன்: தக்கோய்!"

---

* "வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
வெனைத்தாய நூலகத்து மில்லை" —ஔவையார்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" —வள்ளுவர்

"எனக் கெனச்செயல் வேறிலை: யாவுமிங் கொருநின்
றனக் கெனத்தகும்: உடல்பொரு ளாவியுந் தந்தேன்:
மனத் தகத்துள வழுக்கெலா மாற்றியெம் பிரான்!நீ
நினைத்த தெப்படி யப்படி யருளுதல் நீதம்."

—தாயுமானவர்

"ஊனைக் காவல் கைவிட் டுன்னை
யுகப்பா ருணர்வாரே" —தேவாரம்

என்று பரிபூரண சரணாகதியால் இறைவன் திருவருட் சகாயத்தை நாடி நிற்கையே: மாயையின் அபார வன்மைக்குச் சான்றாகும்.

"ஞான நூல் கற்றாலும் நற்றுறவு பூண்டாலும்
மோன சமாதி முயன்றாலும்—தானாகி
எல்லாக் கவலையும்விட் டின்புற் றிருப்பதுவே
சொல்லாரு முத்திச் சுகம்"

—சொரூபசாரம்

என்பதாதிய சுவாநுபூதி வாக்குகள், கவலையின்மையையே மோக்ஷ நிலையென்று உணர்த்தலாலும்; கர்த்ருத்வத்தின் நிவிர்த்தியாலன்றிக் கவலையின் நிவிர்த்தி கூடாமையாலும்; அவ்வொன்றன் (அகந்தையின்) நிவிர்த்தியே ஜென்ம சாபல்யத்திற்குப் போதுவதாகிறது. இவ்வாற்றால்: மஹர்ஷி, மோக்ஷ நிலையையும் மோக்ஷ சுகத்தையும்பற்றி விளக்கும்போது:

"மோக்ஷம்; மோக்ஷம்: என்றால் என்ன ? சொர்க்க லோகமும் சொர்க்க சுகமும் வேறு எங்கேயோ—ஆகாயத்தில்—இருப்பனவா ? இந்த உலகையும் இவ்வுடலையும் விட்டபின்: வேறு உலகில் வேற்றுடலில் அநுபவிக்கும் பெற்றினவா ?? உள்ளந்தான் 'பரலோகம்': பரமோனவடிவ உபசாந்தியே பரமானந்தம் (மோக்ஷசுகம்): கவலையின் நிவிர்த்தியே பரமார்த்தப் பிராப்தியாகும். உள்ளுணர்வின் ஸ்திதியால்: பேரின்பப் பெருவாழ்வை இவ்வுலகிலேயே இவ்வுடலிலேயே எப்பொழுதும் எந்நிலையிலும் பெறலாம். 'இம்மைப்பேறு' 'அம்மைப் பேறு' என்பன: முறையே புறவாழ்வையும் அகவாழ்வையுமே குறிப்பனவாம். "யானெனை தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்" என்னும் தமிழ் மறை வேறுலகையும் வேறுடலையும் குறிப்பதன்று."

என்று கூறுவதுண்டு.

எனவே: அஞ்ஞான நிலையில் மேற்கொண்டிருந்த உடற்காப்புப் பொறுப்புகளைத் துணிவுடன் விதியின் (ஆண்டவன்) வசமே பரிபூரணமாக ஒப்புவித்து விட்டுச் சொப்பனத்திலும் அதைப்பற்றிய சிந்தனையின்றிச் சுபாவ ஸ்திதியில் நிற்கையே; முற்றுன தன்னிழக்கையெனல் தெளிவு. சுவாநுபூதியின் சஹஜ நிலைக்குக் கர்த்தவ்யமின்மையே தெளிவான அத்தாட்சியாகும்.*

காட்சி 8.

தெளிவியல்.

ஜீவப்பிரம்ம ஐக்கியத்தைக் குறிக்கும் மோக்ஷப்பேறு அத்துவித நிலையினதேனும், அதைச் சுருதிகள் 'ஜீவன் முத்தி' 'விதேக முத்தி' என இருதிறத்தனவாகக் கூறலாலும்; ஜீவன் முத்தியில் தோன்றும் பசியாதிய உணர்ச்சிகளும் உண்ணலாதிய நுகர்ச்சிகளும் விதேக முத்தியில் தோன்ருமையாலும்; அவ்விரண்டுக்கும் உண்மை நிலையில் ஏதேனும் பேதமிருத்தல் கூடுமோவெனச் சிலர் சங்கிக்கின்றனர்.※ "அருளும் பொருளும் அபேத மாயினும்: இருதிறன் என்னும் இயலு முண்டு" (அருளையர்) என்பதாதிய ஆன்ரோர் அநுபவங்களும் (வாச்சியார்த்தத்தால்) அதற்கு ஆதாரமாகத் தோன்றினுலும்: அது பாவனையே என்பது துணிபு. என்னையெனின்: மோக்ஷபதம் புதுமையதாயின் அதைக் குறித்த ஆராய்ச்சி; அவசியமும் பயனுடையதுமாம்.

"இந்த நிச்சய முத்தரு ளநுபவ மிருப்பதெப் படியென்ருல்:
சிந்தை யற்றபூ மண்டல ராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர்;
பந்த முத்திகள் மறந்துபோம்; உண்டென்று பலர்சொலின் நகையாவர்;
அந்த ரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ!"

—கைவல்யம்

---

* "எத்தனை நாள்ஞா தாவும் ஞானமு மிருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டும்: அப்பாலோர் செயலும் வேண்டா:
நித்தமும் வெளிபோற் பற்ரு ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர் விதேக முத்திபெற் றிருப்பா ரென்றும்"

—கைவல்யம்

※ அருள்—துரியம்: பொருள்—அதீதம். 'ஆயினும்' 'இயலும்' என்னும் பதங்களிலுள்ள இரு உம்மைகளும்: முறையே சித்தாந்தபக்ஷ முடிவையும் பூர்வபக்ஷ முடிவையும் குறித்து நிற்கை ஈண்டு உணரற்பாற்றும்.

என்பதாதிய சுருதிகளால்: முத்திப்பதம்; மலடிமைந்தன்—கந்தர்வ நகரம்—முயற்கோடு என்பவாதிய சொற்களேபோல் பொருளற்றதாக முடிவதாலென்க. மற்றும்: பந்தநிவிர்த்தியே முத்தியென்கையால், பந்தம் உண்மையானுலன்றே; முத்தியும் உண்மையாதல் கூடும்? பார்வை தோஷத்தால் உண்மைபோல் தோன்றும் வெயில் மஞ்சள்; அத்தோஷ நிவிர்த்தியால் இன்மையாதலைப்போல: அஞ்ஞான நிலையில் உண்மையாகத் தோன்றும் பந்தம்; மெய்ஞ்ஞான நிலையில் இன்மை யாதல் ஆன்றோர் அநுபவம்.

நித்தியம் நின்மலம் நிட்களம் நிராமயம் நிராகாரம் நிரஞ்சனம் முதலிய இயல்புகளையே சொருபமாக வுடையதும்; சச்சித்தாயும் என்று முள்ள எங்கும் நிறைந்த இயற்கையாயுமுள்ள பரமான்மா, அகண்ட நிலையால் (பரிபூரண நிலையால்) அத்துவிதப் பொருளாதலாலும்; அதுவே மனிதனது உண்மை வடிவாதலாலும்; அன்னியமற்றஅது: ஓர்போதும் ஒன்றுலும் பந்திக்கப் பெறுவதில்லை. பந்தமே இல்லாதபோது: முத் தியுமில்லை. இவ்வாற்ருல்: இல்லாத முத்திக்கு அநுபவங்கூறல்; இல்லாத இலக்கியத்திற்கு இலக்கணம் கற்பித்தலாகும்.

"மலடி மைந்தனும் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலைபேசிக்
கலக மாய்முயற் கொம்பினுல் குத்தியே களைத்திரு வரும்மாண்டார்:
அலகை யாயினர்: எனும்விவ காரத்தை அறிந்தவன் மயங்கானே"

என்று: பந்த முத்திகளின் பிராந்தியைக் கைவல்லிய நவநீதம் தெளி வாக்கல் காண்க.

36. முத்தி யிரண்டெனல் மொழியள வினதே

பந்தமுத்திகளின் கற்பனைகளைக் குறித்து;—

"பத்தனு னென்னுமட்டே பந்தமுத்தி சிந்தனைகள்
பத்தனு ரென்றுதன்னைப் பார்க்குங்கால்—சித்தமாய்
நித்தமுத்தன் ருனிற்க நிற்காதேல் பந்தசிந்தை
முத்திசிந்தை முன்னிற்கு மோ!"

"..ஆயுமகந்தை
யுருவழிதல் முத்தி யுணர்"

என்று மஹர்ஷி கூறுதலால்; முத்தியைப்பற்றிய உணர்வுகள் அகந்தையின் சேஷத்தையே குறிப்பனவாகின்றன. மந்தரைக் குறித்து மோக்ஷப் பிராப்தி பூர்வபட்சத்தால் அங்கிகரிக்கத் தகுவதேனும்; அதிற் பேதமில்லை யென்பதை அதைக் குறிக்கும் ஜீவன் முக்திப் பதமே தெளிவாக்குகிறது. எங்ஙனமெனின்: முத்தியென்பது சிச்சடக் கிரந்தியின் நிவிர்த்தியே யன்றித் தேகத்தின் நிவிர்த்தியன்று. தேக நிவிர்த்தியே முத்திப் பிராப்தியாயின்: எல்லா உயிர்களுமே தேக நிவிர்த்தியால் முத்திக்கு உரியனவாம். இது: சுருதி–யுக்தி–அநுபவங்கட்கு உடன்பாடன்று. இவ்வாற்றால்: பிறப்பிறப்புகளுக்குக் காரணமான ஜீவபாவத்தின் நிவிர்த்தியே முத்தியாதலால்; ஜீவன் முத்தி நிலையிலேயே புருஷன் விதேகனுதலையும்; அதற்குப்பின் அவன் பெறத்தக்கது வேறில்லை யெனலையும்; "ஜீவன் முக்தன்" என்ற சொல்லே விளக்கி நிற்றல் காண்க. (ஜீவன் முக்தன்—ஜீவத்துவமற்றவன்)

ஜீவன் முத்தி ஸ்திதியைக் குறிக்கும் 'ப்ரஜ்ஞான நிலை' கேவல ப்ரஹ்மத்தின் சிற்சொரூபமாதலாலும்; சுத்த சத்துக்கும் சுத்த சித்துக்கும் நித்தியம்—பூரணம்—அத்துவிதம் என்பவாதிய இயற்கையில் சிறிதும் பேதமின்மையாலும்; ஜீவன் முத்தியில் பரமான்ம சொரூபமாகப் பிரகாசிக்கும் 'ப்ரஜ்ஞானம்' விதேக முத்தியிலும் கேவல சத்தாகவே பிரகாசிக்கப் பெறுவதன்றி, எவ்வகைப் போக்குவரவும் அடைதலில்லை.* 'ப்ரஜ்ஞானம்—ப்ரஹ்மம்' என்னும் முதல்வேத மஹாவாக்கியமும் கேவல சத்துக்கும் கேவல சித்துக்கும் அபேதத்தையே குறித்து நிற்றல் தெளிவு. (இதன் விரிவை இந்நூலின் 10–வது காட்சியில் காண்க)

---

* ஏகமாயும் வியாபகமாயுமுள்ள மின்சக்தி, அருவத்தன்மையால் காட்சியாவதின்றேனும்; விளக்குகள் மூலம் பிரகாசத்தால் தனது இருப்பை உணர்த்துவதுபோல: அத்துவிதமாயும் அகண்டமாயுமுள்ள பரமான்மா, அதீதத் தன்மையால் திரிபுடித் தோற்றத்தில் காட்சியாவதின்றேனும்; அந்தக்கரணத்தின் மூலம் 'நான் நான்' என்ற உள்ளுணர்வால் தனது இருப்பை உணர்த்தி நிற்கிறது. எந்த விளக்கு உடைகிறதோ, அதன் மூலம் பிரகாசித்துக் கொண்டிருந்த மின்சக்தி; தனது பிரகாசத்தைத் தன்னில் அபேதமாக ஒடுக்கிக்கொண்டு இயற்கையில் நிலைபெறல்போல்: எந்த அந்தக்கரணம்; நிவிர்த்தியாகிறதோ, அதன் மூலம் பிரகாசித்துக்கொண்டிருந்த சின்மயமான பரமான்மா; தனது இயற்கையில் சன்மாத்திரமாகவே நிலைபெறும்.

37. சத்தியோ முத்தியே சார்பர முத்தியாம்

பரம பதத்தில் ஜீவன் முத்தியென்றும் விதேகமுத்தி யென்றும் இருவேறு நிலைகள் இல்லையெனக் கண்டோம். இனி:—

"சூக்குமந் தனது காரண மடையத்
தூலமிங் ககன்றதே யென்றால்
சூக்குமந் தனது காரணம் விடுத்துத்
தூலமொன் றெடுத்ததென் றுணர்வாய்
—சுத்த சாதகம்

"உலகநெறி போற்சடல மோயவுயிர் முத்தி
யிலகுமெனல் பந்த வியல்பே பராபரமே"

"தேகம்யா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
யாகுநெறி நல்லநெறி யையா பராபரமே"

"முத்தியிலுந் தேகமிசை மூவிதமாச் சித்திபெற்றோர்
எத்தனைபே ரென்றுரைப்ப தெந்தாய் பராபரமே"
—தாயுமானவர்.

என்பவாதிய ஆன்றோர் வாக்குகளால்; சிலர், பரமான்மாவின் சொருப சித்தியாகிய முத்தி நிலையை; தேகத்தோடு சம்பந்தப்படுத்தி முத்திறத்திற் கூறுவதன் தாற்பரியம் என்னையெனின்; அது; அனைவர்க்கும் முத்தியில் அபேக்ஷையுண்டாக்கற் பொருட்டதாம். எவ்வாற்றாலெனின்: ஜீவான்மாவுக்கே யன்றிப் பரமான்மாவுக்கு உடல்நாட்ட மில்லாமையாலும்; பரமான்மா உடலின்கண் உறைகையிலும்—புளிம்பழ விதையேபோல்—அதன் சம்பந்தமற்றிருக்கையாலும்; நிருபாதிகமான பரமான்மாவின் இயற்கையான விமுக்தி நிலையை மேற்கூறியவாறு உபாதியோடு சம்பந்தப்படுத்தல்; உபாதி நாட்ட முடையாரைக்குறித்த பூர்வபட்சத்தாலன்றிச் சித்தாந்தபட்சத்தால் அன்று. மற்றும்: மஹர்ஷியின் மஹாநிர்வாண சித்திக்கும் அவ்வமயம் ஆகாயத்திற் பளிச்சிட்ட மாபெருஞ் ஜோதிக்கும் கற்பிக்கப்பெறும் சம்பந்தத்தைக் குறித்து ஆராய்வோம்.

முத்திநிலையைக் குறித்துச் சில சுருதிகளிற் கூறப்பெறும் 'கிரம முத்தி' 'சத்தியோமுத்தி' என்னும் இருவகையுள்; பக்தர்களாலும் யோகிகளாலும் அடையப்பெறும் கிரம முத்தியின் பகுதிகளில் யாதாமொன்றன் சின்னமாக அவ்வொளிக் குறியைக் கொள்வதாயின்:

அதற்குச் சுருதியாதாரமுண்டு. ஆனால்: பரஞான சித்தரான பகவான் போன்ற மஹா புருஷர்களுக்கே உரியதும்: உயர்வற உயர்ந்ததுமான: சத்தியோ முத்தியின் அறிகுறியாக அதைத் துணிதற்கில்லை. எங்ஙன மெனின்: கிரமமுத்திகள் தேக மறைவுக்குப் பின்னர் வாய்ப்பனவாக: சத்தியோ முத்தியாகிய பரமுத்தியோ தேகமுள்ளபோதே இயற்கை யான நித்தியாபரோக்ஷ சுவாநுபூதிவடிவிற் சித்திக்கையாலும்; அதுவே முத்தியின் முடிந்த நிலையாகையாலும்; என்க. மற்றும்:

"அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடல்நீ ருகும்
பெரியதூ லமுங்கா லத்தால் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் குமசரீரம் உலையிரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தில் இறந்து போமே"

"கடமெனும் உபாதி போனால் ககனமொன் றானாற் போல
உடலெனும் உபாதி போன வுத்தரம் ஜீவன் முத்தர்
அடிமுடி நடுவுமின்றி அகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்"

என்னும் கைவல்லியத்தின் சித்தாந்தத்திற்கிணங்க அகண்டமும் பூரணமுமான இருப்புணர்வையே சொரூபமாகவுடைய ஜீவன் முக்த னுக்கு மறு ஜென்ம மின்றென்பதும்; மஹா நிர்வாண நிலையில் அவனது பிராணன்—உலையிரும்பிற் கலக்கப்பெறும் தண்ணீரைப் போல்—கரணேந்திரியங்கள் சகிதம் பிரம்மத்தில் ஐக்கியமாகப் பெறலால், அது மீண்டும் அந்நிய லோகத்தையோ அந்நிய சரீரத்தை யோ நாடிச் செல்வதில்லை யென்பதும்; தெளிவாதல் காண்க. மற்றும்:

"ஞானி எப்போது ஜீவத்தன்மையை இழந்தானோ அப்போதே உடலையும் இழந்தவனாவான். தோலின் நிவிர்த்தியால் பாம்பின் தோற் றத்தில் எத்தகைய மாற்றமும் சம்பவியாமை போலவே: உபாதியின் நிவிர்த்தியால் ஜீவன் முத்தனது சொரூபநிலையில் எவ்வித மாற்றமும் சம்பவிப்பதில்லை*"

---

* "பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷி இன்று தமது உடலை நீத்துவிட்ட தாக உலகம் பேசுகிறது. அன்னாரின் விதேக சித்தியைக் குறித்து யார் என்ன நினைத்தாலும், அவர் என்று அகந்தையை நீத்தாரோ; அன்றே உடலையும் நீத்தவரானார்: இதுவே உண்மை." என்று மஹர்ஷியின் மஹா நிர்வாணத்தைக் குறித்த ஆசார்ய வினோபாஜீயின் பொன்மொழி களுக்கும் மேற்கூறிய மஹர்ஷியின் வாக்குகளுக்கும் உள்ள கருத் தொற்றுமை ஈண்டு சிந்திக்கற்பாற்றும்.

என்னும்—முத்தியைப்பற்றிய—பகவான் வாக்குகளுக்கும்: பிறப்பிறப்புகளை மித்தையென்பதும் பகவானுக்கு உடன்பாடானது மான அத்துவித சித்தாந்தத்திற்கும்: அது முரணுதல் காண்க.

இவ்வாற்றால்; தர்ம ஸ்தாபனார்த்தமாகவும் துஷ்ட நிக்ரக—சிஷ்ட பரிபாலனத்திற்காகவும் தோன்றிய சில உலகப் பெரியார்க ளின் பிறப்பிறப்புகளில் ஏற்பட்டனவாகக் கூறப்பெறும் இத்தகைய தெய்விகக் காட்சிகள் அத்துவிதபரமான ஜீவப்பிரம்மைக்கியக் குறிக ளாகாவெனல் துணிபு.

இனி; பந்தமுத்திகளின் கற்பித நிலையைச் சுருதிகளாலும் குரு மொழிகளாலும் ஐயமறத் தேர்ந்தாலும்;

"கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வுற்பவநோய் மாறுமோ ?—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினவர்க் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்"

—தாயுமானவர்

"என்னையான் கண்டபடி யிப்புவியி லெல்லோரும்
தன்னைத்தான் காணத் தகுங்காணும்—சொன்னேன்
ஒளிநாட்ட மோடுமன முண்ணாட்டம் பெற்று
வெளிநாட்ட மாகா விடின்."

—சொரூபானந்தர்

என்பவாதிய அறிவுரைகளால், பெரியோர்கள் அபரோக்ஷாநுபவத் தையே பெரிதும் வற்புறுத்தலால்; சொரூப சாட்சாத்கார சித்தியின் பொருட்டு: மஹர்ஷியால் அருளப்பெறும் உபாயங்களைக் காண்போம்.

38. சாகப் பயில்வதே சாதனத் திறனும்

பிரம்மத்தை அறிந்தவன் பிராம்மணனென்றும்; இருபிறப்பால் பிராம்மணத்துவம் சித்திக்கிறதென்றும்: எந்த சரீரத்தில் ஜீவான்மா வாகப் பிறந்தானோ—அந்த வர்த்தமான—சரீரத்திலேயே—பிறப்பிறப்பு களுக்கு ஏதுவான ஜீவத்தன்மையை இழந்து, பிறப்பிறப்பற்ற பரமான்ம வியல்பை அடைவது இருபிறப்புத் தத்துவமென்றும்; மௌனாநுசந்தானத்தால் பிராப்தியாகத்தக்க நிர்விசேஷ சின்மாத்திர சொரூபமான தனது சுபாவமே பரமான்ம சொரூபமென்றும்; கூறப் பெறுவதால்; ஜனன மரண துக்க நிவிர்த்தியை வேண்டுவோர்,

முதலில் சாகக் கற்கவேண்டும். அதாவது: மனதை அழிக்கப் பயில வேண்டும். ஒரு விருத்திக்குக் கூட இடந்தராமையே அப்பயிற்சியாம்.* இதுவே மஹிர்ஷியால் அருளப்பெறும் பிரம்ம சாட்சாத்கார சித்திக் கான உபாயமாம்.

"சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

"சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது"

என்பவாதிய ஆப்த வாக்குகளால் மனமிறக்கக் கற்பதே பிரம்ம வித்தை யென்றும்; மனதை அடக்குவதினும் கஷ்டம் வேறில்லை யென்றும்; ஆன்றோர் பலரும் ஒருமிக்கக் கூறுதலால்: மனதை அழித் தற்கு அதன் இயல்பையும்; உணர்வை வயப்படுத்தும் அதன் திறனையும்; நன்கு ஆராய்வது அவசியமாகிறது.

39. தனைவிடா தமையின் நினைவெலா மழியும்

எண்ணங்களின் தொகுதியே மனம்.※ மனதின் மூலம் அகந்தை யாதலால் அகந்தையின் அழிவே மனதின் அழிவாம். மனதின் உருவை விசாரிப்பதே அதை அழிக்கும் உபாயமாகிறது.£ நானென்னும் உணர்வுக்கு எதார்த்தமென்றும் போலியென்றும் இருவித நிலைகள் உண்டு. ஹிருதயத்தில் இடையறாது உள்ளுணர்வு மாத்திரமாகச் சுடர்வதே அதன் இயற்கை நிலை. உச்சியிலுள்ள அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்து விருத்திகளாக விரிவது அதன் போலி நிலையாம். இவ்வாற்றால்: சாதகன் தனது எதார்த்த சொரூபத்தை அபரோக்ஷத்தில் அறிதற்கு விருத்திநிரோதனம் வேண்டுமென்றும்; நானார் விசாரணையே

---

* "உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த
லதுகன்மம் பத்தியு முந்தீபற
வதுயோக ஞானமு முந்தீபற"

※ "எண்ணங்களே மனம் யாவினு நானெனும்
எண்ணமே மூலமா முந்தீபற
யானு மனமென லுந்தீபற"

£ "மனத்தி னுருவை மறவா துசாவ
மனமென வொன்றிலை யுந்தீபற
மார்க்கநே ரார்க்குமி துந்தீபற"

—உபதேசவுந்தியார்

அதற்குச் சாதனமென்றும்: கூறப்பெறுகிறது. "நானுர் ?" விசாரமோ; ஒளி இருளைத் தேடுவது போல்: அறிவு அறியாமையைத் தேடுவதாகிறது. ஒளியில் இருளும் இருளில் ஒளியும் பரஸ்பரம் அபாவமாவதைப்போல, அறிவில் அறியாமையும் அறியாமையில் அறிவும் பரஸ்பரம் அபாவமாதலாலும்; அறிவே அறியாமையாக மாறுதலால் அறிவு தனது இயற்கையுருவில் நின்று அறியாமையை ஆராய்தல் கூடாமையாலும்; 'நானுர்' விசாரணை—அதாவது—அறிவு அறியாமையைத் தேடல் அசங்கதமாகத் தோன்றுமேனும்: ஆன்ம விசாரணையின் உட்கருத்து 'அறிவு அறியாமையாக மாருமல்—அதாவது—நினைவாக மாருமல் தனது சுபாவத்திலேயே—அதாவது—உள்ளுணர்வு மாத்திரமாகவே நிலைபெறல் வேண்டும்' என்பதாம். உள்ளுணர்வு தனது இயற்கை நிலையிற் சிறிதுந் திரிபின்றி நிற்றலே: தன்னை அடைவதும் அகந்தையை அழிப்பதுமாம். அறிவாகிய ஒளி இயல்பிற் பிரகாசித்துக் கொண்டிருக்கிற வரையில்: அறியாமையாகிய இருள் தலை காட்டாதென்பது சித்தாந்தம். இதை;

"போத மென்ப தேவிளக் கொவ்வு மவித்தைபொய் யிருளாம்
நீதி லாவிளக் கெடுத்திரு டேடவுஞ் சிக்கா
தாத லாலறி வாய்நின்ற விடத்தறி யாமை
யேது மில்லையென் றெம்பிரான் சுருதியே யியம்பும்"

என்று ஸ்ரீ தாயுமானவர் வலியுறுத்தல் காண்க.

ஆக: அறிவின் சாயையாகிய விருத்திகளுக்கு ஆதாரம் அறிவேயென்பதும்; அறிவு தனது சுபாவமாகிய சுத்த மோன நிலையினின்று நழுவாது நிற்கையில் விருத்திகளாகிய நிழற்காட்சி அதற்குத் தோன்ருதென்பதும்; தெளிவாதலால்—சாதகன் விருத்திகளுக்கு விலட்சணனுயிருந்துகொண்டு அவற்றின் தோற்ற வொடுக்கங்களைக் கவனித்தலே: சங்கற்ப க்ஷயமும் ஆன்ம விசாரமுமாம்.*

மனத்தோற்றத்தை நோக்கத்தலைப்படின்: ஒரு நினைவும் எழாது. பிராணேபாசனையால் பிராண வொடுக்கம் சித்திப்பது போல: மனேபாசனையால் மனவொடுக்கம் கைகூடுவது திண்ணம்.

---

* "நானென் றெழுமிட மேதென நாடவுண்
ணுன்றலை சாய்ந்திடு முந்திபற
ஞான விசாரமி துந்திபற

—உபதேசவுந்தியார்

40. நினைவொன் றெழினது நிலைதவிர் குறியாம்

ஆரம்ப சாதகர்க்கு நிஷ்டா காலங்களில் இடையிடையே எழுவனவாய ஒன்றிரண்டு நினைவுகளும் பயிற்சியின் முதிர்ச்சியால் மறைந்தொழியும். தோன்றும் ஒவ்வொரு எண்ணமும் அவ்வப்போது ஏற்பட்ட நிலையின் திரிபுகளையே குறிப்பனவாக உணரவேண்டும். இங்ஙனம்: தோன்றும் எண்ணங்களில் ஒன்றையும் விடாது நோக்கிக் கொண்டிருக்கும் பழக்கமேலிட்டால் சித்தோபசாந்தி சித்திக்கும்.

மன ஒடுக்கமும் மன நாசமும் வெவ்வேறு நிலைகளாகும். இவ்விரண்டிலுமே விருத்திக ளின்றேனும்: மன நாசமே பந்த நிவிர்த்திக்கும் ஞானப் பிராப்திக்கும் ஹேதுவாகும். மனவொடுக்கத்தால் அவித்தை மாய்வதில்லை. மனவொடுக்கம் யோகப் பயிற்சிகளாலும் சித்திக்கக் கூடியதாம். அதன் பலன்; சுழுத்தி நிலையினதைப் போன்ற சுகாநுபவம் மாத்திரமே: அது அறிவானந்தமாகாது. ஆதலால்: மனவொடுக்கத்தாலாய நிம்மதியையே ஞான சித்தியாகக் கொள்வது ஏமாற்றமாகும். சுழுத்தி யவஸ்தையில் தினந்தோறும் சஹஜமாகவே மனமற்ற ஸ்திதியைப் பெறுகிறோம். அஞ்ஞான நிவிர்த்தியும் சுகதுக்க அபாவமுமே ஞானசித்தியாமன்றி; விருத்திலயம் மட்டுமன்று.

"பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மை காட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றோய்ந்த
பாவியேன் பரிசு காட்டித்
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிட்டை யெனவே
சகச நிலை காட்டினை சுகாதீத நிலையந்
தனைக்காட்ட நாள் செல்லுமோ ?"

என்னும் பிரார்த்தனையில் ஸ்ரீ தாயுமானவர் அநுபவாதீத நிலையினையே ஆன்மசாட்சாத்கார சித்தியாகக் குறிப்பிடுதல் காண்க.

41. வாதனை மடிவே சாதனை முடிவாம்

பந்த நிவிர்த்தியே மோக்ஷப் பிராப்தியென்று கூறப்பெறுகிறது. பந்த நிவிர்த்தியோ: அஞ்ஞான நிவிர்த்தியாலன்றிக் கை கூடுவதில்லை. ஆதலால்; சாதகன் எவ்வாற்றாலும் அஞ்ஞான நிவிர்த்தியிலேயே நாட்டமுடையனாதல் வேண்டும். அஞ்ஞானம் வாசனை வடிவானது.

எல்லாவித வாசனைகளும் தேகவாசனையையே மூலமாய்க் கொண்டுள்ளன, விருத்திகளின் விளைவுக்குத் தேகான்மபாவமே வித்தாவதால்: வித்துள்ள வரையில் விளைவை முற்றும் அழித்தல் அசாத்தியம். அதனாலேயே, தேகான்மபாவத்தை மூலாவித்தை யென்றும்; அதன் விளைவாகிய விருத்திகளைத் தூலாவித்தை யென்றும்; அஞ்ஞானத்தை இரு வகைப்படுத்திக் காட்டுகின்றனர் பெரியோர்.

நீருக்குள் அழுத்தப்பெற்றிருக்கும் தக்கை, கைநழுவப் பெற்றதும் எழுச்சி யடைவது போல்; இதயத்தில் ஒடுக்கப்பெற்றிருக்கும் வாசனைசஹித விருத்திகளும், சாதனையிற் சோர்வு ஏற்படின்: அக்கணமே வெளிமுகப்படுகின்றன.

"இடர்மனத்தா ருவின்விதையா மகங்கா ரத்தை
உந்தும்வகை யறிகிலேன்: உந்த வுந்த
ஓடிவரு மதனுளுள் ளுடைந்தேன்"

என்னும் வாசிட்டக் கருத்தின்படி: தேகவாசனை நீங்காத வரையில் மனோ நாசம் பெறமுடியாதென்பது திண்ணம்.

சுரங்கம்--குகை--காடு முதலிய மறைவிடங்களில் உடலுணர்ச்சியற்றவராய், ஆகார—மலஜல விசர்ஜனங்களுமின்றி; மௌனயோகத்தில் நெடுங்காலம் மூழ்கப்பெறும் யோகிகளிற்சிலர்: பஹிர்முகம் பெற்றவுடன் அஞ்ஞானிகளைப்போல் வியவகரிக்கக் காண்கிறோமன்றோ! மூலதோஷம் முற்றும் நீங்கப்பெறுமையே அதற்குக் காரணமாகும். சமாதி சித்தியில் வல்ல கொங்கணவர்—துருவாசர் முதலிய யோகீஸ்வரர்களின் கோபதாபங்கள் புராணப் பிரசித்தமாம். ஆகையால்;

"துன்றுவா தனையே பந்தம் தொல்லைவி டதனைத் தீர்தல்"

என்றும்

"ஈனமான வகம்பாவப் பிராந்தியன்றோ விடர்பந்தம்
மானவீடா வதுமடமை யந்தகாரங் கெடலன்றோ?" என்றும்

வாசிட்டம் கூறுவதால் தேகவாசனையின் நீக்கமே பந்தத்தின் நீக்கமாமென்க.

42. மூலா வித்தையின் முடியைக் கண்டனர்

பிறவித் துறவியும் அவதூதருமாய்ப் பட்சிபோல் திரிந்து பிரசித்தி பெற்ற தோதாபுரிக்கும்--ஸ்ரீ ராமகிருஷ்ணர் எடுத்துக்காட்டும்

வரையில்—தம்மிதயத்தின் அடித்தலத்தில் மறைந்திருந்த மூலாவித்தையை உணர்ந்துகொள்ள முடியாதிருந்ததாக அறிகிறோம். "எனது ஹிதசத்துருவான கள்வனைக் கண்டுபிடித்துவிட்டேன். இதோ அவனுக்குத் தண்டனை கொடுக்கிறேன்" என்று உணர்ச்சியுடன் கூறிய ஜனகருங்கூட: அகந்தையின் நுண்ணியலைக் காலங்கடந்தே உணரப் பெற்றதாகத் தோன்றுகிறது.

ஆசார்ய சங்கரரிடத்தில் வைதீகப்போர்வையிலும்; நிதாகரிடத்தில் ஆசாரப் போர்வையிலும்; ஒளிந்திருந்த மூலதோஷத்தின் சேஷங்கள்: மாநுட வேடம் பூண்ட விசுவநாதராலும்; ரிபு முனிவராலும்; முறையே வெளிப்படுத்தப் பெற்றனவாக சங்கர விஜயமும் நிதாகர் வரலாறும் அறிவிக்கின்றன.

43. உடற்பற் றறுத்தலே உயர்தவ மாகும்

"யானற் றியல்வது தேரி னெதுவது
தானற் றவமாகும்"

என்பதே மஹிர்ஷியின் தவநெறியாதலால்; சாதகன் தனது ஒவ்வொரு நினைவிலும் சொல்லிலும் செயலிலும் தேகான்மபாவம் கலவாமலிருக்கிறதா வென்பதை அகமுகத்தில் சதா ஆராய்ந்துகொண்டிருக்க வேண்டும். நிஷ்டையால் மாத்திரம் அகப்பற்று அறத் தீர்ந்து விடுவதில்லை சொப்பனத்திலும் அகந்தையெழுச்சிக்கு இடந்தராவாறு; சாட்சி நிலையில் இடையறாது நிற்கும் சாதனத்தாலேயே அகந்தையை மூலத்துடன் அழித்தல் சாத்தியம்.

வித்து நசித்தால் விளைவும் நசிக்கும். வைராக்கிய சீலர்க்கே அத்தியந்த சங்கற்ப க்ஷயம் சித்திக்கும். சுருதிகளெல்லாம் சங்கற்ப க்ஷயத்திற்கு வாசனாக்ஷயத்தையே ஆதாரமாகக் கூறுகின்றன. சங்கர பகவத் பாதரும் நிச்சிந்தைக்கு மோகமறலே சாதனமா மென்பதை 'நிர்மோ கத்வே நிச்சல தத்வம்' என்ற சுலோகத்தால் உறுதிப் படுத்துகிறார்.

44. பந்தசே ஷத்தையும் பார்த்தறத் தொலைமின்

ஸ்ரீ ரமணர் தம்மைச் சரணடைந்த அடியார்களுக்குப் பஞ்ச கோச நிவாரணத்தால் எதார்த்த நிலையை நிதர்சனப்படுத்தி வந்ததோடமையாமல், எவ்வெவர் எவ்வெப்போது எவ்வெவ்வகையில் ஆன்ம சுபாவத்தினின்று நழுவி ஜீவத்தன்மையில் வியவகரிக்கின்றனரோ; அவ்வவர்க்கும் அவ்வப்போதே அவ்வத் தவறுகளை எடுத்துக் காட்டுவதன் மூலம்: சுவாநுபவ திடத்திற்கும் உதவி வந்திருக்கிறார் உதாரணமாக;

ஓர்கால் ஆசிரமத்தில் களவாட வந்த கள்வர், ஜன்னற்கண்ணுடிகளை உடைத்துக் கொண்டிருக்கையில்; "ஏன் வீணே ஜன்னலையுடைத்துக் கஷ்டப்படுகிறீர்கள். கதவைத் திறந்து விடுகிறோம். நீங்கள் உள்ளே வந்து வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு போகலாம். உங்களுக்கு எவ்விதத் தடையும் செய்யமாட்டோம்" என்று அன்புடன் கூறிக்கொண்டே கதவுகளைத் திறந்துவிட்ட மஹர்ஷியை அகாரணமாய்த் துன்புறுத்திய அத்திருடர்களின் அடாத செயலுக்கு ஆற்ருத பக்தரொருவர்; அவர்களைத் திருப்பித்தாக்க முயன்றபோது மஹர்ஷி குறுக்கிட்டு:

"பொறும்; பொறும்: என்ன காரியம் இது! செயலைத் தொடங்குமுன் நிலையைக் கவனிக்க வேண்டாமா? அவர்கள் திருடர்கள்: ஏதும் அறியாதவர்கள்: திருடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்: அவர்களுக்கு நன்மை தீமைகள் புலப்படுமா? தங்கள் காரியசித்திக்கு அவர்கள் எது வேண்டுமாலும் செய்யத் துணிபவர்கள். தர்மா தர்மங்களைக் கவனியாத அவர்களின் தீய செயலையே சாதுக்களான நாமும்* திருப்பிச் செய்வதானுல்: அவர்களுக்கும் நமக்கும் என்ன பேதம்? உலகம் நம்மைக் குறித்து என்ன நினைக்கும்?"

என்ற ஹிதோபதேசங்களால் அன்னுரைச் சமாதானப்படுத்தி; சாதுக்கள் எந்த நிலையிலும் சந்நியாச தருமத்தினின்று நழுவக் கூடாதென்பதை: வற்புறுத்தியருளினுர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் மஹர்ஷி தமது பக்தர்களுக்குப் பல அரிய அறிவுரைகள் வழங்கியருளினர். இத்தகைய முறைகளில், பக்தர்களின் ஆன்ம ரக்ஷையை முன்னிட்டு; மஹர்ஷி அருளியுள்ள பேருதவிகள் அனந்தமாம்.

45. தாழ்மையின் சிறப்பே தக்கோர்க் கணிகலம்

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்னுந் தமிழ் மறைப்படி: "அமரத்துவந் தரும் அடக்கத்தின் ஆற்றலே அடைதற்கரிய ஆற்றல்களிலெல்லாம் தலையினதாம். கல்வி கேள்வியாதிய அருஞ் செல்வங்களுக்கெல்லாம் அடக்கமே பயனுதலால்; அதுவே ஆன்ருேர்களுக்கு

---

* 'நாமும்' என்றது; பக்தரைக் கௌரவப்படுத்தி உரிமையோடு அறிவுறுத்தற்காம்.

அணிகலனும். பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாகையால் அருட் செல்வமாகப் போற்றப்பெறும் அடக்கம். அறிஞர்களுக்குரிய பொது வியல்பேனும்; அது: சிறப்பு வகையாற் சாதுக்களுக்கே இன்றியமை யாததாம். அடக்கத்தாலன்றி உயர்வெய்தல் எவருக்குமே அசாத்திய மாதலால்: சன்மார்க்க சாதகர்க்கெனவே பிரத்தியேகமாக விதிக்கப் பெற்றுள்ள இயம நியமமாதிய விரதாநுஷ்டானங்களெல்லாம், அடக் கத்தையே குறிக்கோளாக வுடைமையாலும்; அடக்கமே அகந்தை யழிவுக்கான அறிகுறியாதலாலும்; அது தமக்குரிய ஆசாரமாகச் சாதுக்களாலேயே சிறப்பாகப் போற்றப் பெறுவதாம். அதிலும்; அருணையை வாசஸ்தானமாகக் கொண்டோர்க்கு: அது பல்லாற்ருனும் இன்றியமையாததாகிறது. பிரம்மா—விஷ்ணு—சக்தி முதலிய தெய்வ சொரூபிகள்கூட அடங்கப்பெற்ற திவ்ய ஸ்தலமாகிய அருணுசலமே, அடங்காரையும் அடங்குவிக்கும் மஹிமையுடையதாதலால்; அருணை யில் அடங்கப்பெருதவர் உய்வுக்குரிய அப்பண்பை: வேறு எங்குமே பெருரென்பது திண்ணம். உயர்வுக்கெல்லாம் உயர்வாகவுள்ள மஹேஸ்வரன், தாழ்வுக்கெல்லாம் தாழ்வாகவும் இருக்கையால்தான்; ஈடும் எடுப்புமற்றவனுகப் பிரகாசிக்கப் பெறுகிருன். சர்வ சுதந்தர னை பரமேஸ்வரனுக்கே தேவைப்படும் தெய்வசம்பத்தான அடக்கம்: தற்சுதந்தரமற்ற சாதுக்களுக்கு அத்தியாவசியமான தென்பதை வற் புறுத்தவும் வேண்டுமோ! ஆதலால்: சாதுக்கள் தமது அகவாழ்விற் போலவே: புறவாழ்விலும் பரிபூரண அடக்கம் பெறல் வேண்டும். அடியார்களுக்குத்தான் அடக்கம் வேண்டுமென்பதல்ல: ஆண்டவ னுக்கும் அதுவே இலக்கணமாம்."

என்று அடக்கமுடைமையே அருளுடைமைக்கான ஒரே அடையாளமென்பதையும்; அது வாழ்க்கையின் எல்லாத் துறைகளி லும் அநுஷ்டிக்கப்பெறல் வேண்டுமென்பதையும்; அறிவிற் சிறந்தவ ரேனும் அடக்கமில்லாதவர் சாதுவாகா ரென்பதையும்; பகவான் தமது அடியார்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தியதோடு: தமது ஒவ்வொரு செயலிலும் அதைப் பிரதிபலிக்கச் செய்துவந்தார், தாம் எல்லோரா லும் தெய்வமாகவே போற்றப்பெற்ற போதிலும்; அவர் ஓர்போதும் அடக்கத்திற் சோர்வடைந்ததில்லை. உதாரணமாக:—

ஆசிரம நிர்வாகியின் நடைமுறைகளிற் குறைபாடுடைய சாது வொருவர், ஓர் சமயம் பொறுமையிழந்தவராகிப் பலாத்காரத்தில் முற்பட்டமையைக்கண்ட பகவான்; உடனே குறுக்கிட்டுத் தமது அருட்கரங்களால் அசுரச் செயலினின்று அவரைத் தடுத்து நிறுத்தி; அவரது அறியாமையைப் பரிவுரைகளால் இனிது எடுத்துக் காட்டியபின் முடிவுரையாக;

''உங்கள் சுதந்திரத்தில் தலையிடுவது எனது நோக்கமல்ல. உங்கள் செயல் மிக்கதாய்விடும்போல் தோன்றினமையால்—உங்களுக்காக இல்லாவிட்டாலும்—சந்நியாச தர்மத்தை நிலைநிறுத்தற்பொருட்டு—எனது இயற்கைக்கு விரோதமாகவே—நான் அதில் தலையிட நேர்ந்தது. உங்களுக்கு அறிவுரையாக நான் எதுவும் கூறவில்லை. நீங்கள் இங்கு இருத்தலால் அன்புரைகளாகவே சில சொன்னேன். இவற்றில் ஏதேனும் நன்மையிருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள். ''ஊகமுளதேல் சிறுவருரையும் கொள்க'' என்று பெரியோரும் கூறியுள்ளார்.''

என்று சாது தர்மத்தை இன்சொற்களால் ஹிதமாகக் கூறியருளி அவரைச் சாந்தப்படுத்தினர். அன்று முதல்; அந்த சாது தமது ஜென்மமே மாறப்பெற்று: எல்லா வகையாலும் பகவானையே பிரத்தியட்ச தெய்வமாக உபாசிக்கும் பாக்கியசாலியானர். தம்மையே அடைக்கலமாகப்பற்றி வாழ்ந்த சாதுவொருவரின், தகாத செயலைத் தடுக்கும்; தவிர்க்க முடியாத கடமையைப் புரிகையிலும்; பகவான் மேற்கொண்ட அடக்கமன்றோ: அடக்கத்தின் எல்லையாகும்!

46. அபேத திருஷ்டியே அநுபவத் திறனும்

அகந்தை நாசம்: கிரந்திபேதம்: தன்னிழப்பு: ஜீவன் முக்தி: தற்போத நிவிர்த்தி: என்பன வெல்லாம் ஆன்ம சமர்ப்பணத்தின் (பரிபூரண சரணுகதியின்) பரியாயப் பெயர்களே. வாசனு க்ஷயமே ஜீவத் தியாகத்தின் அத்தாட்சியாதலால்;—

(i) விஷயங்களின் அபாவத்தால் இயல்பான சித்தோபசாந்தியுடைய ஞானிகள்பால் எத்தகைய ஹிதமஹித உணர்ச்சிகளும் தோன்ருவாகையால், புகழிகழ்வு; இன்பதுன்பம்; லாபநஷ்டம்; முதலிய துவந்துவங்களில் மகிழ்தலும் வாடலுமாகிய ஜீவ சுபாவமும் (ii) எல்லா ஜீவர்களிலும் அறிவையே காணும் சமதிருஷ்டியுடைய ஞானிகள்பால் பேதபாவ மின்மையால், உபாதி சம்பந்தமான இராகத் துவேஷம்; பகை நட்பு; விருப்பு வெறுப்பு; நன்மை தீமை; ஆகிய குணதோஷங்களும்: (iii) உடற்காப்பைப் பிராரப்தத்தின் வசமே ஒப்புவித்துவிட்டுக் கனவிலும் உபசாந்தியினின்று நழுவப்பெருத ஞானிகள்பால் எதிலும் கர்த்தவ்யபாவ மின்மையால், வியவகார சம்பந்தமும்: தலைகாட்டுவதில்லை.* வாயுவால் இயங்கும் காற்ருடியின்

---

* ஆசிரமத்தின் நிரந்தர நடைமுறைகளைக் குறித்துச் சில பக்தப் பிரமுகர்களால் ஸ்ரீ ரமண முத்திரையுடன் நிருமிக்கப்பெற்றதோர் சாசன *(Will)* ஏற்பாட்டின் குணதோஷங்களை ஆராய்தற்கு

இயக்கங்கள் அதன் காலை எங்ஙனம் சலிப்பித்தல் இல்லையோ: அங்ஙனமே; ஊழால் இயங்கும் கரணேந்திரிய

ஆசிரம அபிமானிகளுக்கு உரிமையுண்டேனும்; பாரமார்த்திக உணர்வாலன்றி அத்தகைய வியவகாரங்களின் உண்மையைக் கண்டறிதல் அசாத்தியம்.

"தன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்
கென்னை யுளதொன் றியற்றுதற்குத்—தன்னையலா
தன்னிய மொன்று மறியா ரவர்நிலையை
யின்னதென் றுன்ன லெவன்"

என்று, தம்போன்ற மஹான்களின் அதீத நிலையைக் குறித்து மஹர்ஷியே வியக்தமாகக் கூறியுள்ளதால்; கர்த்தவ்யமற்ற ஞானிகளை முன்னிட்ட தெய்வத் திருவிளையாடல்களின் தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுமுன்: அதற்குரிய தகுதியைப் பற்றிச் சிந்தித்தல் அறிஞர்க்கு அழகாகும். பிறர் கருத்தைக் கண்டறிவதிற் சமர்த்தரான மஹான் சேஷாத்ரி சுவாமியே, ஓர்கால்; மஹர்ஷியின் சந்நிதியிற் சிறிது நேரம் அமர்ந்திருந்து மீள்கையில்: "இது என்ன நினைக்கிறதென்று தெரியவில்லையே!" என்று, மஹர்ஷியின் முனைப்பற்ற சற்பாவச் சிறப்பை வியந்து; 'ஞானியை ஞானியே அறிவான்' என்னும் பொன்மொழியை உறுதிப்படுத்தினரென்றால்: மஹான்களின் புற விவகார ரகசியத்தைக் கண்டறிதல் சாமான்னிய அறிவினர்க் கியல்வதா? மற்றும்: மேற்கூறிய சாஸனேற்பத்தியில் 'மஹர்ஷியின் சம்பந்தம் உண்டா? இல்லையா?' என்பதைப் பிரபலஸ்தரான பழைய பக்தரொருவர் மஹர்ஷியின் வாக்கினின்றே தெரிந்துகொள்ள விரும்பியபோது; மஹர்ஷி அவரை நோக்கி; "வந்த வேலையைப் பார்: இந்த வீண் விசாரணையெல்லாம் எதற்கு?" என்று கூறி மேற்கேள்விக்குச் சிறிதும் இடமில்லாமற் செய்ததினின்றே: தமக்குச்சம்பந்தமில்லாத வியவகாரத் தலையீடுகளெல்லாம் சிறுபிள்ளைத்தனமா மென்பது தோன்றவில்லையா?

குறிப்பு:— பஹிரங்க உபதேசத்திற்காகத் தம்மை நாடி நின்ற ஸ்ரீ ரமண பக்தரொருவருக்கு மஹான் சேஷாத்திரி சுவாமிகள், ஓர்கால்;

"ஞானம்: ஞானம்: என்றால் என்ன? எது எது அநித்தியமோ, அதையெல்லாம் விசாரணையால் ஒவ்வொன்றாக நீக்கியபின் மிஞ்சி நிற்பது எதுவோ; அதுவேதான் ஞானம்; அதுதான் மெய்ப்பொருள்: கடவுள்—தெய்வம்—நான்—நீ எல்லாம் அதுதான். மலையிலே போனால் தான் ஞானம் வரும்: குகையிலே போனால்தான் ஞானம் வரும்:

வியவகாரங்களும் ஞானியின் இயல் நிலையைத் திரிபுக்கு உள்ளாக்குவ தில்லை. கரணேந்திரியச் சேட்டைகளுக்கெல்லாம் சாட்சிமாத்திரனுன

என்று அங்குமிங்கும் அலைவது பைத்தியந்தான்'' என்று பிரம்ம வித்தையைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் உபதேசித்ததோடு; அதற்குத் 'துறவு இன்றியமையாததன்று' என்பதையும் தெளிவாக்கினமையைக் கேள்வியுற்ற பகவான்: உடனே, ''ஆஹா: சேஷாத்திரி பிரம்ம வித்தையை எவ்வளவு தெளிவாக உபதேசித்திருக்கிருர்! இப்படிப் பட்ட பெரிய மஹானையா பைத்தியம் என்கிருர்கள்: அப்பப்ப !! உலகியலின் விசித்திரமே விசித்திரம்!'' என்று ஆச்சரியப்பட்டார். இவ்வாற்ருல் மேலே குறிப்பிட்டுள்ளபடி, மஹர்ஷியை சேஷாத்திரி சுவாமி நன்கு அறிந்திருந்ததைப் போலவே; சேஷாத்திரி சுவாமியை மஹர்ஷியும் நன்கு அறிந்திருந்தமை: புலனுதல் காண்க.

மனமிறக்கப் பெற்ருரே ஞானிகளாதலால் இருப்புமாத்திர இயற்கை யுணர்விற் பாவனுதீதராகப் பிரகாசிக்கப்பெறும் ஜீவன் முக்தருக்கு; எதிலேனும் கர்த்தவ்விய பாவமிருந்தாலன்ரே அவர்களின் வியவகாரங்களை ஆராய்தல் கூடும்? எனவே; அன்னியர் திருஷ்டிக்குத் தோன்றும் ஞானிகளின் வியவகாரங்கள்: வெறும் ஆரோபங்களே என்க. அன்றியும்:

பகவான் தாம் நோயுற்றிருந்த காலையில் பக்தர்களாற் செய்யப் பெற்ற சிகிச்சை ஏற்பாடுகளில் யாதொரு சம்பந்தமுமின்றி, அடியார் விருப்பப்படித் தமது உடலை வைத்தியர் வசமே ஒப்புவித்தவராய்; ''நடப்பவை யெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பதுதான் நமது வேலை: எதைக்குறித்தும் இப்படியென்றும் அப்படியென்றும் பாவித்தல் அல்ல'' என்று கூறிக் கடைசிவரையில் சாட்சிமாத்திரராகவே நிச்சிந்தையுடன் விளங்கிவந்ததையும்; பலநாள் சிகிச்சைக்குப் பின்னும் குணங்காணுமையால் கலக்கமுற்ற அடியார்கள் வைத்திய நிபுணர்களாற் கடைசிப் பரிகாரமாகக் குறிப்பிடப் பெற்றதோர் கடுமையான முறையைப் பிரயோகிப்பதில்; பகவானது திருவுளக்குறிப்பை நாடி நின்றபோது, ''இதையெல்லாம் என்னை ஏன் கேட்கவேண்டும்? நானு சிகிச்சையை வேண்டினேன்? நீங்கள்தானே இதில் முனைந்தவர்கள்? எது நடக்கவேண்டும்: எது கூடாது: என்பது உங்களுக்கே தோன்றும். இதில் எனக்கு யாதொரு சம்பந்தமுமில்லை'' என்று கூறிச் சும்மாவிருந்ததையும்; ஆராய்வோர்க்கு 'மஹர்ஷிக்குத் தமது உடல் விஷயத்தில் எவ்வளவு சம்பந்தமிருந்ததோ அவ்வளவு சம்பந்தமே இதர விஷயங்களிலும் இருந்திருத்தல் கூடும்' என்பதை: ஊஹித்தல் அசாத்தியமாமோ? நிற்க:

ஞானி, ஒவ்வோர்கால் எடுப்பார் கைப்பிள்ளையாவதாகத் தோன்றி
னும்; "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்

பிரஸ்தாப ஏற்பாட்டைக்குறித்து 'மஹர்ஷிக்கு ஒன்றுமே தெரியாது' என்பதும் ஸ்துதி வாதமாகும். எவ்வாற்றெனின்:

"ஏதேது வந்தாலும் ஏதேது செய்தாலும்
ஏதேதி லின்புற் றிருந்தாலும்—ஏதேதுந்
தானுகா வண்ணம் தனியே தெரிந்திருக்கும்
ஞானுகா ரந்தானே நாம்"

என்ற சுவாநுபவப்படி, அவஸ்தாத்திரயங்களின் எந்தக் காட்சியிலும் எத்துணைப் பற்றுமின்றி ஞானேந்திரராகச் சுபாவ நிலையிலேயே கம்பீரமாக விளங்கிய பகவானது சாட்சித்துவநிலைக்கு; எதன் விரும்புகையும் ஒவ்வாமையாதல் எங்ஙனமோ: அங்ஙனமே எதன் வெறுக்கையும் ஒவ்வாமையாதலால் என்க. இவ்வாற்ருல்: ஆசிரம அமைப்புகள் நடைமுறைகள் ஆலய நிர்மாணம் ஆராதனக் கிரமங்கள்—ஏன்—தினசரி சமையல் விவரங்கள் அடியார்களின் சுகதுக்க நிலைமைகள் கூட; அவ்வப்போதே மஹர்ஷிக்கு அறிவிக்கும் பழக்கம் அநுஷ்டானத்தில் இருந்துவந்ததேனும்; அவர் எல்லாமறிந்தும் எதையும் அறியாதவரானுர், "வாசனைகள், சொச்சமான ஆகாயத்தைப் பற்ருமைபோல்; விஷயங்கள், சொரூப திருஷ்டியுடைய ஞானிகளைப் பற்றுவதின்மையால்: ஒன்றையும் அறியாத மௌனபாவமே சுத்த ஞானமாம்" என்று மஹர்ஷியே கூறியுள்ளமையால்: ஞானிகள் எப்போதும் எதிலும் கர்த்தவ்யபாவத்துடன் தமது உள்ளத்தைப் பறிகொடாரென்பது தெளிவு. இறைவனை முன்னிட்ட இயற்கையின் உற்பத்தியாதிய வியவகாரங்களில் எதுவும் இறைவனைப் பற்ருமைபோல: ஞானியை முன்னிட்ட பக்தர்களின் வியாவகாரிக நிகழ்ச்சிகளும் ஞானியைப் பற்றுவதில்லை.

"நனவில் தசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போம்
கனவில் மனக்கூத்துங் காண்போம் — நினைவில்
சுழுத்தியிலே யில்லாத சூனியக்கூத் தாடி
விழுப்பொருளாய் நாமிருப்போ மே." —சொரூப சாரம்

"செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச்
சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்குமாபோல்
செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குமென்முன்
செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும்"

—கைவல்லியம்

முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்னும் அநுபவமுடையவன்.

என்பதே ஜீவன் முக்தர் அநுபவம். பக்தர்களின் பாவனையே பரமேச்வரன்பாற் பிரதிபலித்தல்போல்: சார்ந்தோர்களின் பாவனையே சான்றோர் பாற் பிரதிபலிப்பதாம். ஆதலால்: அதீத திருஷ்டியுடைய பிரம்ம ஞானிகள் எந்த விஷயத்தையும் கிரகிப்பதில்லை, கிரகிக்கினும்: பற்றின்மையால்: பந்திக்கப்பெறுவதில்லை. இச்சை—அநிச்சை—பரேச்சையாகிய பிராரத்தத் திரயமே வியவகாரங்களுக்குக் காரணமென்பதும்: அவற்றுள் பின்னிரு பகுதிகளால் ஞானிகளிடத்தும் சில வியவகாரங்கள் ஏகதேசமாகத் தோன்றக்கூடுமென்பதும்; தோன்றினும். சுபாவமான விலட்சணத் தன்மையினராதலால் எதிலும் சம்பந்தப் படுவதில்லை யென்பதும்; சுருதிகளின் சித்தாந்தமாதலால்: தன்னை நிமித்த காரணனாகக் கொண்டு சம்பவிக்கும் வியவகாரங்களால் பாதிக் கப்பெறாத தீரனே திடஞானியாவான். மற்றும்:

மஹர்ஷி. ஓர்கால் ஒரு சர்க்கார் அதிகாரியின் கேள்விக்கு மறுமொழியாக "இந்தச் சொத்துக்கள் என்னைச் சேர்ந்தவையே: இவை அபிமானிகளாற் சமர்ப்பிக்கப் பெற்றவையாம்." என்று கூற நேர்ந்தமையைக்கொண்டு: "போக்த்ருத்வபாவ மில்லாமலா மஹர்ஷி இப்படிக் கூறினர் ?" என்று கேட்கப்படுகிறது. தாய் தன் குழந்தையின் நிலையினின்றே அதனுடன் எதையும் பேசவேண்டியிருத்தல்போல்: ஞானிகளும் மேற்கூறியவாறு அநிச்சையாகத் தோன்றும் வியவகாரங்களின் சுமுகத் தீர்வை முன்னிட்டு: அடுத்தார்களின் வியாவகாரிக நிலையையே மேற்கொள்ள வேண்டியவராகின்றனர் உதாரணமாக, ஓர்கால் பகவான் வாசஸ்தலத்திலேயே நாஸ்திகப்பேய் தலைவிரித்தாடத் தொடங்கினமையால்: ஸநாதன தர்மரட்சணையில் சிரத்தையுள்ள வைதிகக் கோஷ்டியொன்று தலைசிறந்த வேத விற்பன்னரொருவரை முன்னிட்டுக்கொண்டு மஹர்ஷியிடம் வந்து: "பாரத பூமியில் வேத மதம் அநாதியாகவே வேரூன்றப்பெற்றது: அது தொன்று தொட்டு மஹர்ஷிகளாலேயே போற்றப்பெற்று வருகிறது: வைதிக சமயத்தின் உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மஹர்ஷியையே தமது கோத்திரத்தின் மூல புருஷராகக் கொண்டிருக்கின்றமைக்குக் காரணம் அதுவே: இத்தகைய புராதீன வேத விருக்ஷத்திற்குத் தற்போது பயங்கரமான நாஸ்திகச் சூறாவளியால் ஆட்டம் ஏற்பட்டிருக்கிறது. அது எப்படியும் நிலைநிறுத்தப்படல் வேண்டும். இதற்குப் பண்டைய ரிஷிகள் பரம்பரையைச் சேர்ந்த தங்கள் ஆதரவு வேண்டும்" என்று குறையிரந்து நிற்கையில்: "ஆஹா! அப்படியே செய்யுங்கள்: ஆனால் என்னை மட்டில் அதில் சம்பந்தப்படுத்தி விடாதீர்கள்." என்று கூறி அவர்களது கட்டினின்று மஹர்ஷி தம்மை விடுவித்துக்கொண்டார்.

•ஆதலால்: அவன் எந்நிலையிலும் தனது சுபாவ ஸ்திதியினின்று

ஆனால் இதையே மஹர்ஷியின் ஆசிமொழியாகக் கொண்டு அவர்கள் திருப்தியடைந்தனர். மற்றோர்கால், சிவாஷ்டோத்திரத்தில் வரும் "ப்ரஹ்மண்யாய நம" என்னும் மந்திரத்தை முன்னிட்டு; "இறைவன் பிராம்மணனாக மட்டும் ஏன் வர்ணிக்கப்பெறல் வேண்டும்" என்று வினவிய பிராம்மணரல்லாதா ரொருவருக்கு: "உன்னைச் சூத்திரனாக நீ ஏன் பாவிக்க வேண்டும்? பிராம்மணத்துவம் சூத்திரத்துவம் என்ப வாதிய பேத பாவங்களெல்லாம் அறியாமையினின்று தோன்றிய வையே. மனிதனது எதார்த்த நிலையில் எவ்வித பேதமுமில்லை" என்று கூறிச் சமாதானப்படுத்தவேண்டியிருந்தது. வேறொரு சமயம்: மந்தி ரேசுரரான தனது தந்தையால் உபதேசிக்கப்பெற்ற "சக்தி பஞ்சாக்ஷரி' யைச் சங்கித்த தநயனொருவன், மஹர்ஷியின்பால் அனுப்பப் பெற்ற போது; "மோக்ஷ தாரகம் இதுதான்" என்று மஹர்ஷியால் உறுதிப் படுத்தப் பெற்றும் "அப்படியானால்: நீங்கள் கூட இதைத்தான் அநுஷ்டிக்கிறீர்களா?" என்று மேல்வினா வொன்றெழுப்பினமையால்; "ஆம்: ஆம்: இதுவேதான்." என்று கூறவேண்டி வந்தது. 'இவற்றைப் போலவேதான் மேலே கண்ட விவாத நிகழ்ச்சிகளும் பகவானை முன்னிட்டுத் தோன்றிய பக்தர்களின் மனப்பான்மைக ளாகும்.' தவிர:

ஓர்போது, உடலுறவைக்கொண்டு ஆசிரமப் பொருள்க ளில் உரிமை கொண்டாடிய சகோதரரைக் கண்டிக்க முனைந்த பகவான்; மற்றோர்போது, அவற்றில் தாமே உரிமை கொண்டாடுகிரு ரென்றால்: இது தக்க ஆராய்ச்சியாலன்றித் தெளியக்கூடிய சாமான்னிய விஷயமாகுமா? மஹான்களைச் சம்பந்தப்படுத்துவதாகிய இத்தகைய வியவகாரங்களில், அவற்றின் உட்கருத்தை யறியாது கொள்ளப்பெறும் எந்த முடிவும்; தமது மனப்போக்கையே அவர்கள்மீது சுமத்துவதாக முடியும்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்: அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் அறிவுரையைப் பின்பற்றி விஞ்ஞானக் கண்கொண்டே எதையும் பரிசீலிக்கும் இயல் பினரும், ஞானகுருவான ஸ்ரீ ராமகிருஷ்ணரது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் ஐயமும் அவநம்பிக்கையும் கொண்டு பலகாலம் அவ ரிடமே வாதப்போர் செய்துவந்தவருமான மேதையிற் சிறந்த ஸ்ரீ விவேகானந்தரே, கடைசியில்; 'பெரியோரின் பெருநோக்கம் சிறியோ ரின் சிறுமைக்குப் புலனாவதன்று' என்னும் முடிவுக்கு வரவேண்டி யிருந்ததென்றால்: மஹர்ஷியின் குணதோஷங்களை ஆராய்வோரது தீனத்தன்மையை வெளிப்படுத்தவும் வேண்டுமோ?

சிறிதும் நழுவானென்பதே தீர்வை.

மஹர்ஷி தம்மைச் சகளவடிவினராகக் காட்டிக்கொண்டிருக்கையிலும், எந்தச் சுபாவ திருஷ்டியில் விளங்கிக்கொண்டிருந்தாரோ; அந்த நிருபாதிக திருஷ்டியில்: அவரது எதார்த்த சொரூபத்தைக் காணும் பண்புடையாருக்கு, அவருடைய வியாவகாரிக வியவகாரங்களெல்லாம் பிராதிபாசிக வியவகாரங்களாகவே தோன்றுவது திண்ணம்.

"உற்றதாம் பேற்றி லுவப்புற்றான் தொந்தங்க
ளிற்று னழுக்கா றிலாதவன்—ஒற்றுமை
பெற்றதையே யன்றிப் பெருததனைத் தான்செய்ய
லுற்றாலும் பந்த முறான்" —பகவத்கீதாசாரம்

"அவற்குப் பிரகிருதி யாற்பந்த மில்லை
யவன்முத்த னும மடைந்தான்—அவன்றான்
பிரகிருதி காரியமாப் பேசுதோ டத்தா
லொருபொழுது மொட்ட லுறான்"
—ஆன்மசாட்சாத்காரப் பிரகரணம்

"அண்டமெலாந் தானா யறிவு வடிவாகக்
கண்டபரா னந்தசிவா காரருக்குத்—தண்டித்துத்
தள்ளும் பொருளேது தள்ளா விதிவழியே
கொள்ளும் பொருளெதுவா கும்"

"தானேக னாகியுப சாந்தனாய் நின்மலனாய்
வானே முதற்றன் வடிவாகும்—ஞானி
விடுத்ததொழி லெல்லாம் விலக்காகும்: அன்னோன்
அடுத்ததொழில் ஆசார மாம்." —சொரூபசாரம்

குறிப்பு:— இவ்விளக்கத்தின் நோக்கம்: "எனது குரு கள்ளுக்கடைக்குப் போகிறவரானாலும் அவர்மீது நான் தோஷாரோபணம் செய்யமாட்டேன். ஏனென்றால்; அதனால் அவர் குருத்துவத்தை இழந்துவிட மாட்டாரென்பது எனக்குத் தெரியும். நான் அவரைச் சரணடைந்தது: அவரது புறவாழ்வைப் பரிசிலனை செய்துகொண்டிருப்பதற்கன்று: அது எனது கடமையுமன்று. ஆதலால்; எப்படியும் அவரே எனது குருநாதராவார்." என்று கூறிய ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்ற உயரிய காதற்பிரேமையிற் கடைத்தேறுவதையே நோக்கமாகக் கொண்டு மஹர்ஷியின் உதவியை நாடுவோர்க்கு: "வந்த வேலையைப் பார்: இந்த வீண் விசாரணையெல்லாம் எதற்கு" என்ற மஹர்ஷியின் போதனைப்படி, வெளி விஷய ஆராய்ச்சியின் பயனின்மையை எடுத்துக்காட்டுவதேயன்றி; மஹர்ஷியைச் சம்பந்தப்படுத்தும் வியவகாரங்களின் உட்கருத்தைச் சித்தாந்தப்படுத்துவதன்று.

காட்சி 9.

திடவியல்.

ஜீவப்பிரம்ம ஐக்கியத்தின் தத்துவங்களையும் அதன் அநுபவத் திறங்களையும் முன்காட்சிகளிற்கண்டோம். இனி: துலக்க மானகண்ணுடியை அடிக்கடி துலக்கினுல் பழுதன்றே'' என்னும் கைவல்லியோபதேசப்படி; சுவாநுபூதியின் திடத்திற்கும் சற்பாவத்தின் சஹஜ ஸ்திதிக்குமான நுண்ணிய விளக்கங்களையெல்லாம்: பின்வரும் காட்சியிற் காண்போம்.

47. இருப்பின் உணர்வும் இறைவன் உண்மையும்

எது உள்ள பொருளோ; அதுவே உள்ளந்தோறும் வியாபித்து நின்று: தனது உண்மையைச் சுயம் பிரகாசத்தால் சதா உணர்த்திக் கொண்டிருக்கிறது. தன்னை எந்தக் குறியால் தன்மையிலேயே அனன்னியப் பொருளாக அது ஒவ்வொருவருக்கும் அபரோட்சப் படுத்திக் கொண்டிருக்கிறதோ; எல்லோருக்கும் இயற்கையநுபூதியாகவுள்ள அந்த 'நான்' என்பதையே: அதன் முதற்பெயராகக் கொள்ளுவது ஆன்றோர் மரபு. ''ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க் காயிரம்–திருநாமம்'' பொருந்துமேனும்; மனிதவர்க்கத்தின் பொதுமை யுணர்வும் இயற்கை யநுபூதியுமான 'நான்' என்பதே: அதற்குரிய இயற்பெயராதல் தெளிவு. ஆதலால்; 'இருக்கிறேன்' என்னும் சுவாநுபூதியே: பிரம்மாநுபூதியாம். ஆனுல்:

''நானென வுடலைத் தானே நம்பினே னநேக சன்மம்
ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது
கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி னுலே
நானென வென்னைத் தானே நம்பியீ டேறி னேனே''

என்னும் அநுபூதி வாக்குப்படி, நானுணர்வுக்குத் தனது ஆபாச வடிவமாகிய ஜீவான்மாவைக் கொள்ளாது; தனது எதார்த்த சொருபமாகிய பரமான்மாவையே இலக்கியமாகக் கொள்ளவேண்டும்.

48. ப்ரஜ்ஞானமும் பரப்ரஹ்மமும்

''உள்ள துணர உணர்வுவே றின்மையின்
உள்ள துணர்வாகு முந்தீபற
உணர்வேநா மாயுள முந்தீபற''

—உபதேச வுந்தியார்

"..............................உள்ளத்தே உள்ளபடி
உள்ளதே உள்ளல் உணர்"

—உள்ளது நாற்பது

என்னும் பகவானது உபதேசங்களால் சித்திப்பதாய ஜீவப் பிரம்மைக்கியத்தையே; அதாவது, நிருபாதிக உண்மையுணர்வும் கடவுளும் ஒன்றேயென்னும் அத்துவித சித்தாந்தத்தையே: குறிப்பிக்கும் ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம்' என்னும் முதல்வேத மகா வாக்கியத்தில் வரும் இரு பதங்களும் இருவேறு பொருளுடையனவல்ல. ப்ரஜ்ஞானமே ப்ரஹ்மம்; ப்ரஹ்மமே ப்ரஜ்ஞானம்: என்பது அவ்வாக்கியத்தின் கருத்தாம். அதாவது: 'இருக்கிறேன்' என்ற சித்துணர்வும்; 'நான்' என்ற சத்தாமாத்திர ஞப்தியும்: ஒன்றே யென்பதைக் குறிப்பதாம். ப்ரஜ்ஞானமும் ப்ரஹ்மமும் முறையே ஜீவன்முக்தி நிலையாகவும் விதேக முத்தி நிலையாகவும் குறிப்பிடப்பெற்றாலும், அவ்விரண்டுக்கும் சுவாநுபூதியாலும் சுபாவ ஸ்திதியாலுமேயன்றி நிலையாற் பேதமில்லை. எங்ஙனமெனின்: ஒரே ஆகாயம் கடோபாதியால் கடாகாயமாகவும் மகாகாயமாகவும் துவிதத்தில் வியவகரிக்கப் பெற்றாலும், ஆராய்ச்சியில் அத்துவிதம் பெறுவதோடு; கட ஸ்திதிக்கும் அதுவே இடமாகையால் அகண்டத்துவமும் பெறுவதுபோல: ஒரே வியாபக சைதன்னியமே தேகோபாதியால் கூடஸ்த சைதன்னியமாகவும் பிரம்ம சைதன்னியமாகவும் துவிதத்தில் வியவகரிக்கப் பெற்றாலும், நிருபாதிக திருஷ்டியில் அத்துவிதம் பெறுவதோடு; உபாதியுணர்வுக்கும் அதுவே ஆதாரமாதலால்: பரிபூரணத்துவமும் சித்திக்கப் பெறலால் என்க. அகம்புறமற்ற அதீத திருஷ்டியில், உள்–வெளி: உரு–அரு; கண்டம்–அகண்டம்: அம்சம்–அம்சி: என்பவாதிய மயக்கங்கள் நீங்கி அத்துவிதாநுபவம் சித்திக்கும்.

குறிப்பு:– ஜீவன் முத்திக்கும் விதேக முத்திக்கும் நிர்விகல்ப ஸ்திதியால் பேதமில்லை யென்றாலும்; அநுபவத்தாலும் அதீதத்தாலும் பேதமுண்டு. அதாவது, நனவிற் சுழுத்தியாகிய ஜீவன்முத்தி நிலையில்; நினைவின்றேனும்; நனவு உண்டு: கேவல சுழுத்திபோன்ற சத்தாமாத்திர ஸ்திதியாகிய விதேக முத்தி நிலையில்: நனவுமில்லை. இவ்வாற்றால்: கேவல சித்துக்கும் கேவல ஜடத்துக்கும் அநுபவ ரஹிதத்தால் பேதமில்லை யென்றாலும்; முன்னது மெய்ஞ்ஞான மயம்: பின்னது அஞ்ஞான மயம்.

49. மெய்ஞ்ஞானமும் அஞ்ஞானமும்

ஞானமென்னும் அறிவுப்பொருள் என்றுமுள்ள எங்குமுள்ள சுயஞ் சச்சித்தாகையால்; அஞ்ஞானத்திற்கு ஓர்போதும் ஓரிடத்தும்

இருப்பில்லை. இதுவே உண்மையாயினும்: உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் மயக்குவதே பிரகிருதியின் விசித்திர சக்தியாகும். ஒருவன் தன்னை 'நான் அஞ்ஞானி' யென்று எந்த அறிவால் உணர்கிறானோ: அந்த அறிவினும் ஞானம் வேறில்லை. ஜடப்பொருளின் உண்மையை அறிதற்குத் தேவைப்படும் கட்புலன், அதன் இன்மையை அறிதற்கும் தேவைப்படுதல்போல்: சிற்பொருளின் உண்மையை அறிதற்குத் தேவைப்படும் அறிவு, அதன் இன்மையை அறிதற்கும் தேவைப்படுகிறது? உண்மை இவ்வாறாக; அஞ்ஞானமென்பது உண்மைப்பொருள் போல் பிரசித்தம் பெறக் காரணம் என்னையெனின்; புத்தி ஒன்றேயாயினும், அது நல்வழியிற் பிரயோகிக்கப்படும்போது நற்புத்தியென்றும், அல்வழியிற் பிரயோகிக்கப்படும்போது துர்ப்புத்தியென்றும் வியகரிக்கப் பெறுதல் போல: ஞானம் ஒன்றே யாயினும், அது ஆன்ம சொருபமாகிய மெய்யைப்பற்றி நிற்கும்போது மெய்ஞ்ஞானமென்றும்; உடலாகிய பொய்யைப்பற்றி நிற்கும்போது அஞ்ஞானமென்றும்; வழங்கப்பெறுகிறது. அஞ்ஞானமென்பது சொருப ஞானமின்மையைக் குறிப்பதாகும்.

அகந்தையே விருத்திகளின் மூலமாதலால்: விருத்திகளின் நிவிர்த்திக்கு அகந்தையின் நிவிர்த்தியே உபாயம். பிரயத்தனம் உள்ளவரையில் அடங்கப்பெறும் பிராணன்; பிரயத்தனம் நின்றவுடன் வெளிப்படல் போலவே: முயற்சி உள்ளவரையில் குவியப்பெறும் வாசனா விருத்திகள்; முயற்சி நின்றவுடன் விரியத்தொடங்கும். ஆதலால்: விருத்திகளின் நாசத்திற்கு அகந்தையின் நாசமே சாதனமென்பது அறிஞர் கண்ட உண்மை. காயச்சிமிழ் காயமில்லாதபோதும் அதன் வாசனையுடையதாதல் போலவும்; தென்னைமரம் மட்டைகளில்லாதபோதும் அவற்றின் வடுக்களுடையதாதல் போலவும்; புறத்துறவி விஷயங்களின் பிரவிருத்தி யில்லாதபோதும் அகந்தையுள்ள வரையில் அவற்றின் வாசனையுடையவனாகிறான். காரியவுலகம் துறக்கப்பெற்றாலும் காரணவகந்தை அதிசூக்குமமாக ஒட்டிக்கொண்டுதானிருக்கும். எல்லாம் விட்டவனிடத்தும் காணப்படும் சந்நியாசபாவம் தேக வாசனையின் சேஷமேயாம். இவ்வாற்றால்: சுபாவநிலையில் சதா விழிப்புற்றிருக்க வேண்டுமென்றும்; அயர்வுறின்—விளக்கு நின்றவுடன் இருள் சூழ்வதுபோல்—அகந்தை பற்றிக்கொள்ளுமென்றும் பெரியோர் சாதகருக்கு எச்சரிக்கை செய்துள்ளனர். ஞானமும் அகந்தையுமே முருகனாகவும் அசுரனாகவும் சித்திரிக்கப் பெறுவனவாம். தேகவாசனை முற்றாக நிவிர்த்திக்கப் பெறாதவரையில் பந்தத்தின் அத்தியந்த நிவிர்த்தி அசாத்தியமாதலால், அபரோட்ச ஞானத்தை; அதிடாபரோட்சமென்றும்: திடாபரோட்ச மென்றும்: இருவகைப்படுத்தினர் பெரியோர்.

50. அகச் சார்பும் புறச் சார்பும்

பரமான்மாவின் சொருபப் பிரகாசமாகிய நானுணர்வு, தான் இயற்கையில் பரமான்மாவாகவே யிருந்தும்; தேகபாவமாகிய அகப் பற்ருல்: ஜீவத்தன்மையை அடைகிறது. இதுவே: அதன்பால் ஏற் படும் முதல் குற்றமாகும். அகப்பற்றே விஷயத் தொடர்பாகிய பிற குற்றத்திற்கும், அதாவது புறப்பற்றுக்கும் ஏதுவாகுலும்: இவற்றுள் ஒன்றன் நிவிர்த்தியே மற்ருென்றன் நிவிர்த்திக்குச் சாதனமாகிறது. விவேகத்தாலன்றி அகந்தையும், வைராக்கியத்தாலன்றி வாசனையும், நீங்காவாகையால்; "முமுட்சுவை உய்விப்பது விவேக வைராக்கியங் களேயன்றி: ஞானமோக்ஷங்களல்ல. அவை புதுமையிற் சித்திப்பனவு மல்ல. சூரியனை மறைக்கும் மேகங்களைப்போல ஏற்கெனவேயுள்ள —ஞான மோக்ஷங்களை—மறைத்து நிற்கும் அகப்புறச் சார்புகளின் நிவிர்த்தியே சன்மார்க்க சாதனங்களின் பயனும்." "யானென தென் னுஞ் செருக்கறுப்பான்" என்பதில் இருவகைச் சார்புகளும் ஒருமையி லேயே குறிக்கப் பெறுகையால் ஏககாலத்தில் இவ்விரண்டுமே நிவிர்த்தி யாகப் பெற்ருலன்றி முற்ருன பந்த நிவிர்த்தி சித்தியாது. (செருக்கு—மனம்)

51. உருவ மனமும் அருவ மனமும்

மனம்: சத்துவம்–இராஜஸம்–தாமஸம் ஆகிய முக்குணங்களை யுடையது. இவற்றுள் சத்துவ குணம் மேலிடும்போது அருவமனம், அதாவது; பரமான்மாவென்றும்: இராஜஸ-தாமஸ குணங்கள் மேலிடும் போது உருவமனம், அதாவது; ஜீவான்மாவென்றும்: குறிப்பிடப் பெறுகிறது. இவ்விரண்டும் முறையே ஞானிகளிடமும் அஞ்ஞானிக ளிடமும் விளங்குவனவாம். அருவமனமே மெய்ஞ்ஞானமாதலால், அதற்கு மௌனமும் சாட்சித்துவமும் இயல்புகளாகின்றன. அதாவது, நிவிர்த்திப் பிராரப்தமுடைய ஞானிகள்பால் துரியாதீதமாகிய பிரம்ம வரிட்ட நிலையாகவும்; பிரவிருத்திப் பிராரப்தமுடைய ஞானிகள்பால் துரியமாகிய பிரம்மவித்து நிலையாகவும்; விளங்குவதாம். அஞ்ஞானிக ளின் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கும் பரமான்மாவின் சாயையாகிய சிதாபாசனே: உருவமனமாம். இது, ஜாக்கிர சொப்பன சுழுத்தி காலங்களில்—தூல சூக்கும காரண தேகங்களையும்; தூல சூக்கும காரணப் பிரபஞ்சங்களையும்; முறையே 'நான் நான்' என்றும் 'எனது எனது' என்றும் அபிமானித்து: ஜனன மரண துக்கங்களை யடைவ தால் ஜீவான்மாவெனப்படுகிறது. பிராம்மணனே அநுசாரத்தால் சண்டாளத்துவத்தையும், ஆசாரத்தால் பிராம்மணத்துவத்தையும், அடைதல் போல: பரமான்மாவே பொய்யுணர்வால் ஜீவனென்றும், மெய்யுணர்வால் பிரம்மமென்றும், வியகரிக்கப் பெறுகிறது.

ஜீவன் முத்தர் கரணேந்திரிய சஹிதராயினும் மனமற்றவராத லால்; அகங்கார மமகாரங்களின் நாசமே மனநாசமாகிறது.

52. கண்ட விருத்தியும் அகண்ட விருத்தியும்

பிரம்மத்தின் இருப்பை அறிவித்துக் கொண்டிருக்கும் பிரம்ம ஜோதியின் சுடராய, உள்ளுணர்வுக்கு; ஹிருதயமே இடமென்பதை அறிவோம். உதயாஸ்தமனமற்ற இச்சொரூப விருத்தி: கண்டமாயும் நாநாவாயும் குணங்குறியினவாயும் தோன்றிமறைவனவாயு முள்ள மனோவிருத்திகளைப் போன்றதன்று. இது, பிரம்மாகாரமே யாதலால்: சூரிய தரிசனத்திற்கு—வேறு பிரகாசத்தின் தேவையின்றி—அதன் கிரணமே போதுவதாதல்போல்: பிரம்ம தரிசனத்திற்கு—வேறு சாத னத்தின் அவசியமின்றி—அதன் சொரூபமாகிய உள்ளுணர்வே போது வதாம். பரமான்மாவாகிய சொரூபத்தைச் சாட்சாத்கரித்தற்கு; உள் ளுணர்வினும்: பிரத்தியட்சக்குறி வேறில்லை.

சச்சித்தும் சுயம்பிரகாசமும் பரிபூரணமும் அத்துவிதமும் நிரா காரமுமான இவ்வுள்ளுணர்வை; அகண்டாகார விருத்தியெனல்: கடலிற்கலந்த நதியைக் கடலாகார நதியெனல் போன்றதாம். அதாவது:

''தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்
பஞ்சகோ சமுங் கடந்து பாழையுந் தள்ளி யுள்ளிற்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடத்தன் பிரம்ம மென்னும்
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான்''

என்பதில், 'சுபாவநிலை'யை; நெஞ்சமற்றவன் பூரணத்தைக் கண்ட தாகச் சிறப்பிக்குமாறே: மனமற்ற ஜீவன்முத்தனின் மௌனநு பூதியை; அகண்டாகார விருத்தியாகச் சிறப்பிப்பதாம். நெஞ்சமற் றவனுக்குத் திருஷ்டியின்மையும்; பூரணத்திற்குத் திரிபுடி யின்மையும்; ஈண்டு உய்த்துணரற்பாலனவாம். மற்றும்:

''தேகமுதல் நானென்னல் துவித விருத்தி
திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விருத்தி
ஏகபரன் நானென்னல் அகண்ட விருத்தி
இம்மூன்று விருத்திகளில் இரண்டைத் தள்ளி
ஆகுமகண் டாகார விருத்தி தன்னை
அநவரத மாதரவா யப்பியா சித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்கள் தீர்த்துச்
சொன்னவகண் டேகரச சொருப மாவாய்''

—ரிபு கீதை

"திரிபெத் தோற்றந் தன்னைத் திருக்குமாத் திரமே யாகப்
பிரவிலா பித்து நின்னைப் பிரமமாத் திரமாய்ப் பார்த்திங்
கரியனே வெளியி லுள்ளி லாவது சமாதி பெற்றுக்
கருமபந் தம்வ ரைக்கும் காலநீ தள்ளுவாயே"

"சொருபநிட் டையையோர் காலுஞ் சொற்பமுந் தவிர வொண்ணு
தரணியி லிந்த நிட்டை தவிர்தலே கால னென்று
பிரியனே பகவானுன பிரமபுத் திரவ சிட்டன்
பரமவா சிட்ட நூலில் பலவிதம் பகர்ந்தா னன்றே"

"நிகழ்சுயஞ் சோதி யாகி நிகிலசாட் சியுமா மான்மா
புகலும்விஞ் ஞான கோசம் பொருந்தியே விளங்கு மென்றும்
இகழ்விலா விவ்வான் மாவை யிலக்கிய மாகப் பற்றி
அகமென வநுப விப்பாய் அகண்டமாம் விருத்தி யாலே"

—விவேக சூடாமணி

என்னும் சுருதிகளின்படி: ஜீவன் முக்தனது பற்றுக்கோடாகிய நானுணர்வின் இலக்கியார்த்தத்தைக் குறிப்பதுமாம்.

53. பூரண ஓய்வும் பூரண முயல்வும்

சிலர் நினைப்பது போல்; சும்மாவிருக்கை: சோம்பலைக் குறிப்பதன்று. உணர்வுக்கெல்லாம் உணர்வாயும் சச்சித்தாயுமுள்ள சொருபத்தை; நுண்ணுணர்வால் சாட்சாத்கரித்து! நிற்கையாகிய உண்ணுட்டம்: ஆற்றெழுக்கைப் போன்று இடைவிடாது அநுசந்திக்கப் பெறுவதாம். பலாத்காரத்தால் தடுக்கப்பெறும் மோட்டாரிடத்தும்; தடுத்துக் கொண்டிருக்கும் வீரனிடத்தும்; அகத்தின்கண் இடையறு தியற்றப் பெறும் முயற்சிகள் புறத்தே தோன்றுமைபோல: காற்றினும் கன வேகமுடைய சிந்தைக்கும்; அதன் இயக்கத்தைத் தடுத்து நிறுத்தும் சாதகனுக்கும்; உள்ளத்தின்கண் நிகழும் போராட்டங்கள் இடைவிடா தியல்வனவேனும்: பிறர் திருஷ்டிக்குப் பிரதீதியாவதில்லை. "சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடம்" என்பதால், மனதை ஹிருதயத்தில் தடுத்து நிற்கும் திறமே; "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்னும் பெரியோர் அநுபவப்படி: திறங்களுக்கெல்லாம் அரிதாதல் காண்க. பூரண ஓய்வே சஹஜமாய்விடின், பின்னர் அதுவே; பூரண ஓய்வு (சாந்தி) எனப்படும்.

54. அருவ மனமும் அவஸ்தாத் திரயமும்

சஹஜ நிருவிகற்பம்—அறிதுயில்—ஜாக்ர சொப்பனம்—நினைவறு நினைவு, என்பவாதிய காரணப் பெயர்களால் விளக்கப்பெறும் ஸ்திதப்

பிரக்ஞையை இயற்கையாகவுடைய ஞானி; சுபாவ நிலையினின்று நழுவாமலே: சூழ்நிலைகளை உணர்தல் கூடும். கானலின் பொய்ம்மையை உணர்ந்தவனுக்கு அதன்கண் ஜலமயக்கம் தோன்றாமை போலும்; படக்காட்சிகளின் ஆரோபத்தை உணர்ந்தவனுக்கு அவற்றால் சுக துக்கங்கள் ஏற்படாமை போலும்; சூழ்நிலைகளின் அசத்தியத்தை; உணர்ந்த ஜீவன் முத்தனுக்கு: அவற்றின்கண் சம்பந்தமோ சத்திய புத்தியோ ஏற்படுவதில்லை. அவை, அவ்வப்போதே கனவாக மறைந்தொழிகையால்; அவன் புற நிகழ்ச்சிகளைக் கண்டும்: காணாதவனாகிறான். இக்காரணத்தால்: அவற்றி லெதுவும் வாசனாரூபமாக அவன் உள்ளத்திற் பதிவதில்லை. உண்ணலாதிய சொந்த வியவகாரங்களிலும்: ஜீவன் முக்தன் அநுபவம் இதுவே.

"சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தால்
எத்தனை யெண்ணி னாலும் ஏதுசெய் தாலுமென்ன?
நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனவே போல
அத்தனை யும்பொய் தானே! ஆனந்த வடிவு நானே"

"ஐயா கேளீர் தத்துவ ஞானியும் அஞ்ஞா னிகள்போலச்
செய்யா நின்றேன் கண்டேன் உண்டேன் சென்றேன் எனலாமோ?
பொய்யாம் விபரீ தங்கள் அவர்க்குப் போயின வென்றீரே:
மெய்யாம் பிரம விசாரம் இதன்றே: வெளியா வுரையீரே"

"ஓய்ந்த கனவில் கண்ட பழங்கதை ஓதுவன் வாதனையால்
ஆய்ந்தறி வுற்றவன் அப்படி செப்புவன் ஆபா சனுமாகான்
மாய்ந்ததன் னுடல்வே மளவும் விண்ணவன் மநுட னெனப்படுவான்
வீய்ந்த சிதாபா சன்போ மளவும் விவகா ரந்தொடரும்"

—கைவல்ய நவநீதம்

55. சுகாநுபூதியும் சுகாதீதமும்

சிலர் கூறுவதுபோல்: தேகப் பிரக்ஞையற்ற நிலையே கைவல்ய நிலையென்பது உண்மையன்று. என்னையெனின்: மயக்கம் மூர்ச்சை மரணமாதிய வற்றா லுண்டாகும் நனவின்மையை; ஞானாவஸ்தையாக எவரும் ஏற்பதில்லை. பிராணாயாமம் முதலிய ஹடயோக சாதனங்களாலும்; கேசரியாதிய முத்திரைப் பயிற்சிகளாலும்; ஒவ்வோர்கால் ஏற்படும் ப்ரக்ஞையற்ற ஸ்திதியும்: ஜடசமாதி யெனப்படுகிறது. கேவல சமாதியால் ஒடுக்கப்பெறும் மனம்: பிறவிக்கு ஏதுவாகும். ஆதலால்; மனோலயம்: மோனசமாதியாகவும் ஞானநிஷ்டையாகவும் மதிக்கப் பெறுவதில்லை. "மறுகுவா தனைகள் தீர்ந்த

மௌனத்தை யன்றிவேறோர் உறுகதி நல்லதில்லை" என்னும் ஞான வாசிஷ்டத் துணிவின்படி; வாசனையற்ற சொரூபஞான சித்தியே கைவல்லிய சித்தியாகும். உடலுணர்வற்ற சமாதி சித்தியும்—நாற்ற முறும் பொன்மலரேபோல்—ஞானத்திற்குச் சிறப்பினதே யென்றாலும்: அஞ்ஞான நிவிர்த்தியே முத்திக்குப் போதியதாம். அதுவே இன்றி யமையாததுமாம். வாசனாக்ஷயமற்ற ஜடசமாதியால், விலட்சணானந் தத்தைத் தவிர வேறு பயனின்மையால் இத்தகைய மூடசமாதிக்கும் காடசுழுத்திக்கும் பேதமில்லை.

பாமரனுக்கு உறக்கத்தையும் விழிப்பையும் உண்டாக்கும் பிராரப்த சக்தியே பண்டிதனுக்குக் கேவல நிஷ்டையையும் சஹஜ நிஷ்டையையும் கூட்டுவிப்பதாதலால்: தேகப் பிரக்ஞையற்ற சமாதி நிலை எல்லோருக்குமே சித்திப்பதன்று.

"உத்தமகுருவே யாருடருமா யொருதொழி லற்றவருள்
சித்தமடங்கு தியானுதிகள் சிலர் செய்குவ தேனென்றால்
இத்தரைமருவு பிராரத்தப்பிறி வெப்படி யப்படியே
முத்தரும் வெகுவித மாகுவர்....................."

—கைவல்லியம்

என்பதாதிய சுருதிகளால், ஆரூட ஞானியையும் நிர்விகற்ப சமாதிக்கு முயல்விப்பது பிராரப்தமே யென்பது தெளிவாதலால்; தேகாந்தம் வரையுமோ குறிப்பிட்ட காலம் வரையுமோ வாய்க்கப் பெறும் வரிட்டபதம் போன்ற அதீத நிலை;* நியதியின் காலவரம்பைப் பொறுத்ததாதல் காண்க.

பிரம்ம ஞானத்தில் சமத்துவமுடைய ஞானிகளை, பிரம்மவித்து —பிரம்மவரன்—பிரம்ம வரியான்—பிரம்ம வரிட்டன் எனப் பிரிப்பது:

---

* பகவான் ஸ்ரீ ரமணர் நிர்விகற்ப சமாதி நிலையை இயற்கை யாகப் பள்ளிப்பருவத்திலேயே வாய்க்கப்பெற்றா ரென்பதும்; அருணா சல வாசத்தின் முற்பகுதியில் பல்லாண்டுகள் பஞ்சேந்திரிய உணர்ச்சி களும் பசிதாகங்களுமின்றிச் சதா வரிட்டனைப் போன்ற அதீத நிலையில் ஆழ்ந்திருக்கப் பெற்றாரென்பதும்; அப்பால், அவ்வதீத நிலையினின்று சஹஜநிலை கைவரப்பெற்று அந்நிலையிலேயே மஹா நிர்வாண சித்தி வரையில் பிரம்மநிஷ்ட பண்டிதராகப் பிரகாசிக்கப் பெற்றாரென்பதும்; கண்டு சிந்திக்கற் பாலனவாம்.

தேகப் பிரக்ஞையற்ற கேவல நிர்விகற்ப சமாதி சித்தியின் கால வரம்பு களே. ஞானப் பிராப்தியிலேயே சித்தோப சாந்தமும் சித்திப்பதால்: சுகப் பிராப்திக்குத் தனி முயற்சி தேவையில்லை. அங்ஙனமேல்: சதா சமாதியிலேயே அழுந்தற்பொருட்டுச் சில ஞானிகளால் மேற்கொள்ளப் பெறும் முயற்சிகளெல்லாம் வியர்த்தமாமோவெனின்: அன்று: தரையே நித்திரைக்குப் போதுமேனும், மலரணை முதலிய சாதனங்கள் அதிக சுகத்திற்கு ஹேதுக்களாமாறு: ஞானமே பந்த நிவிர்த்திக்குப் போதுமேனும், திருஷ்ட துக்கமற்ற தீர்க்க சுகப் பிராப்திக்கு அவை சாதனங்களாதலால் பயனுடையனவே என்க.

"அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா லுலும் முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றல்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரம்மவித் தநுப விப்பான்
வரியானும் வரனும் மற்றை வரிட்டனும் சுகமாய் வாழ்வார்"
—கைவல்லியம்

என்பவாதிய சுருதிகள்; விலட்சணானந்த சஹித ஜீவன்முத்தி நிலை யைச் சிறப்பித்தல் காண்க. ஞானமும் விலட்சணானந்தமும் வெவ் வேறு பிராப்திகளாதலால்: அவற்றிடையே பரஸ்பரக் காரணம் கற்பித் தல் மயக்கமாம். ஞானமே முத்திக்குச் சாதனமாதலால்; ஞானத்தா லன்றி: வேறெப் பிரயோசனங்களாலும் ஆன்மசித்தி கைகூடா தென்பது தீர்வை.

"பசிதாக மின்றி யெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக் கடைத்தும்
மௌனத் திருந்து முயர் மலைநுழைவு புக்கியும்
மன்னுதச நாடி முற்றுஞ்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச்
சோமவட் டத்த டைத்துஞ்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோறுநிலை நிற்க வீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ?"
—தாயுமானவர்

"ஜீவ னொடுக்கம் பூத வொடுக்கந்
தேற வுதிக்கும்—பரஞான
தீப விளக்கங் காண வெனக்குன்
சீதள பத்மம்—தருவாயே
—அருணகிரிநாதர்

56. ஜீவன் முக்தனும் சிந்தை யெழுச்சியும்

அரூபமான வாயு; அகண்டமான பூதாகாயத்தில் அபேதமாக வியாபித்திருப்பது போல்: சொச்சமான சிற்சக்தி; பரிபூரணமான பராகாயத்தில் அத்துவிதமாக நிறைந்திருக்கிறது. எப்படி, வாயுவின்கண்; சலனமென்றும் நிச்சலனமென்றும் இருவேறு ஆற்றல்கள் உள்ளனவோ: அப்படியே, சித்தின்கண்; பின்னமென்றும் அபின்னமென்றும் இருவேறு சக்திகள் உள்ளன. இவை முறையே உருவமனமென்றும் அருவமனமென்றும் கூறப்பெறும். உருவமனம் அஞ்ஞானியிடமும் அருவமனம் மெய்ஞ்ஞானியிடமும் விளங்கப் பெறுவன. பின்ன சக்தியாகிய உருவமனம் சித்தின்போலி வடிவம்: உபாதி யுணர்வினது: சங்கற்பங்களையே வடிவாக வுடையது. சங்கற்பங்களுக்குக் காரணம் பற்று. அபின்ன சக்தியாகிய அருவமனமே சித்தின் சுய சொரூபம். ஜீவன்முத்தனிடம் பரமான்ம சொரூபமாகப் பிரகாசிக்கும் அருவமனம். நிருபாதிகமானதால்; மோனத்தையே வடிவாக வுடையதாம். பற்றின்மையால் அதில் சங்கற்பத்துக்கு இடமில்லை. சூழ்நிலைகளைப் பொறுத்து ஒவ்வோர்கால் ஞானிகளிடமும் சிற்சில எண்ணங்கள் தோன்றக்கூடுமேனும், அவர்கள் அந்நினைவுகளின் தோற்றத்திற்கு நிமித்த காரணராகவே நிற்றலால்; அவர்களது உள்ளத்தைப் பற்றாத அந்நினைவுகள்; உயிர்ப்பற்ற விதைகளே போல்: புனர்ஜென்மங்களுக்கு ஹேதுவாவதில்லை.

57. பிரம்மவித்தும் பிராரப்தமும்

வியாவகாரிக உலகிற்குக் கடவுள் தத்துவம் எளிதில் தெளிய முடியாததோர் தலைவலியாகத் தோன்றலைப் போலவே, பாரமார்த்திக உலகிற்குப் பிராரப்த தத்துவம் சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாததோர் சிக்கலான பிரச்னையாகத் தோன்றலால்; ஜீவன் முத்தனுக்குப் பிராரப்தம் உண்டா ? இல்லையா ? என்பது: தொன்று தொட்டுப் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. எல்லாப் பிரச்னைகளுக்கும் பரிகாரம் காணவேண்டிய இறுதியிடம் சுருதிகளே யென்றாலும், அவை; "பேதித்த சமயமோ ஒன்றுசொன படியொன்று பேசாது" என்னும் பெரியோர்களின் அநுபவத்திற்கேற்ப: இத்தகைய முக்கிய பிரச்னைகளுக்கெல்லாம் திட்டமான தீர்ப்பளிப்பதில்லை. என்னையெனின்: பண்பாடுகளில் சமத்துவமற்ற பகுத்தறிவுலகம், பாரமார்த்திகமென்றும் வியாவகாரிகமென்றும் இருவேறு திருஷ்டிகளுடையனவா யிருத்தலால்; அதன் சங்கையைத் தவிர்க்கும் சமாதானமும் இருவேறு முடிவுகளுடையாதலால் என்க. என்றாலும், எதிலும் உண்மையை நாடும் உத்தமருக்கு:

''நீயச் சச்சிதா னந்தமாய் வேறென்றும்
நினைந்திடா திருப்பாயேல்
மாயச் சத்திபோம் ஈதன்றி மறைகளில்
மந்திரம் காணேமே''

என்னும் பெரியோர் துணிவின்படி: அசத்தியக்கலப்பற்ற அன்னைசொற் போன்ற வேதவாக்கைப் பார்க்கிலும் நம்பிக்கைக்குரியது வேறில்லை யென்பது திண்ணம். நிற்க: மேற்கூறிய சங்கைக்குச் சான்றோர் கூறும் சமாதானங்களைச் சிறிது ஆராய்வோம்.

''வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
வெனைத்தாய நூலகத்து மில்லை''

என்று, பிராரப்தத்தைப் பொதுவகையால் எல்லோருக்கும் அங்கீகரிக் கும் மூதாட்டியார்; ''விண்ணுறுவார்க் கில்லை விதி'' என்று சிறப்பு வகையால் ஞானிகளுக்கு நிஷேதிப்பது மயக்கத்திற் குரியதேனும்: உய்த்துணர்வார்க்கு அதன் உட்க்ருத்து புலனுமென்பதில் ஐயமில்லை. எங்ஙனமெனின்:

பிராரப்தம் உபாதியைப்பற்றிய தாகையாலும்; உடல் நாட்ட முடைய வியாவகாரிக திருஷ்டியினர்க்கே அதைப்பற்றிய சங்கைகள் எழுகையாலும்; உபாதியும் உபாதி நாட்டமும் உள்ளவரையில்: பிரா ரப்தம் அங்கீகரித்தற் குரியதாகும். எனவே வியாவகாரிக அநுபவப்படி;

''வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாது''

என்று பட்டினத்தடிகள் கூறுமாறு, வினைப்போகம் உள்ளளவும்; ஞானியின் உடல் வாழ்க்கையிலும் பிராரப்தம் ஒப்புக்கொள்ளப் படுவது தான்: சுருதி—யுக்தி—அநுபவங்களுக்கொத்த உண்மையு மாகும். மற்றும்:

''பஞ்சினை யூழித் தீப்போல் பலசன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ றாக்கும்
கிஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராரத் தத்தின் வினையநு பவித்துத் தீரும்''

என்னும் கைவல்லியத் துணிவின்படி, ஞானப் பிராப்திக்குப் பின் கர்த்ருத்வ போக்த்ருத்வ பாவங்கள் ஞானிக்கு இல்லாமையால்; அவன் சஞ்சித ஆகாமியங்களினின்று விடுபடல் கூடுமேனும்: அநுபவத்தா லன்றிப் பிராரப்தத்தினின்று விடுபடல் அசாத்தியமாம். என்னையெனின்:

ஜீவன் முக்தனுடைய சரீரமேனும், அது ஞானப் பிராப்திக்கு முன்பே தோன்றியதாதலால்; அதற்கு ஏற்கெனவே விதிக்கப் பெற்றுள்ள பிராரப்த நுகர்ச்சியினின்று அது எவ்வாற்றுனும் தப்ப முடியாத நியதியுடைமையா லென்க. எனினும்: பிராரப்தாநுபவத்தில் ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதமுண்டு. என்னையெனின்; ஆகாயத்தைத் தவிர்த்த ஏனைய பூதங்களின் இயக்கத்திற்கு ஆகாயமே ஆதாரமானுலும், அது அவற்ருல் பரிசிக்கப் பெருமைபோலும்; படக்காட்சிகளின் சலனத்திற்குத் திரையே இடமானுலும், அது அவற்றின் தட்பவெட்பங்களால் பாதிக்கப் பெருமைபோலும்; கரணேந்திரியங்களின் தோற்ற வொடுக்கங்கட்கு நிலைக்களனுன பரமான்மா, அவற்றின் சுக துக்கங்களால் ஓர்போதும் தாக்குறுவதில்லை. இவ்வாற்ருல்; பரமான்ம சொரூபியான ஞானி: தேக சம்பந்தமான பிராரப்த போகங்களால் எவ்வித விகாரத்திற்கும் உள்ளாவதில்லை. ஏனென்ருல்: ஞானி தனது வர்த்தமான சரீரத்தைப் பற்றும் சுகதுக்கங்கள் பூர்வ கன்மங்களின் தவிர்க்க முடியாத விளைவுகளா மென்னும் பிராரப்த ரகசியத்தை உணர்ந்தவனுதலால், அவன் அவற்றுக்குச் சாட்சிமாத்திரனுய என்றும் உதாசீன பாவத்தால் விதேக முத்தி வரையில் தனது சுபாவ ஸ்திதியைக் காத்து நிற்கையாலும்; அதனுல், எதிலும் மகிழ்தலும் வாடலுமாகிய தொந்தங்கள் அவனைப் பற்ருமையாலும்; அவனது சொரூப திருஷ்டிக்குப் பிராரப்தம் இல்லையென்பது ஆன்ருேர் துணிபு.*

ஆதலால் உடலை நோக்கும் வியாவகாரிக திருஷ்டிக்குப் பிராரப்தத்தின் உண்மையும், உணர்வை நோக்கும் பாரமார்த்திக திருஷ்டிக்குப் பிராரப்தத்தின் இன்மையும், அநுபவமாதலால்; அவ்விரு திறங்களையுமே அங்கீகரிக்கின்றனர் பெரியோர். இவ்வாறு, சொரூப நிலையால் பிராரப்தம் நிஷேதிக்கப் பெற்ருலும் பிரம்ம வித்துக்களின் திருஷ்ட துக்கங்களால் அது அங்கீகரிக்கப்பெறுகிறது.

"பெரிதான திருஷ்ட துக்கம் பிரம்மவித் தநுப விப்பான்"

—கைவல்லியம்

---

*"பசிதாக முயிர்க்கெனவே பயந்துக்கஞ் சுகங்காமம்
வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா ரென்றவரோ"

"பார்ப்பதுவுங் கேட்பதுவும் பகர்வதுவுஞ் செல்வதுவும்
ஏற்பதுவுங் கரணதன்ம மெனத்துணிவா ரென்றவரோ"

—கீதாசாரத்தாலாட்டு

"என்செய லாவ தியாதொன் றுமில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்றேன்:இந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன் றுமில்லை: பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவின் றுவந்திங்கு மூண்டதுவே."

—பட்டினத்தார்

என்பவாதிய அநுபவங்களால் ஒப்புக்கொள்ளப் பெறும் பிரம்ம வித்துக்களின் பிராரப்த நுகர்ச்சியை; மற்றவர்களைப்போலவே; மஹர்ஷியும் ஒப்புக்கொள்ளுகிருர், எங்ஙனமெனின்;

மஹான்களின் சர்வ சக்தித்துவத்தில் நம்பிக்கையுள்ள* ஒருவர், மஹர்ஷியின் சரீரம் நோய்வாய்ப்பட்டுத் தளர்வெய்தலைக் காணச் சகியாது; அந்நோயைத் தமக்கு மாற்றியருளுமாறும்; அதனுல் இன்னும் சிறிது காலம் தம்போன்ற தீனர்களின் ரக்ஷணுர்த்தமாக இச் சகளத் திருமேனியிலேயே விளங்கத் திருவுளங் கொள்ளுமாறும்; மஹர்ஷியிடம் ஓர்கால் உருக்கத்துடன் விண்ணப்பித்து நின்ருர். அவரது குழந்தை யுள்ளத்தைக் கண்டு வியப்புற்ற பகவான், கருணை பூத்தவராய்; அன்னுரைக் கிருபையுடன் நோக்கி:

"இந்தப் பிணியைச் சிருட்டித்தது யார்? அவருக்கன்ரே இதை மாற்றும் சுதந்தரமும் உண்டு! நான்கு பேர் சுமக்க வேண்டிய இவ்வூன் பொதியை நான் ஒருவனுகவே இந்நாள் வரையில் சுமந்து நிற்பது போதாதா? இனியுமா சுமந்துகொண்டிருக்க வேண்டும்! ※

---

* கலைஞானங்களிற் சிறந்த மேதாவியான ஸ்ரீ விவேகானந்தர்கூட: ஓர்கால், தமது குருதேவரைப் பீடித்திருந்த தொண்டை நோயின் கடுமைக்குப் பொருருராகி:

"தேவியைத் தரிசிக்குந் திருவருட்பேறுடைய தங்களுக்கு அத்தேவியின் அருளைக்கொண்டே இந்நோயைத் தீர்த்துக்கொள்ளல் அசாத்தியமா ?" என்று உள்ளக் கசிவுடன் ஸ்ரீ ராமகிருஷ்ணரையே நேரில் வினவியதாக அன்னுர் சரிதம் கூறுகிறது.

※"..............................தன்னைக்
கண்ட மெய்த்தவன் காயந் தனையன
முண்ட நெட்டிலை யொப்ப விடுப்பனுல்"

—பிரபுலிங்கலீலை

என்ற கனிவார்ந்த வார்த்தைகளால்; இயற்கையின் நியதியைத்

தெளிவாக்கி: அம்மெய்யன்பரைச் சாந்தப்படுத்தி யருளினர். இந் நிகழ்ச்சியிலிருந்தே, பிராரப்தாநுபவங்கள் ஞானிக்குத் தோன்றுதிருப்ப தில்லை யென்பதும்; தோன்றினும், எவையெவை எவ்வெக்காலங்களில் எவ்வெவ்வாறு நடைபெறல் வேண்டுமோ: அவையவை அவ்வக் காலங்களில் அவ்வவ்வாறு நடந்தே தீர்வனவாதலால், அவற்றில் எதை யும் மாற்றவோ குறைக்கவோ தனக்கு உரிமையில்லை யென்ற உணர் வால், அவற்றிற்கெல்லாம் சாட்சிமாத்திரனய் சுபாவ ஸ்திதியிலேயே நிலைபெற்றிருப்பானென்பதும்; மஹர்ஷிக்கும் உடன்பாடாதல் காண்க. மற்றும்:

i "அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங் கிருந்து ஆட்டுவிப்பன்: நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது: நடப்பது என் தடை செய்யினும் நில்லாது" என்று ஆதியிலும்;*

ii "தமக்கென்று ஓரிடத்திலோ நாளைக்கென்று ஓரேற்பாட் டிலோ நாட்டம் கொள்ளாது, பட்சிகள் போன்று பற்றற்று வாழும் சாதுக்களின் தருமப்படி; எங்கேனும் கால் சென்ற வழியில் காலத் தைக் கழிக்கலாமென்றல்: என் பிராரப்தம் இடங்கொடுக்கவில்லையே! எத்தனையோ முறை முயன்றும், ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு தடையை ஏற்படுத்தி; எங்கும் நகரவிடாமல் என்னை இவ்விடத்தி லேயே இருத்திக்கொண்டிருக்கிறதே! இங்ஙனம், இடம் பொருள் ஏவல் களோடிருந்தால்: வியவகாரங்கள் தோன்றுமலா யிருக்கும்? என்ன செய்வது? என் பிராரப்தம் இப்படியிருக்கிறது!" என்று மத்தியிலும்;※

---

* மஹர்ஷி அருணசலத்தை யடைந்த சின்னட்களில், அவரது தாயார் வந்து அவரைத் தம்மூருக்கே வந்துவிடுமாறு மன்றடிக் கேட் டுக் கொண்டபோது; அன்னையின் ஆறுதலுக்காக மஹர்ஷியால் எழுத்து மூலம் அருளப்பெற்றது

※ மஹர்ஷியின் மலையடிவாசத்தின் ஆரம்ப நாட்களில், மிலாடர்கோன் (மெய்ப்பொருள் நாயனர்) முன்பும்: மஹாத்மா (காந்திஜி) முன்பும்: முறையே மெய்யன்பர்களாக நடித்த முத்தநாதனை யும் விநாயக கோட்ஸேயையும் போன்று; பகவான் முன் சிறிது காலம் பக்தராக நடித்துவந்த படிறரொருவரால் ஆசிரம ஸ்தல பாத்தி யதையை முன்னிட்டுத் தொடுக்கப்பெற்ற முறையற்ற நடவடிக் கைகளை வியாஜமாகக் கொண்டு: சாதுக்களுக்கு எவ்வாற்றுலும் தனிமையே ஏற்புடைத்தாமென்னுங் கருத்தில் மஹர்ஷியால் பொதுப் படக் கூறப்பெற்றது.

குறிப்பு:- முன்னிருவரும் முன்நின்றவரது உடல்களைச் சிதைத்தவராக: பின்னவர் உள்ளத்தைச் சிதைத்தவரானர். (இவர் தரித்திருந்த காவி யாடையை முன்னிட்டு இவர் பெயர் இங்கு குறிப்பிடப்பெறவில்லை.)

iii "நடப்பவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பதுதான் நமது வேலை: எதிலும் இப்படியென்றும் அப்படியென்றும் பாவித்தல் அல்ல." என்று அந்தத்திலும்;*

கூறியுள்ள மஹர்ஷியின் பொன்மொழிகளுக்கெல்லாம் பொருள் ஒன்றேயாக: அதாவது; ஞானியேனும்: ஊழைக் கடத்தல் கூடா தென்பதைத் தமது வியாவகாரிக வாழ்க்கையின் ஆரம்பமுதல் முடிவு வரையில் ஒப்புக்கொள்வதாயிருக்க; ஓர்கால், அதற்கு மாருக:

"சஞ்சிதவா காமியங்கள் சாராவாம் ஞானிக்கூழ்
விஞ்சுமெனல் வேற்ருேர்கேள் விக்குவிளம்—புஞ்சொல்லாம்
பர்த்தாபோய்க் கைம்மையுருப் பத்தினியெஞ் சாதது!போற்
கர்த்தாபோ மூவினையுங் காண்"

எனக்கூறியதன் தாற்பரிய மென்னையெனின்: இவ்விஷயமாக ஏற் கெனவே கூறியுள்ளவாறு; உபாதி நாட்டத்தும் நிருபாதி நாட்டத்தும் முறையே உண்மையும் இன்மையுமாய பிராரப்தத்தின் வியாவகாரிக—பாரமார்த்திக சித்தாந்தங்களைக் குறிப்பிட்டதாம்.

குறிப்பு:—

(1) சஞ்சித ஆகாமியங்களைப் போலவே ஞானிக்குப் பிராரப்தமு மில்லை யென்பது ஜீவன் முக்தனுக்குப் பிராரப்த நுகர்ச்சியில்லை யென்னுங் கருத்திற் கூறுவதன்று. 'ஜென்மாந்தர கன்மங்களினின்று விதிக்கப் பெற்றனவும் நுகர்ச்சியாலன்றித் தீராதனவுமான பிராரப்த போகங்களினின்று தப்புவது: அஞ்ஞானிகளைப்போலவே ஞானிக்கும் இயலாதென்பது திண்ணம். என்ருலும்: ஞானி மெய்யுணர்வாலும் செருக்கின்மையாலும் முறையே சஞ்சித ஆகாமியங்களின் தொடர் பின்றிக் கேவல ஆன்மாவாகவே இயற்கையிற் பிரகாசிக்கப் பெறுகை யால், அந்தப் பாரமார்த்திக திருஷ்டிப்படி; அவனது எதார்த்த சொரூபத்தில்; அதாவது, பரமான்மாவின்கண் பிராரப்த போகங்கள் தோற்றுவதில்லை:' என்னுங் கருத்திலேயே கூறப்பெறுவதாகும், மற்றும்:

---

* மஹர்ஷியின் திருமேனியைப் பீடித்த அரும்பிணியின் தீரா மைக் காற்ருத பக்தர்களைச் சாந்தப்படுத்தும் பொருட்டும்; விதியைத் தடுக்கும் முயற்சி வியர்த்தமாமென்னும் பிராரப்த ரகசியத்தைத் தெளி வுறுத்தற் பொருட்டும்: மஹர்ஷியால் திருவாய்மலர்ந்தருளப் பெற்றது.

(2) ஜீவன் முக்தனுக்குப் பிராரப்தம் உண்டா? இல்லையா? என்னும் சந்தேகம் அஞ்ஞானிக்கே எழுகிறது. முக்திநிலையைப்பற்றிய சந்தேக நிவிர்த்திகளுக்கான ஒரே வழி: அகந்தை யழியப் பெறுகையே. என்னையெனின்: முத்திநிலையில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின் மையா லென்க. பகவான் பல்வேறு வினுக்களுக்கும் அகந்தையின் நிவிர்த்தி யொன்றையே விடையாகக் கூறிவந்தமைக்குக் காரணம் இதுவே.

58. பிராரப்தமும் ஆகாமியமும்

வித்துக்கும் மரத்துக்குமுள்ள பரஸ்பரக் காரணங்களுள், முதன் மையானதை நிச்சயிக்கக் கூடாமைபோலவே; பிராரப்த—ஆகாமியங் களுக்குள்ள பரஸ்பரக் காரணங்களுள், இன்னதுதான் முதன்மைய தென்பதும்: நிண்ணயிக்க வொண்ணுததாம். என்னையெனின்: அவ் விரண்டுமே அநாதியின வாதலால், அவற்றுள்; 'பிறப்பிறப்புகளுக்குக் காரணமான பிராரப்த வினை முதலா?' 'பிராரப்தத்திற்குக் காரணமான ஆகாமிய வினை முதலா?' என்பதைத் திட்டமாகத் தீர்மானிக்க முடியா மையா லென்க. இக்காரணத்தாலேயே, பிராரப்தாநுசாரமாகப் பிறவி யடுப்பும், பிறப்பாநுசாரமாக ஆகாமியத்தொடுப்பு முடையவராய்;

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்னும் ஆன்றோ ரநுபவப்படி: ஜனன மரணச் சுழற்சியி னின்று தப்பும் வழியறியாது பல்லூழி காலமாகப் பரிதவித்து நிற்கின் றனர் பாமரர். ஞானியோ, அவ்விரண்டுக்குமுள்ள காரண—காரியத் தொடர்புகள் அநாதியானவை யென்பதையும்; அவற்றின் கர்த்தா வாகிய அகந்தையின் நிவிர்த்தியாலன்றி அவை நிவிர்த்திக்கப்பெரு வென்பதையும் அறிந்தவனாதலால்; மெய்யுணர்வால் அவற்றின் பிணிப் பினின்று தன்னை விடுவித்துக்கொண்டு: அவ்விரண்டையுமே வர்த்த மான சரீரத்தோடு முடிவடையச் செய்துவிடுகிறுன். எங்ஙனமெனின்: வர்த்தமான சுகதுக்கங்களுக்கான உண்மைக் காரணத்தை; அதாவது, பூதஜென்ம ஆகாமிய வித்துக்களின் விளைவாகிய ஊழின் நியதி யைச் செவ்வே யுணர்ந்துள்ள ஞானி, தன்னைச் சூழும் நிகழ்கால நன்மை தீமைகளுக்கு முகாந்தரங்களாகக் கண்முன் நிற்பவை,

நிமித்த காரணங்களே யென்பதிலும் தெளிவுள்ளவனுதலால்; அந் நிமித்தங்களிற் காய்தலும் உவத்தலுமின்றி எவ்விளைவிலும் அதன் காரணமாகிய விதியையே முன்னிலைப்படுத்திக்கொண்டு: எவர்மாட்டும் விருப்பு வெறுப்புக எற்றவனுய்த் தனக்கென்று விதிக்கப்பெற்றுள்ள பிராரத்த கன்மங்களைப் பொறுமையுடன் புசித்துத் தீர்த்தலாலென்க.*

---

* ஆசிரமத்துள் களவாடப்புகுந்த கள்வர்களுள் தம்மை (மஹர்ஷியை)த் தாக்கியவனைக் காட்டியருளுமாறு போலீசார் மஹர்ஷியை வேண்டி நிற்கையில்:

"நான் எவனை அடித்தேனென்பதே எனக்குத் தெரியாதே! என்னை அடித்தவனை எப்படித் தெரிந்து சொல்ல முடியும்"

(முன் ஜென்மத்தில் நான் எவனை அடித்தேனே: அவனே இந்த ஜென்மத்தில் என்னை அடித்தவனும்: அடிக்கு அடி சரியாய்விட்டது. இனி: அதைப்பற்றிய விசாரணையும் ? ஆகாமியத் தேட்டமும் எதற்கு?)

என்று கூறிய மஹர்ஷியின் அருள் வாக்குகளும்; தீங்கிழைத்த அக் கள்வர்க்கு உணவாதிகளால் நன்மை செய்த அன்னரது கருணைச் செயல்களும்; பற்றற்ற சாட்சிபாவத்திற்கும் இராகத் துவேஷமற்ற சமபாவத்திற்கும் அறிகுறிகளாதல் காண்க. மற்றும்;

"பொன்றும் பொருளைப் பொருளாக வும்போற்ருர்
என்றும் நலந்தீங் கெடுத்துரையார்—சென்றசில
காரியத்தை நோக்கிக் கழியா ரிழிவுசெய்யார்
ஆரியரே தாமாகு வார்"

"எங்கெந்தப் போக மெதிராகு மவ்வளவுக்
கந்தந்தப் போக மனுசரிப்பார்—பந்தமற்று
நீதித் தனிவழியே நிற்பர்கிர ணம்பரவு
மாதித்தன் போலே யவர்"

—சொருபசாரம்

"சென்றவிட மெல்லாம் திருவருளே தாரகமாய்
நின்றவர்க்கே யானந்த நிட்டை பராபரமே"

—தாயுமானவர்

என்பவாதிய ஜீவன்முத்தி யிலக்கணங்களுக் கெல்லாம் அவர் இலக்கிய மாக விளங்கினமையும்: தெளிவாதல் காண்க.

காட்சி 10.

நிர்வாணவியல்.

பளிங்கிய லறிந்தவனுக்கு, அதன்பால் மித்தையாகத் தோன்றும் கருமையின்கண் சத்தியபுத்தி ஏற்படாமை போல: அறிவிய லறிந்தவனுக்கு அதன்பால் விவர்த்தமாகத் தோன்றும் பந்தத்தின்கண் எதார்த்த பாவமுண்டாவதில்லை. எங்ஙனமெனின்: நித்தியம் பூரணம் வியாபகம் அத்துவிதம் என்பவாதிய இலக்கணங்களையுடைய அறிவுக் கன்னியமாக ஓர்பொருளும் ஓர்காலத்து மில்லாமையால்: அது, எதனுலும் எந்நாளும் பந்தப்படுவதில்லை. பந்தத்தோற்றமே அறிவின் இயற்கைக்கு விரோதம். இதுவே பரமார்த்தமாயினும், உண்மையினபோல் நம்பச் செய்யும் பந்தமுத்திகளின் கற்பனைத் திறங்களை இனி ஆராய்வோம்.

59. பந்த முத்தியும் சிந்தைத் தெளிவும்

இராகுவாற் பிடிபடலும் விடுபடலுமாய தன்மை யுடையதாக ஆதித்தனைப் பற்றிப் பாமரரிடை யிருந்துவரும் நம்பிக்கை, தொன்று தொட்டதென்ருலும்; விஞ்ஞான திருஷ்டிக்குக் கணப்போதில் அதன் பொய்ம்மை வெளியாய்விடல் போலவே; அஞ்ஞானத்தாற் பந்தமுறலும் மெய்ஞ்ஞானத்தால் முத்தியுறலுமாய இயற்கை யுடையதாகப் பரமான்மாவைப்பற்றி அஞ்ஞானிகளிடையிருந்துவரும் பிராந்தியும் அனுதியதே யென்ருலும்; பாரமார்த்திக திருஷ்டிக்குக் கணப்போதில் அதன் கற்பனை புலனய் விடுவதால்: பழுதையின்கண் இருளால்தோன்றிய பாம்பின் பிராந்தி ஒளியால் நிவிர்த்திக்கப் பெறின் மீண்டும் தோன்ருமை எங்ஙனமோ: அங்ஙனமே, பரமான்மாவின்கண் அஞ்ஞானத்தால் தோன்றிய தேகோக பிராந்தியும் மெய்ஞ்ஞானத்தால் நிவிர்த்திக்கப் பெறின் மீண்டும் தோன்றுவதில்லை. இவ்வாற்ருல்:

"தன்னிடத்தி லேதோன்றித் தன்னிடத்தி லேயிருந்து
தன்னிடத்தே கூடுஞ் சகத்தெல்லாம்—தன்னைவிட
வேறன் றெனக் காண்பா ரல்லாலிவ் வீடுபெற்ருர்
மாறென்று காண்பரோ மற்று"

"என்னைத் தவிர மற்றிங் கேதுமிலை யென்னுணைப்
பொன்னைத் தவிரவிலாப் பூடணம்போல்—பொன்னையுரு
வேருக்கிப் பேருரைத்த வேற்றுமைபோல் நம்மையுமவ்
வாருப் பகுத்துரைத்தோ மால்"

—சொருப சாரம்

என்னும் பெரியோர் அநுபவப்படி, அணிகளைக் காண்கையி லும் பொற்கொல்லன் பொன் திருஷ்டியை இழவாமை போன்று; உபாதிகளைக் காண்கையிலும் ஜீவன் முக்தன் ஆன்ம திருஷ்டியை இழந்து விடுவதில்லை. மகாகாயமே உபாதியால் கடாகாயமெனக் கூறப்படுதல் போல், பராகாயமே உபாதியால் அந்தராத்மாவென வியவ கரிக்கப் பெற்றாலும்; காரண மறைவுக்குப் பின்னும்—வெந்த வஸ்திரம் போல்—தோன்றிக்கொண்டிருக்கும் ஸ்தூலசூக்கு மோபாதிகளில் திருஷ்டியற்றவனாகி:

"சாயையென வாழ்குடும்பந் தன்னைச் சுமந்தாலும்
மாயையெனும் மேகம் மறைத்தாலும்—தூயவொளி
தானாய் விளங்கிச் சகச்சாட்சி யாயிருக்கும்
ஞானதித் தன்றானே நாம்"

"ஏதேது வந்தாலும் ஏதேது செய்தாலும்
ஏதேதி லின்புற் றிருந்தாலும்—ஏதேதும்
தானாகா வண்ணம் தனியே தெரிந்திருக்கும்
ஞானாகா ரந்தானே நாம்"

"அஞ்ஞான மெத்தா லழிந்ததோ ஆராயும்
விஞ்ஞான மெத்தால் விளைந்ததோ—மெய்ஞ்ஞானச்
செம்மையநு பூதித் தெளிவுபெற்ற தெங்ஙனே
எம்மையல்லா லேதுகண்டோம் யாம்."

—சொரூபசாரம்

என்பவாதிய ஆன்றோ ரநுபவப்படி: சொரூப சாட்சாட்சாத்கார சித்தியால்:* ஸ்திதப் பிரக்ஞனாகப் பிரகாசிக்கப் பெறுகிறான். இதுவே கோச நிவாரணமென்றும் ஜீவன் முத்தி யென்றும் கூறப்பெறுகிறது.

---

* "ஞானமுதித் ததன்பின்பைங் கோசங்கட்கு
நமைவேறாய் மிகவுமறிந் ததுவே போல
ஞானம்வரு முனங்கோச மவைக்கு வேறாய்
நாமிருந்தோ மென்பதுசித் தித்தலால்"

—இலட்சணவிருத்தி

'குடங்கொண்டு போங்காற் குடத்துளா காய
முடன்செல்வ தாக வுணர்ந்தும்—குடந்தானே
சென்றிடுவ தாகாயஞ் செல்வதிலை யான்மாவும்
நின்றிடுமே யாகாய நேர்"

—ஆன்மசாட்சாத்காரப்பிரகரணம்

60. பரி நிர்வாணமும் துரியா தீதமும்

"சுவரிடை வெளிபோல் யானென்
சொரூபசு பாவ மானேன்"

என்று: அதாவது, சுவற்றின் இருப்புக் கிடமான சுவராகாயத்திற்கு மகாகாயத்தோடு என்றுமே அபேதத்துவ முண்மையால் சுவற்றின் விழ்ச்சியை முன்னிட்டு: அது தனது இயற்கையாகிய பரிபூரண நிலையின்கண் எவ்வித மாற்றமுமின்றி: இருந்தபடியே அமைவது போல: தேகோபாதிக்கு இடமான ப்ரஜ்ஞானத்துக்கும் பிரஹ்மத்தோடு இயல்பாகவே ஐக்கியத்துவ முண்மையால் உபாதியின் நிவிர்த்தியை முன்னிட்டு: அது தனது எதார்த்த சொருபமாகிய அகண்ட அத்துவித நிலையின்கண் எவ்வித விசேஷ விளைவுமின்றி:

"அரியமெய்ஞ் ஞானத் தியால் அவித்தையா முடல்நீ ருகும்:
பெரியதூ லமுங்கா லத்தால் பிணமாகி விழுமந் நேரம்
உரியசூக் கும சரீரம் உலையிரும் புண்ட நீர்போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொருபத்தில் இறந்து போமே"

"கடமெனும் உபாதி போனால் ககனமொன் றானாற் போல
உடலெனும் உபாதி போன வுத்தரஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்"

—கைவல்லியம்

"படியில் வந்த பரம குரவனால்
தடைய றும்படி தன்னை யறிந்தவன்
உடல்வி டும்பொழு தொன்றொரு மண்மயக்
கடமு டைந்தவா காய நிகர்ப்பனால்"

—பிரபுலிங்கலீலை

"இங்குமிக வரிதான விதேக முத்தன்
இலக்கணமே நிதாக ! நினக் கியம்பக் கேளாய்:
தங்குநினை வனைத்தையுமே தவிர்ந்து சுத்த
தற்பரனே தானாகிச் சாந்த னாகித்
துங்கசுக கனமாகித் துச்ச ரூபத்
தொடர்பின்றி மகாமௌன நிலைபெற் றோனாய்
மங்கலிலா வுணர்வுருவாம் பிரம ரூப
மாத்திரமா யிருப்பவனே விதேக முத்தன்"

—ரிபுகீதை

என்னும் ஆன்றோர் துணிவின்படி, தானே தானாய இயற்கை நிலையில் கேவல ப்ரஹ்மமாகவே அமைவதாம். நிற்க:

"பத்தனு னென்னுமட்டே பந்தமுத்தி சிந்தனைகள்:
பத்தனு ரென்றுதன்னைப் பார்க்குங்கால்;—சித்தமாய்
நித்தமுத்தன் ருன்நிற்க நிற்காதேல் பந்தசிந்தை:
முத்திசிந்தை முன்நிற்கு மோ ?"

என்னும் மஹர்ஷியின் கேள்விப்படி, முத்திப் பிராப்தியே கற்பனைய தாயின்; அதை ஜீவன்முத்தி—விதேகமுத்தியென மேலும் துவிதப் படுத்தல்: கற்பனைக்குமேல் கற்பனையாகாவோ ? எனின்;

"வத்துநிலை யுரையாம லறியவல்ல சதுரருண்டோ ?"

"இருப்பா யிருந்திடப்பே ரின்பவெளிக் கோனமக்குக்
குருப்பார்வை யில்லாமற் கூடக் கிடைத்திடுமோ ?"

என்று, பெரும்பாலோர்க்குத் தோன்றும் சங்கேத நிவிர்த்தியின் பொருட்டு;

"கருதி மலத்தால் மலமறுக்குங்
காரு வென்ன மாயைதனைப்
பெருமா யையினுற் செறல் வேண்டும்"

"வம்பியல் மாயைதன்னை மாயையால் மாய்ப்பர்"

என்னும் சுருதியாநுசாரமாகவும்,

"பிணஞ்சுடு தடியென்ன வென்னைக் கொண்டே
பெரும்பற்றை யெல்லா மறச்சாடி
யணைந்தவென் னையுமப் படியீ றில்போ
தத்தில்விட் டநுபோகத் திருந்தானே"

"பொய்யாக்கப் பொய்யைப் பொருளைப் பொருளாக்க
மெய்யாக் குருவொருத்தன் வேண்டிற்றே"

என்னும் அநுபவாநுசாரமாகவும், அஞ்ஞானமாய அணுமாயையை மெய்ஞ்ஞானமாய மகாமாயையால் மாற்றிப் பக்தர்களை உய்விப்பது: பரமகாருண்ய சொரூபியாகிய பரமாசிரியரது அநுக்கிரக மரபாகும்.

இவ்வாற்ருல், காரணதேக நிவிர்த்தியால் ஜீவன்முக்தி சித்திக்கப் பெற்ற கூடஸ்தன்; ஸ்தூலசூக்கும தேக நிவிர்த்தியால் அப்பிரதீதியிற் பிரம்மமாக வொளிர்தலே: மஹா நிர்வாணமாமென்க.

"குடமுடை யுங்கால் குடத்துளவா காயம்
உடன்மகா காயமோ டொன்றும்—சடமாம்
உடலக லுங்கால் உடலுளவான் மாவும்
உடன்பரமான் மாவா யுறும்"

—ஆன்மசாட்சாத்காரப் பிரகரணம்

வாழ்த்து.

ஆலடியான் கைகாட் டருள்வழியு மத்துவிதக்
காலடியான் வாய்சொல் கதிமுறையும்—ஞாலந்
திருச்சுழியான் கண்ணுணர்த்துஞ் செந்நெறியும் வாழி
கருச்சுழிசா ராதெம்மைக் காத்து.

வாழ்க மறைஞானம் மன்னுகசன் மார்க்க நெறி
ஆழ்க மறங்க ளறவழியால்—சூழ்கவே
மோன சுகவாரி மூவுலகுஞ் சீரமண
ஞான தரிசனத்தால் நன்கு.

நூல் நிறைவு மங்கலம்.

பாவனராய பக்தரைக் கருணையா லாட்கொள்ளத் திருவுளங் கொண்டு முன்னாள் தோன்றியருளிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும் ஸ்ரீ தத்தாத்ரேயரையும் போன்று: பரப்பிரஹ்மத்தின் சகளவடிவாய் இந்நாளவதரித்து எளியோமைப் பவக்கடலினின்று கரையேற்றி யருளிய பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷியின் திவ்விய சரணாரவிந்தங்கள் அநவரதம் வாழி!

பரவாக்கே திருவாக்காகி மஹர்ஷியால் அருட்பிரசாதமாக அருளப்பெற்ற சற்போதனைகளின் தொகுதியாய 'ஸ்ரீ ரமண தரிசனமும்,' இதனைப் பரிவோடு போற்றிப் பரமபதத்திற்குப் பாத்திரராகும் பவித்திரர்களும், பாருலகின்கண் பல்லாண்டு வாழி! வாழி!! வாழி!!!

யானேதோ னோற்றதுதொல் லெங்கைபிரா னேரமணக்
கோனுய்வந் தேனீயூன் கூடிதுவோ நின்னியல்பு
நானுனென் றெளிருண்மை ஞானமன்றோ நாடுகென
வூனுகா துயவென்மெய் யுரைத்தருள்வான் நாயேற்கே

நானுரென் றனையிதய நாடத் தலைப்படினுங்
கூனுனென் பொய்யறுமெய் யுணர்வெய்து மென்றருளால்
மோனநுபூதிக்கே முயல்வித்தென் முனைவறமெய்
தானுவெற் செய்ரமணன் றயவுக்கென் னாற்றுவதே.

அருணை ரமண னருட்கழல் வாழ்க.

சுபம்.